# சிறைப்பட்டிருத்தல்



# ஞானம்

## பரிசுச் சிறுகதைகள் 2006

தொகுப்பாசிரியர்: தி. ஞானசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப்பட்டிருத்தல்

கலாபூஷணம் புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச்
சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற

**சிறுகதைகள்**

தொகுப்பாசிரியர்

## தி. ஞானசேகரன்

ஞானம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப்பட்டிருத்தல்

(சிறுகதைத் தொகுதி)

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | :- | தி. ஞானசேகரன் |
| வெளியீடு | :- | 'ஞானம்' பதிப்பகம்<br>3-B, 46ஆவது ஒழுங்கை,<br>கொழும்பு - 06,<br>இலங்கை |
| தொலைபேசி | :- | 0094 11 2586013 |
| முதற் பதிப்பு | :- | டிசம்பர் 2006 |
| உரிமை | :- | ஆசிரியர், 'ஞானம்' சஞ்சிகை |
| அச்சுப்பதிவு | :- | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் |
| விலை | :- | ரூபா 175/= |

ISBN 955-8354-13-9

# Siraippaddiruthal

(short stories)

| | | |
|---|---|---|
| Compiled by | :- | T. Gnanasekaran |
| Published by | :- | Gnanam Pathippakam<br>3-B, 46th lane, Colombo - 06.<br>Sri Lanka. |
| Telephone | :- | 0094 11 2586013 |
| Copyrights | :- | Editor, Gnanam |
| Printed by | :- | Unie Arts(Pvt) Ltd., |
| Price | :- | 175/- |

ISBN 955-8354-13-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்துச் சிறுகதைத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் அமரர் புலோலியூர் க. சதாசிவம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிறுகதைப் போட்டியை அன்னாரது குடும்பத்தினர் தொடர்ந்து நடத்திவருகின்றனர். அவ்வகையில் நான்காவது வருடமாக நடத்தப்பட்ட போட்டியில் பரிசுபெற்ற சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும்.

புதிய படைப்பாளிகளை உருவாக்க வேண்டும், வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எமது நோக்கம் வருடாவருடம் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டிகளின் மூலமும் நிறைவேறிவருவது மகிழ்ச்சிக்குரியது.

இவ்வருடம் நடத்தப்பட்ட போட்டியில் முதற்பரிசினை வென்ற கார்த்திகா பாலசுந்தரம் உட்பட அறுவர் புதிய தலைமுறைப் படைப்பாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது. மூத்த தலைமுறைப் படைப்பாளிகளும் இப்போட்டியில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இன்று சிறுகதை இலக்கியம் பெருவளர்ச்சி கண்டுள்ளது. வித்தியாச மான கருக்கள், கதையாடல்கள், கட்டமைப்புகள், கதைக்கோலங்கள் எனப் பலவகையிலும் இன்றைய சிறுகதைகள் விரிவும் ஆழமும் பெற்று வருகின்றன.

இந்த வளர்ச்சிப் போக்குகளைப் புரிந்துகொண்டு புதியவர்கள் பலர் இன்று சிறந்த சிறுகதைகளைப் படைத்துவருகின்றனர். இச்சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளிலும் இவ்வளர்ச்சிப் போக்குகளின் சில கூறுகளை வாசகர்கள் தரிசிக்கலாம்.

இன்றைய இலக்கியச் செல்நெறியில் போர்க்கால இலக்கியங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. போரினால் ஏற்பட்ட அவலங்கள், உயிரிழப்புகள், இடப்பெயர்வுகள், பொருள் இழப்புகள், பேரினவாத ஆக்கிர மிப்புகள், மன உளைச்சல்கள், மண்ணை இழந்த மக்களின் தவிப்புகள் எனப் பல்வேறுவிதமான விடயங்களையும் கருப்பொருள்களாகக் கொண்டு இன்றைய இலக்கியவாதிகள் பலர் தமது ஆக்கங்களைப் படைத்து வருகின்றனர்.

இத்தொகுப்பில் உள்ள கதைகளில் முதல் மூன்று பரிசுகளையும் வென்ற கதைகள் உட்பட ஆறுகதைகள் போர்க்காலக் கதைகளாக, போரினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் அவலங்களைச் சித்தரிக்கும் கதைகளாக அமைந்துள்ளன. இவற்றுள் சிலகதைகள் ஈழத்தின் உன்னதமான சிறுகதைகள் என்ற தகைமை உடையன எனத் திடமாகக் கூறலாம்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த எழுத்தாளர்களும் புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்களும் இப்போட்டியில் பங்குபற்றிச் சிறப்பித்துள்ளார்கள்.

போட்டியில் பங்குபற்றிய எழுத்தாளர்களுக்கும் பரிசுக்கதைகளைத் தேர்ந்தெடுத்த நடுவர்களுக்கும் இத்தொகுப்பினைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினருக்கும் ஞானம் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

3-B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு-06, இலங்கை.
தொ.பே. 0094 11 2586013

தி. ஞானசேகரன்
ஞானம் கலை இலக்கியப் பண்ணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | பக்கம் |
|---|---|
| 1. சிறைப்பட்டிருத்தல் | 01 |
| 2. தேசம் விடியவில்லை | 04 |
| 3. மீள்தகவு | 17 |
| 4. பிந்துனுவெவ | 21 |
| 5. இருப்பும் செப்பும் | 24 |
| 6. புதிய வருகை | 33 |
| 7. பக்கி | 42 |
| 8. புதை மணல் | 46 |
| 9. பலாமரம் | 53 |
| 10. நிகழ்வுகளும் மீளும் கிராமமும் நிகழ்காலமும் | 58 |
| 11. மலினங்கள் | 64 |
| 12. என்று தணியும் | 69 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைப்பட்டிருத்தல் 1

## கார்த்திகா பாலசுந்தரம்



யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கார்த்திகா பாலசுந்தரம் 1977ல் பிறந்தவர். கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க நூலகத்தில் நூலகராகப் பணிபுரியும் இவர், நூலக விஞ்ஞானமாணி தரம்-1 தகைமை யுடையவர். சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் கார்த்திகா, விபவி - இளம் எழுத்தாளர்களுக்கான படைப்பாற்றல் போட்டியில் (2004) முதற்பரிசு, நமது ஈழநாடு - இரண்டாவது ஆண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டியில் (2004) முதற்பரிசு பெற்றுள்ளார். காலச்சுவடு சஞ்சிகையில் இவரது கட்டுரை வெளிவந்துள்ளது.

முகவரி :- 'மூப்பியா வளவு', விக்னேஸ்வரக் கல்லூரி வீதி, கரவெட்டி மேற்கு.

**இ**ரவில் ஒரு சின்னச் சத்தங் கேட்டாலும் நெஞ்சு விறைக்கத் தொடங்கியிடும். இப்ப இருக்கிற நிலமையில பயப்பிடாமலுக்கு இருக்கேலுமே? என்னவும் நடக்கலாம். ஆர் கேக்கிறது? ஒவ்வொரு கட்டத்திலயும் தப்பி வந்து கடேசியா ஏதோவொரு கட்டத்துக்குள்ள சிக்கி சீரழிஞ்சிடுவனோ? ஆருக்குத் தெரியும். எந்தப்பக்கந் திரும்பினாலும் தடுப்புக்கள். அந்தத் தடுப்புகளுக்குள்ளாலதான் திரிய விதிக்கப்பட்டவளாக நான்! எவனின்ரை பார்வையும் பிடிச்சு விழுங்கிற மாதிரித்தான் இருக்கு. அம்மா கொஞ்சம் பெருமைப்பட்டுத்தான் சொல்லுவா 'எண்பத்தேழாமாண்டில சனமெல்லாம் இடம் பெயர நானும் பிள்ளையும் தனிச்சிருந்தனாங்கள். அவங்களால எந்தக் கரைச்சலுமில்லை. அவங்கள் தங்கடைபாடு நாங்கள் எங்கடைபாடு'. அம்மா இஞ்சைவாணை! அப்ப உன்ர பிள்ளைக்கென்ன வயது? ஆறு வயதும் முடியேல்ல. சின்னப்பெட்டை. பெரிசாத் தோற்றமில்லை. இப்ப உன்ர பிள்ளைக்கு என்ன வயது? இருபத்தைஞ்சு நடக்குது. பாக்கிற சனமெல்லாம் உன்ரை மகள் ஒரு வாகனம் மாதிரி வந்திட்டாள் என்கினம். மற்றது அப்ப இருந்த அவங்கள் மாதிரியில்லை இப்ப இருக்கிற இவங்கள். பாக்கிற பார்வையிலயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சு திண்டுடுவாங்கள் போல இருக்கு. வெயிலேறத் தொடங்கினோன்ன பூவரசுகளில இருந்து இறங்கி ஊர்ந்து திரியிற மசுக்குட்டிகள் கணக்காக இப்ப எங்க பாத்தாலும் இவங்கள்தான். இவங்களின்ரை பார்வையில இருந்து தப்பேலுமே?!... 'ஒரு நாளைக்கு முறையா அகப்பிடு. அப்ப பாரன் என்ன நடக்குமெண்டு' எண்டு சொல்லுறமாதிரியிருக்கு இவங்களின்ரை பார்வையள். இவங்களைக் கடந்து சைக்கிளில போகேக்க நெஞ்சு பக் பக்கெண்டிருக்கும். ஏதாவது காது கூசிற மாதிரி என்ர அவயவங்களைக் குறிச்சுக் கொச்சைத்தனமாச் சொல்லுறதையே வழக்கமாக வைச்சிருக்கிறாங்கள். நான் செவிடுமாதிரி குனிஞ்ச தலை நிமிராமல் போகவேண்டியதுதான். இதைத் தவிர பாதுகாப்பான வேறை வழியேதுமிருக்கோ?! அப்பா, அண்ணா எண்டு ஆரிட்டையும் சொல்லேலுமே? சொன்னாலும் அவையென்ன செய்யிறது? இவ்ங்கடை கையில படைக்கலங் களிருக்கு. எதுகும் செய்வாங்கள். அதால என்ன நடந்தாலும் பேசாமல் பறையாமல் குனிஞ்ச தலை நிமிராமல் திரிய வேண்டியதுதான். கெம்பஸ் பெட்டையள் எண்டால் இவங்கள் வித்தியாசமாகத் தான் பாப்பாங்கள், ஏதோ நாங்கள் வெடி பொருட்களை கொண்டுதிரியிறம் என்கிறமாதிரி. லெக்சர்சுக்கு றூமிலயிருந்து வெளிக்கிட்டு தனியப்போறத நினைச்சால் பயமாயிருக்கு. நானும் சசியும் இருக்கிற றூமில இருந்து கூப்பிடு தூரந்தான் இவங்கடை முகாமிருக்கு. எப்பிடியும் அதைத் தாண்டித்தான் போக வேண்யிருக்கு. உட்பாதையளெண்டு எதுகுமில்ல. நானும் சசியும் சேர்ந்துதான் லெக்சர்சுக்குப் போறம். நாங்கள் போகேக்க இவங்கள் காத்து நிண்டு சீக்காயடிப்பாங்கள். அல்லாட்டி ஏதும் காது கூசுகிறமாதிரி நொட்டை சொல்லு றாங்கள். நாங்கள் குனிஞ்ச தலை நிமிராமல்தான் போய்வாறம். சசி றூமில நிக்காத நாளில நான் லெக்சர்சுக்கு போகன். ஏதோ நடக்கக்கூடாதது நடக்கப்போகுதெண்டு உள் மனம் சொல்லுது. இப்ப பலாலி றோட்டால சைக்கிள்ள போகேக்க ஒரு மயானத்துக்குள்ளால போற மாதிரிக்கிடக்கு. முந்தியெண்டா றோட் கலகலப்பாயிருக்கும் எத்தினை வாகனம் போய்வரும். புதிசு புதிசாய் கடையள் திறந்து இரவு பகலாய் ஓயாமல் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும். இப்ப பாத்தால் எல்லாக் கடையளும் அநேகமாப் பூட்டியிருக்கு. ஒண்டு ரண்டு சைக்கிள் திருத்திற கடையளத் தவிர. இவங்கட வாகனங்கள்தான் வலு வேகமாய் போய் வருகுது. இப்ப கொஞ்ச நாளா ஒரு வழமை என்னெண்டா இவங்கட வாகனத் தொடரணி போய்வாறதுக்காக றோட்டில சனங்களை மறிச்சு வைக்கிறது. மத்தியானம் பன்ரண்டு மணிக்கும் பின்னேரம் நாலுமணிக்கும் றோட்டில அடிக்கொருதனா நிக்கறவங்களில ஒருத்தன் விசில் ஊதுவான். அதுக்குப் பிறகு ஆரும் அசையேலாது. நிண்ட இடத்தில நிக்கவேண்டியதுதான். சில நேரம் ஒருமணித்தியாலத்துக்குமேல நிக்க வேண்டிவரும். இவங்கட வாகனத் தொடரணி போய் முடிஞ்சாப்போலதான் சனம் போகலாம். இதால நானும் சசியும் கன லெக்சேர்ஸைத் தவறிவிட்டிருப்பம். என்ன செய்யிறது? எது நடந்தாலும் பேசாமலிருக்க வேண்டியதுதான். லெக்சேர்சும் முந்தின மாதிரி கலகலப்பாயில்லை. ஏதோ செத்த வீட்டுக்குத் துக்கம் விசாரிக்கப் போய் வாற மாதிரியிருக்கு. லெக்சரர்மார் தொடக்கம் பொடியள், பெட்டையள் எண்டு எல்லாரின்ரை முகங்களும் இறுகிப்போய் ஒருத்தரோட ஒருத்தர் கதைக்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயந்து..... இப்பிடியே காலங்கழியுது. சிலநேரம் சசி வடமராட்சியில இருக்கிற தன்ர வீட்டுக்குப் போகிடுவாள். றூமில நான்தான் தனிய இருக்க வேண்டிவரும். வீட்டுக்கார அன்ரி இருக்கிறாதான். அவ வேளைக்கு லைற்றை நூத்திட்டு படுத்திடுவா. படுக்கிறதுக்கு முதல் ஒருக்கா றூமை எட்டிப்பார்த்து, "பிள்ளை கெதியா லைற் 'ஓவ்' பண்ணிப்போட்டுப் படும். படிக்கிறதெண்டா காலமை எழும்பிப்படியும். நான் படுக்கப்போறன்" எண்டிட்டுப் போகிடுவா. மனுசி படுத்ததுதான் தாமதம் குறட்டை விடத் தொடங்கியிடும். அன்ரிக்கென்ன கவலை. வயதும் அறுவதைத் தாண்டியிடுத்து. பிள்ளையள் மூண்டும் வெளிநாட்டில. புருஷன்காரன்ர பென்சனும் கிடைக்குது. அதுக்குள்ளை எங்கடை வாடகைக் காசும். அவ படுத்தோண்ண குறட்டை விடுகிறதுக்கு என்னகுறை? இது நான் தனிய றூமுக்குள்ள முடங்கினபடியே யன்னலையும் கதவையும் பூட்டியிட்டு இருள் விழுங்கின அறைக்குள்ள புழுங்கி அவிய கண்ணோடு கண் மூடேலாமல் பயந்து செத்தொண்டிருப்பன். வெளியில ஆரோ கனபேர் நடக்கிறமாதியிருக்கும். நாயள் வலு மோசமாக் குலைக்கும். முத்தத்து பிலா உதிர்க்கிற சருகுகள் நொருங்குகிற மாதிரியும் சத்தம் கேக்கும். இண்டைக்கு நான் துலையப்போறன் எண்டு நினைப்பன். என்ன நடந்தாலும் ஆருக்கும் தெரியாது. கதவு தட்டுற சத்தம் ஏதும் கேக்குதோ எண்டு காதைத் தீட்டிக்கொண்டு நெஞ்சுக்குள் தண்ணியில்லாமல் உடல் விறைக்க அங்கால இங்கால அசையவும் பயந்து மல்லாந்து கிடப்பன். இரவு எனக்கு பாதகமாக நீண்டுகொண்டிருக்கும். வெளியில கேக்கிற சின்னச்சத்தமும் பீதியைக் கிளப்பும். பிலாமரத்தால ஏறி ஓட்டில நடந்து திரிய பூனை. ரீய்ய்ய.... எண்ட சத்தத்தோட தொடர்ந்திரைய நிலக் கறையான். எங்கையோ இருந்து தேக்கம் பழங்களைக் கவ்விக் கொணந்து ஓட்டுக்குமேல விழுத்தியிட்டு படக் படக்கெண்டு செட்டையடிச்சொண்டு போற வவ்வால். கிடக்கிறதுக்கிதமா முத்தத்து மண்ணை வறுகிற அன்ரியின்ர செல்லப்பிராணி 'ரொமி'நாய். எல்லாம் எளிய மூதேசிகள். திட்டம் போட்டுத்தாக்கிற விரோதியளப் போல இருள் விழுங்கியிருக்கிற இரவின்ர கனத்தைக் கூட்டி என்னை வெருட்டிச் சாக்காட்டிக் கொண்டிருக்குங்கள். ஒரு கோழித்தூக்கம் மாதிரித்தான் என்ர நித்திரை. இடையில கெட்ட கனாக்களும் வரும். கண் முழிச்சா நான் ஆஸ்பத்திரிப் பிரேத அறைக்குள் கிடக்கிற மாதிரியிருக்கும். நெஞ்சு வேகமா அடிச்சுக் கொண்டிருக்கும். போதாக்குறைக்கு அன்ரி விடுற குறட்டைச் சத்தம் இன்னும் பயத்தைக் கிளப்பும். றோட்டில வாகனங்கள் இரையிற சத்தம் கேக்கும். என்ர உடம்பு தன்பாட்டில விறைக்கத் தொடங்கியிடும். பிறகு பாத்தா வாகனங்கள் வீட்டைநோக்கி வாற மாதிரியிருக்கும். இனியென்ன அவங்கள் வந்து கதவைத் தட்டப்போறாங்கள். ஐசியைப்பாத்திட்டு 'நீ வன்னியில இருந்தா வந்தனி? உன்னில எங்களுக்கு சந்தேகம் வலுக்குது. உன்னை விசாரிக்கோணும். கெதியா வா!' என்பாங்கள். போகவேண்டியதுதான். நடந்தது ஆருக்குத் தெரியும். நான் துலைஞ்சு போகிடுவன். பிறகு பேப்பரில நியூஸ் வரும்-என்னைக் காணேல்லையெண்டு. வரிக்கு வரி கடிதத்தில பிள்ளை கவனம்! பிள்ளை கவனம் எண்டு எழுதுற அம்மா தவிச்சுப்போவா. எதுக்கும் அன்ரியை எழுப்புவோமா? அப்பிடி நினைச்சாலும் தொண்டைக்குள்ளால சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்கிடாது. இப்பிடியே கிடந்து துலைய வேண்டியதுதான். எடியே! சசி! உனக்கினி வைதேகி எண்டொரு சிநேகிதி இல்லையடி. அவள் துலையப போறாள். நடக்கப்போற அசம்பாவிதம் உனக்குத் தெரியாது. நீ உன்ரை அம்மாவோட நிம்மதியா உறங்கிக் கொண்டிருக்காய்! எனக்கு முடிவு நெருங்கிக்கொண்டிருக்கு....

நான் தனிச்சுப்போய் ஒடுங்குகிற இரவுகளில் இப்பிடித்தான் எப்பவும் தவிர்க்கேலாமல் செத்துக்கொண்டிருக்கிறன். பகல் தொடங்கினால் எந்தக் கணத்தில என்ன நடக்குமோ? எண்டு மனம் தவிக்கத் தொடங்கியிடும். எல்லாம் உலரத் தொடங்கியிடும். வெக்கை தோலைக் கருக்கத் தொடங்கும். ஒரு சொட்டு மழை வந்து இந்த இறுக்கத்தைக் குலைக்காதா? எண்டு மனம் ஏங்கும். மழை வாறதுக்கான எந்த அறிகுறியும் தென்படாமலிருக்கு. ஹர்த்தால், கடையடைப்பு நாள்களில பகல் முழுக்க றூமுக்குள்ளதான் ஒடுங்க வேண்டியிருக்கும். உடம்பெல்லாம் வேர்த்தொழுக வெறுந்தரையில மல்லாந்து கிடக்க வேண்டியதுதான். எதும் நோட்சை எடுத்துப் படிக்கிறதும் ஏலாது. மனதில எப்பிடிப் பதியும்? கண்கள் எழுத்துகளில தாவிக்கொண்டிருக்க மனதில பயந்தருகிற காட்சியள் ஓடிக்கொண்டிருக்கும். முகத்தைக் கறுப்புத் துணியால மறைச்சுக்கட்டிக்கொண்டு நிக்கிற அவங்கட உருவங்கள் அடிக்கடி வரும். வெறிபிடிச்சு அலையிற நாயளாக அவங்கள் சனத்தை வெட்டியும், சுட்டும் கருக்கிக்கொண்டிருப்பாங்கள். சனங்கள் எல்லாம் அவங்களால அடிச்சு நொருக்கப் படவும், சுட்டுக் கொல்லப்படவும் பிறந்ததுகள் மாதிரி தலையைக் குனிஞ்சு கொண்டு நிக்குங்கள்.

கொஞ்ச நாளைக்கு முன்னம் மதியந் திரும்பினாப்போல நானும் சசியும் லெக்சர்ஸ் முடிஞ்சு வாறம். அண்டைக்கு ஒரு அசம்பாவிதம் நடந்து அவங்களில இரண்டு பேர் செத்திட்டாங்கள். பலாலி றோட்டால வந்த ஒரு பஸ்சை மறிச்சு இளந்தாரியள இறக்கி கேபிள் வயறுகளாலையும், துவக்குச் சோங்குகளாலையும் நாலைஞ்சு பேர் வெறிபிடிச்ச நாயள் மாதிரி மாறி மாறி அடிச்சுத் துவைச்சுக்கொண்டிருந்தாங்கள். அப்பத்தான் நான் முதல் முதலா அவங்கள் அடிச்சுத் துவைக்கிறதைப் பாத்திருக்கிறன். இப்பிடித்தான் என்னையும் சசியையும் போல பெட்டையள் தனியப்போய் அகப்பட்டால் சட்டையளக் கீலங் கீலமாக் கிழிச்சு வாயால சொல்லேலாத வேலையள் எல்லாம் செய்வாங்கள் எண்டு நினைச்சோண்ண எனக்கெண்டால் தலை விறைக்கத் தொடங்கியிடுத்து. ஒருமாதிரி தப்பித் தவறி றூமுக்கு வந்து சேந்தாப் போலயும் எனக்கு உடம்பு நடுங்கிக் கொண்டிருந்துது. அண்டைக்கு இராமுழுக்க அவங்களட்ட நானும் சசியும் இன்னும் சில பெட்டையளும் தனிய அகப்படுறதும் அவங்கள் எங்களைக் குழறக் குழற இழுத்தொண்டு போய் சட்டயளக் கிழிச்செறிஞ்சிட்டு சின்னாபின்னப் படுத்திறதுமா ஏதோ கனவெல்லாம் வந்து நான் படுக்கையில குழறியிட்டன். அடுத்தநாள் 'சசி என்னடி இரவிரவாக் கத்திக்கொண்டிருந்தாய்' எண்டு விழுந்து விழுந்து சிரிச்சாள். எனக்கு உண்மையில கோபந்தான் வந்தது. 'பேய்ச்சி! இன்னும் நிலமை விளங்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லங்கொட்டுறாள்' எண்டு. இவளமாதிரித்தான் இங்கை கன பெட்டையளுக்கு நிலமை விளங்கிறதில்ல. நாளுக்குநாள் நிலமை மோசமாகிக் கொண்டு வருது. இனிமேல் பெண்ணாப் பிறந்தனாங்கள் என்ன செய்யப்போறம்? எண்ட அச்சத்துக்குரிய பெரிய கேள்வியொண்டிருக்கு. ஆரிட்டையும் இந்தக் கேள்விக்கு விடையில்லை. திறந்த வெளியில திரியிற செம்மறியாடுகள் மாதிரித்தான் எங்கடை நிலை. ஆரும் குளிருக்கு போர்க்க எங்கடை மயிரைக் கத்தரிக்கலாம் அல்லாட்டில் இறைச்சிக்காக எங்களைக் கொல்லலாம். நாங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமலுக்குத் தலையைக் குனிஞ்சு கொண்டு திரிவம். அவ்வளவுதான். நான் அடிக்கடி நினைப்பன் இந்த கம்பஸ் படிப்பை விட்டுட்டு ஊரில போய் இருப்பமெண்டு. பிறகு மூண்டு வருசமாக் கனக்கக் காசு செலவழிச்சாச்சு. இன்னும் ஒரு வருசங்கிடக்கு. பல்லைக்கடிச்சொண்டு பேசாமல் இருப்பம் எண்ட முடிவுக்குத்தான் வாறன். என்ன செய்யிறது? எங்கை சண்டை தொடங்கினாலும் எங்களைப்போல பொம்பிளையளுக்குத்தான் ஆபத்துக் காத்திருக்கும். ஆக்கிரமிக்கிறவங்களின்ரை மிருகத்தனமாக உணர்ச்சிகளுக்கு இரையாகிறதெல்லாம் நாங்கள்தான். அவங்கள் மாமிசத்தை நுகர்ந்த நாயள் கணக்காக அலைஞ்சு திரிவாங்கள். எப்ப சந்தர்ப்பம் வாய்க்குதோ அப்ப கடிச்சுக் குதறிப் போட்டுப் போவாங்கள். பேப்பருகளில பெரிசாச் செய்தியள் வரும். பலர் கண்டனம் தெரிவிப்பினம். மருத்துவ அறிக்கையைப் பலரும் ஆவலோட எதிர்பார்த்திருப் பினம். பாலுறுப்புகளில நிகக்கீறலும், கடிகாயமும் அவதானிக்கப்பட்டிருக்கிறதா அறிக்கை வெளியாகும். வழக்குப்பதிவு நடந்து விசாரணையள் தொடங்கும். சாட்சியங்கள் பொதுவாக இருக்காது. 'சம்பவத்துக்கு காரணமானவர்கள் யாராக இருந்தாலும் கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்தி தண்டனை வழங்கப்படும்' எண்டொரு கூற்று வெளியாகும். கொஞ்ச நாளைக்கு எந்த அசம்பாவிதமும் நடக்காது. பிறகு அவங்கள் பழையபடி தங்கடை வேலையளைத் தொடங்கியிருப்பாங்கள். காலப்போக்கில அறிக்கை வெளியிட விரும்புற சிலர் எழுதுவினம் 'ஆக்கிரமிப்பு பிரதேசங்களில இப்படி நடக்கத்தான் செய்யும். கொங்கோவைப் பாருங்கோ, வியட்நாமைப் பாருங்கோ, ஈராக்கைப் பாருங்கோ இதெல்லாம் தவிர்க்கேலாது' எண்டு கனக்க ஆதாரங்கள் காட்டி விளக்குவினம். இதெல்லாத்தையும் நாங்கள் வாசிச்சுக் கொண்டு செம்மறியாடுகளாகத் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு திரியவேண்டியதுதான். என்னைப்போல பெட்டையளில அக்கறையுள்ள ஒரு கடவுள் இருந்தால் அவர் கனவில யெண்டாலும் வரோணும். வந்தால் நான் கேட்கிற வரம் இதுதான். 'எங்களுக்கு மேல உண்மையில அக்கறையுள்ள கடவுளா நீர் இருந்தால் எங்களை உடன கிழவியாக்கிவிடும். இல்லாட்டில் பால்குடிக்குழந்தையள் ஆக்கிவிடும். உம்மில நாங்கள் விசுவாசமானவளுகளாக இருப்பம். இதுகும் முடியாட்டில் எங்களைக் கல்லாக்கிவிடும். அல்லது சாக்காட்டி விடும். உமக்கு புண்ணியங் கிடைக்கும். நாங்கள் நிம்மதியில்லாமல் எவ்வளவு காலத்துக்கு செத்துக் கொண்டிருக்கிறது? கடவுளே கருணை காட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசம் விடியவில்லை

ஓ.கே. குணநாதன்

2



மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த ஓ.கே. குணநாதன் 1960ல் பிறந்தவர். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் M.A., M.phil கல்வித் தகைமையுள்ளவர். சிறுகதை, கட்டுரை, நாவல், சிறுவர் இலக்கியம், நகைச்சுவை ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். இதுவரை இவரது 20 நூல்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள் வீரஆனந்தன் (சிறுவர் நாவல்) சுதந்திரம் (சிறுவர் நாவல் ) ஆகியவை வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றவை. மாயக்கிழவி (சிறுவர் நாவல்) யாழ் இலக்கியவட்ட விருது பெற்றது. நரியின் தந்திரம் (சிறுவர் கதைகள்) வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய விருதும், யாழ் இலக்கிய விருதும் பெற்றது. ஒரு துளி (நாவல்) இந்தியாவின் தேவியின் கண்மணி சஞ்சிகைப் பரிசு பெற்றது. தர்மத்தின் வெற்றி (சிறுவர் நாவல்) தேசிய இளைஞர் சேவைகள்மன்ற சிறுவர் இலக்கிய விருது பெற்றது. குட்டி அணில் (சிறுவர் கதை) ஆரம்பக்கல்வி வாசிப்புக் கல்வி நூலானது. வெள்ளைக் குதிரை (சிறுவர் நாவல்), மாவீரன் புள்ளிமான் (சிறுவர் நாவல்) ஆகியவை இலங்கை அரச தேசிய சாகித்திய விருதும், வடக்கு கிழக்கு மாகாண சாகித்திய விருதும் பெற்றவை.

முகவரி :- 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு.

ஊரடங்குச் சட்டம் போல எங்கும் அமைதி. சன நடமாட்டமில்லை, ஆள் அரவமில்லை. பொழுதுகூட இன்னும் முற்றாக விடியவில்லை, அரை குறையாக...... புலர்ந்தது பாதி... புலராதது பாதியாக..... இருட்டு தொக்கி நிற்கிறது.

அவன் அவசரமாகச் செல்கின்றான். நடையில் வேகம்.

திரும்பிப் பார்க்கிறான். ஒரு வாகனம் கூட வரவில்லை, எரிச்சலுடன் கால்கள் வேகமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்குளத்திலிருந்து புறப்பட்டவன், சில நிமிடங்களில் ஒரு மைல் நடந்து இறம்பைக்குளத்திற்கு வந்துவிட்டான்.

இன்னும் தெரு வெறிச்சோடிக் கிடக்கிறது.

மாசி மாதத்து பனிகூட மெல்லியதாகக் கொட்டுவது தெரு விளக் கொளியில் புகைப்படலமாகத் தெரிகிறது. பனிக்குளிர் ஊசி குத்துவது போலக் குத்துகிறது.

பனிக் குளிருக்கு நடுங்கிய நாய்கள் சூட்டுக்காக தெருவில் சுருண்டு கிடக்கின்றன.

அவனுடைய சப்பாத்தோசை கேட்டதும், வேண்டா வெறுப்பாக மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்துவிட்டு ஒரு நாய் மீண்டும் சுருண்டு கொள்கிறது.

இறம்பைக்குளம் சந்திக்கு வந்துவிட்டான்.

ஆள் அரவம் கேட்ட சென்றிக்கு நின்ற ஆமிக்காரன் புலியென்று நினைத்து பங்கருக்குள்ளிருந்து எட்டிப் பார்த்துவிட்டு, ஆமை போல தலையை இழுத்துக் கொள்கின்றான்.

சமாதானச் சூழல்.

இல்லையேல்... அவனைக் கூப்பிட்டு விசாரித்து.... பேக்கைப் பார்த்து... ஐடின்டிக்காட்டைப் பார்த்து.... அவன் போன மாதிரித்தான் இருக்கும்.

தூணில் தொங்கிய லைற் வெளிச்சத்தில் கைமணிக்கூட்டைப் பார்க்கிறான்.

மணி.... ஆறுக்குப் பத்து.

இன்னும் பத்து நிமிடங்களில் பஸ் புறப்பட்டுவிடும்! எப்படியாவது பஸ்ஸைப் பிடித்துவிட வேண்டும்!

வேகமாக நடந்தான். நடந்தான் என்பதனை விட ஓடினான் என்று சொல்ல வேண்டும். அவ்வளவு வேகம்!

பஸ் ஸ்டாண்டுக்கு வந்துவிட்டான்!

தூரத்தில் வரும் பொழுதே பஸ்ஸைக் கண்கள் துழாவுகின்றன.

பஸ் இன்னும் போகவில்லை. மட்டக்களப்புப் பெயர்ப் பலகையுடன் கிடக்கிறது.

பஸ்ஸைக் கண்டவுடன்தான் நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

பஸ்ஸினுள் ஏறினான். இன்று வியாழக்கிழமையாதலாலோ என்னவோ சனம் மிகக் குறைவு. பல ஆசங்கள் வெறுமையாகவே கிடந்தன. பஸ் புறப்படத் தயாரானது......

"சேர்..." பின்னால் இருந்து ஒரு குரல்.

பழக்கப்பட்ட குரல்!

திரும்பினான். கண்டக்டர் பிலிப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகுமிடத்தைச் சொல்லாமலே மட்டக்களப்பிற்கான ரிக்கட்டைக் கொடுக்கிறான். பழக்கதோசம்....!

என்றைக்குப் பிறந்த மட்டக்களப்பு மண்ணைத் தொலைத்துவிட்டு வவுனியா மண்ணில் ஓட்டிக் கொண்டானோ.... அன்று தொடங்கிய பயணம் இன்று வரை....

அடிக்கடி பயணித்ததால் அந்த "ரைட்டானிக்" பஸ்சும் கண்டக்டர் பிலிப்பும் உறவாகிப் போனார்கள்.... இறுக்கமாகிப் போனார்கள்.... குழப்ப காலத்திலே பாவப்பட்ட மக்களையும்.... துன்பங்களையும் சுமந்த பஸ். அதே கண்டக்டர் பிலிப்.

பஸ் பயணத்தை ஆரம்பித்தது.

பயணித்து இரண்டு... மூன்று அடிகள் தூரம் நகர்ந்திருக்கும்... திடீரென பஸ் நின்று கொண்டது.

என்னவோ..... ஏதோ..... என்று எல்லோரும் வெளியே எட்டிப் பார்த்தார்கள்.

அங்கே.... விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் நடன ஆசிரியை வேணி ரீச்சர் பஸ்ஸில் ஏறிக் கொண்டிருந்தாள்.

மனத்திலும் முகத்திலும் பஸ்ஸைத் தவறவிடப் பார்த்தோமே என்ற ஏக்கம்! பரபரப்பு!!

அவனுக்கு எதிரே இருந்த சீற்றில் அமர்ந்தாள். அவனைப் பார்த்து ஒரு மெல்லிய சிரிப்பு 93 இலிருந்து ஒன்றாய்ப் பயணித்த உறவாய் மலர்ந்தது.

"என்ன ரீச்சர் இண்டைக்குப் போறீங்கள்....?"

"சனிக்கிழமை ஒரு டான்ஸ் புறோகிறம் இருக்குது. இண்டைக்கும் நாளைக்கும் றிகேசல் பார்க்க வேணும். அது தான் போறன் சேர்..... நீங்கள்!"

" இண்டைக்கு கச்சேரியில் ஒரு மீட்டிங் இருக்குது. கட்டாயம் அட்டன் பண்ண வேணும் அதுதான்..."

சம்பாசணைகள் தொடர்ந்தன.

பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

ஈரற்பெரியகுளம் சென்றிப் பொயின்ரை நெருங்கியதும் அவனது கை அவனையும் அறியாமல் பிற்பக்கட்டில் இருந்த பேர்ஸை ஒரு தடவை தட்டிப் பார்த்தது. அடையாள அட்டைக்காக ஏங்கியன விரல்கள்.

குழப்ப காலத்தில் என்றால் சென்றிப் பொயின்றுக்கு பத்துப் பதினைந்து யார்களுக்கு முன்னால் பஸ்ஸை நிப்பாட்ட வேணும். பஸ்ஸில் வந்த சனங்கள் எல்லாம் மூட்டை முடிச்சுகளோட சென்றிப் பொயின்றுக்குள்ளால் கால் மைல் தூரம் நடக்க வேணும்.

பாஸ் நடைமுறை வேறு. பாஸ் இல்லாத ஆக்கள் அங்கால போகவும் இயலாது. நிரந்தரப் பாஸ்... ஆறு மாதப் பாஸ்.... மூன்று மாதப் பாஸ்.... வன் டே பாஸ் .... இன்னும் என்னென்னவோ பாஸெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் அந்தந்த கவுண்டரில பதிந்து.. மூட்டை முடிச்சுக்களைச் செக் பண்ணி... விசாரணைகள் முடிந்து... ஒருவாறாக மீண்டும் பஸ் புறப்பட ஒரு மணி நேரமாவது செல்லும்.

ஆனா.... இன்றைக்கு பிரபா - ரணில் செய்த உடன்படிக்கை ஒப்பந்தத்தால்... ஒரு கரைச்சலும் இல்லாமல் பஸ் போய்க் கொண்டிருந்தது.

பஸ் வேகமாக வேகமாக ஓட, இன்னும் வேகமாக ஓடாதா என்றிருந்தது அருணனுக்கு. அவனுடைய எண்ணமெல்லாம் எவ்வளவு விரைவாக கந்தோருக்குப் போக முடியுமோ போய்விட வேண்டும் என்றிருந்தது.

பதினொரு மணிக்காவது போனால் ஒரு மாதிரி லீவு போடாமல் சமாளிச்சுப் போடலாம்!

வேகமாக வந்த பஸ் வாகனேரி வளைவைத் தாண்டியது.

வயல்வெளிகளையும் தாண்டி தொலை தூரத்திலே காகித ஆலைக் கட்டிடங்கள் தெரிந்தன.

கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

சரியாகப் 10 மணி.

அப்பாடியோவ்.....!

வாழைச்சேனை வந்துவிட்டது.

குழப்ப காலத்தில் என்றால்.. வவுனியாவிலிருந்து ஏழு மணிக்குப் பிறகு பஸ் வெளிக்கிட்டு... வழி நெடுக ஒவ்வொரு சென்றிப் பொயின்டிலையும் பேக்குகளைத் தூக்கித் கொண்டு ஏறி.... இறங்கி... ஐடின்டிக்காட் காட்டி அலுத்து... குண்டும் குழியும் நிறைந்த "பை" றோட்டால குலுக்கி அடித்து சுற்றிச் சுற்றி ஓடி.. அதை விட றோட்டில நடக்கிற திடீர்ச் செக்கிங்கிற்கு முகம் கொடுத்து... றோட்டில ஏதும் குண்டு வெடிப்பென்றால் அது வேற... பிக்கட்டிங் நாளென்றால் பஸ்ஸை றோட்டோரத்தில் நிற்பாட்டிப் போட்டு பயந்து பயந்து வாகனத் தொடர் போகுமட்டும் காய்ந்து கிடந்து.... சீ.... என்று போகும்!

எல்லா அவலத்தையும் தாங்கி ஆகக் குறைந்தது 5 மணிக்குத்தான் மட்டக்களப்புக்குப் போகலாம். ஒரு நாள் பயணம்!

பஸ் ஓட்டமாவடிப் பாலத்தினுள் நுழைந்தது.

இனி மட்டக்களப்பிற்குப் போன மாதிரித்தான்! மனம் மகிழ்ச்சியில் குதித்தது.

ஒரு கணந்தான்!

பஸ் பாலத்தைக் கடந்து வெளியே வந்ததும் அவர்கள் கண்ட காட்சியினால் நிலைகுலைந்து போனார்கள்.

தொலைவில் நிகழும் அவலம் ஏதோ ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்து கொண்டிருப்பதனைக் கட்டியம் கூறியது.

ஓட்டமாவடி.

அடிக்கடி முஸ்லிம் - தமிழ் கலவரம் நிகழும் களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைவர் ரவிக்கு என்ன நடக்கிறது என்று புரிந்து விட்டது. ஆனால் என்ன செய்வது என்று தான் புரியவில்லை.

பாலத்தினுள் வர முன்னர் என்றால் திரும்பி ஓடியிருக்கலாம். இனி பஸ்ஸைத் திருப்பிக் கொண்டு ஓடவும் முடியாது. இதயம் அல்லாடியது.

அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சம் கண்களில்... !

இனியும் தாமதிக்க முடியாது. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போவதைத் தவிர வேறு வழியில்லை.

நிமிர்ந்து பார்த்தான். கடைத்தெரு ஆள் அரவமற்று வெறிச்சோடிப் போய்க் கிடக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித நிழலே இல்லை!

எல்லோருடைய உயிரையும் சுமந்து கொண்டான். பஸ்ஸை வேகமாகச் செலுத்தினான்.

கடைத் தெருவிற்கு வந்துவிட்டான்! மனிதவாடை மருந்துக்குமில்லை!!

நடு றோட்டில் அபாயச் சமிக்கையாக பெரியதொரு தென்னங்குற்றி.

பஸ்ஸினால் போக முடியவில்லை.

அதற்கிடையில் பளீர்.... பளீர்.... கல்லெறி வீச்சுக்கள். பஸ்ஸின் கண் ணாடிகள் கல்லெறிக்கு இரையாகிப் போயின.

சனங்கள் அல்லோல கல்லோலம்!

சிலர் பஸ்ஸை நோக்கி ஆயுதங்களுடன் ஓடி வந்து கொண்டிருந் தார்கள். சிலருடைய கைகளில் பெற்றோல் கலனும் பொல்லும்..

சனங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களின் உயிர்கள் இழையில் ஊசலாடிக் கொண்டிருந்தன.

இனியும் பஸ்ஸினுள் இருந்தால் உயிர் மட்டுமல்ல, ஒரு பிடிச்சாம்பர் கூட மிஞ்சாது என்பதனை உணர்ந்தான் அருணன்.

பஸ்ஸினில் இருந்து இறங்கி ஓட நினைத்தான்.

முன் சீற்றில் இருந்த வேணி ரீச்சர் அவனை வேதனையுடன பார்த்தாள். அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"கெதியா இறங்குங்க ரீச்சர்"

அவசரத் தொனியில் கத்தியபடி அவளையும் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு பின் கதவால் வெளியே பாய்ந்தான்.

எங்கேயாவது ஓட வேண்டும். எங்கே ஓடுவது? திசை தெரியாமல் திண்டாடினான். நெஞ்சு பதறித் துடித்தது.

அவர்கள் தப்பி ஓடுவதைக் கண்ட சிலர் அவர்களை துரத்திக் கொண்டு ஓடிவருவது தெளிவாகத் தெரிகிறது.

அவர்களின் கைகளில் பட்டால் கசாப்புக் கடைகளில் தொங்கும் ஆடு, மாடுகளின் நிலைதான் அவர்களின் நிலையும்.

அவளையும் இழுத்துக் கொண்டு குறுக்குத் தெருவால் ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லூறுக்குப் பயந்த கோழிக் குஞ்சைப் போல நடுங்கினாள். அவனுக்கும் அதே நிலைதான்!

அவர்களும் அவர்களைத் துரத்திக் கொண்டே ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

"டுமீர்...."

வெடியோசை! அந்த ஊரே நடுங்கியது - அதிர்ந்தது.

திடுக்கிட்டுத் திரும்பினார்கள். அவர்களை துரத்தி வந்தவர்களைக் காணவில்லை.

ஆனால்.... அடாவடித்தனமான அரசியல் நடுத்தெருவில் பகிரங்கமாக அரங்கேறிக் கொண்டிருந்தது.

அவர்களைச் சுமந்து வந்த பஸ் குண்டு வீச்சுக்கு இரையாக, தீ நாக்குகள் வளர்ந்து கொண்டே சென்றன. பஸ் எரியும் கரும்புகைப்படலம் வானத்தில் தொங்குகிறது.

அவர்கள் மயிரிழையில் தப்பி விட்டார்கள்.....! பாவம்... கண்டக்டரும் றைவரும் என்ன ஆனார்களோ!

பஸ்ஸினுள் இருந்தவர்களின் பதறும் குரல்களும்... அழுகையின் அலறல்களும்.. மாடு வெட்டுகின்ற மடுவத்திலே கேட்கின்ற மரண ஓலமாகக் கேட்கின்றன.

உயிர் வலிக்க ஓடுகிறார்கள்.

டயருடன் சேர்ந்து உயிர்களும் உருகி எரியும் பிணவாடை துரத்துகிறது.

இனி... தெருவால் ஓடிப் போனல் அவர்களுக்கும் அதே நிலைமைதான்!

சேறும் சகதியும் நிறைந்த தெருவோரக் கானுக்குள் பாய்ந்து யாருக்கும் தெரியாமல் குனிந்தபடி ஓடுகின்றார்கள். ஒரு சின்ன "வோக்கு" - கொஞ்சம் பாதுகாப்பான மறைவான இடம். அங்க இங்க ஓடுறத விட.... அதற்குள் மறைந்து கொள்ளுறது கொஞ்சம் பாதுகாப்பு. ஓட்டுக்குள் சுருண்டு கொள்ளும் நத்தை போல இருவரும் அதற்குள் சுருண்டு கொள்கிறார்கள்.

கண்ணீரும் பெருமூச்சுக்களும் அந்த இடத்தை நிறைக்கின்றன. சுவாசத்தின் ஓசைகள்கூட வெளியே கேட்டு விடுமோ என்ற பயம்.

ஒவ்வொரு கணங்களும் ஒவ்வொரு யுகங்களாகக் கழிந்து கொண்டிருந்தன. பொழுதை இருள் கௌவாதா என்று ஏங்கின. கடவுளை இறைஞ்சின.

பொழுது விடை பெற்றது. இருள் ஒட்டிக் கொண்டது.

இரவோடு இரவாக ஓட்டமாவடி எல்லையை விட்டு வெளியேறிவிட நினைத்தான். ஆனால் அவன் போகவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் இன்னும் அந்த இடத்தை விட்டு அகன்றிருக்க மாட்டார்கள் என்று அவனுக்குத் தோன்றுகிறது.

அதே வேளையில் இன்னும் அந்த வோக்குக்குள் கிடப்பது ஆபத்தானது என்பதனை உணர்ந்தான். அந்த வேளையில்தான் அவனுடன் வேலை செய்யும் நண்பன் ஹனீபாவின் வீடு அருகில் இருப்பது நினைவுக்கு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய வீட்டிற்குப் போனால், அவன் எப்படியும் அவர்களைக் காப்பாற்றுவான். மனதில் நம்பிக்கையின் கீறல்கள்!

வெளியே எட்டிப் பார்த்தான். தெருவே மயானமாகக் கிடக்கிறது. ஆள் அரவம் எதுவுமில்லை.

இருளோடு இருளாக ஹனீபாவின் வீட்டை நோக்கி நடைப்பிணங்களாக வெற்றுடல்களாக நடந்தார்கள்.

ஹனீபாவின் வீட்டு முன் கதவு பூட்டிக் கிடக்கிறது. உள்ளே ஒரு சின்ன வெளிச்சம் மட்டும் தெரிகிறது.

கதவுக்கு நோகாமல் முன் கதவில் மெல்லத் தட்டினான்.

கதவு திறந்து கொண்டது.

ஹனீபா அந்த நேரத்தில் அவர்களை எதிர்பார்க்கவில்லை.

அதுவும் அந்தக் கோலத்தில்! பயத்தால் வெளிறிய முகங்கள்... கலைந்த கேசம்.. சேறு ஒட்டிய உடல்கள்....

அவர்களுடைய கோலங்கள் அவர்களுக்கு நடந்த அவலத்தைச் சொல்லாமலே சொல்லுகிறது.

இன முரண்பாடுகள், இன நல்லுறவுப் பாலம், இன நல்லுறவு இலக்கிய விழா... இப்படியான இன உறவு நிகழ்வுகளைத் திட்டமிட்டு நடாத்திய நண்பனுக்கா இந்த நிலைமை!

அவனுக்கே இந்த நிலைமையென்றால்... ஒன்றுமே தெரியாத அப்பாவிச் சனங்களின் நிலை...?

இனவுறவு என்றும் இன ஒற்றுமை என்றும் நெஞ்சு வெடிக்கக் கத்துவதனால் கிடைத்த பயன்? வெறும் வாய் வெடிப்புத்தானா.....!

அவனால் ஜீரணிக்க முடியவில்லை. துடித்துப் போனான். அருணன் நடந்ததைச் சொல்ல எண்ணினான். முடியவில்லை... கண்ணீருக்கிடையே வார்த்தைகள் கரைந்து போயின.

இருவரையும் உள்ளே அழைத்துக் கொண்டு, கதவை அடித்துச் சாத்தினான். அவன் தன்னுடைய சமூகத்திலே கொண்டிருந்த கோபம், அந்தக் கதவை அடித்துச் சாத்திய வேகத்திலே வெளியேறியது.

மண்டபத்திலே கிடந்த கதிரையிலே தொப்பென விழுந்தார்கள் இருவரும். அவர்களுடைய நடுக்கமும் பயமும் இன்னும் தணியவில்லை. நெஞ்சங்கள் படபடத்துக் கொண்டேயிருந்தன.

ஹனீபாவுக்கு அவர்களை ஆற்றுகைப்படுத்த வேண்டும் போல இருந்தது. அவர்களுக்கும் அது தேவையாக இருந்தது.

அவனும் எதிரேயிருந்த கதிரையில் அமர்ந்தான்.

அருணனுக்கு நடந்த சம்பவங்களை யாரிடமாவது சொல்லி வாய்விட்டு அழ வேண்டும் போல இருந்தது. இல்லையேல்... நெஞ்சுக்குள்ளே அழுத்திக் கொண்டு கனத்துக் கிடக்கும் வேதனையினால் நெஞ்சம் வெடி குண்டாக வெடித்துச் சிதறி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளை அடுக்கிக் கொண்டே போனான் அருணன்.

ஹனீபாவின் கண்களில் ஆச்சரியக் குறிகள்!

இவர்கள் எல்லாம் ஒரு மனிதர்களா....! மிருகத்திலும் கேவல மானவர்கள்...!! பஸ்ஸை எரிக்கிறதாலும் சனங்களைக் கொல்லுறதாலும் என்னத்தைக் காணப் போகிறார்கள். இப்படியாக ஆள் மாறி ஆள் பஸ்ஸையும் சனங்களையும் எரித்துக் கொண்டு வந்தால், நாளைக்கு மிஞ்சப் போறது எரிந்து எரிந்து கருதிப் போன ஒரு தேசந்தான். சீ....! வெட்கமாக இருக்குது...

ஹனீபாவின் இதயம் வேதனையில் துடித்தது.

இருவருக்கும் தேனீரைக் கொண்டு வந்து கொடுத்தாள் ஹனீபாவின் மனைவி பரீதா. இரத்தக் கறைகளினால் எழுதப்படும் வரலாறுகள் அவளின் செவிப்பறையை எட்டியிருக்கவேணும். அவளுடைய கண்களின் கதவுகளினூட கவும் கண்ணீர்.

ஒரே தாகம்... பசி...

தேனீரின் இரண்டு மிடரை விழுங்கினார்கள்.

தெருவிலே இனம் புரியாத சத்தம்.

அந்தத் திடீர்ச் சத்தம் அவர்களையும் அறியாமல் ஒரு வித பய உணர்வை ஏற்படுத்தியது. கையில் இருந்த தேனீர்க் கோப்பைகள் கிடுகிடு வென நடுங்கின.

"கிறீச்" என்று கேற் திறக்கும் ஓசை.

இருவருக்கும் உயிரே போனது போல இருந்தது.

"என்ட கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் உங்களை யாருமே ஒன்றும் செய்ய முடியாது. அறைக்குள்ள போங்க....?" மெதுவாகச் சொன்னான் ஹனீபா.

அரவம் எழும்பா வண்ணம் அறையினுள் போனார்கள். ஹனீபா கதவிலுள்ள திறப்பு இடுக்கினூடாகப் பார்த்தான். கொலைக் கருவிகளுடன் சிலர் நிற்பது மங்கலாகத் தெரிகிறது. கதவைத் தட்டினார்கள். கதவு உடைந்து விடுகின்ற வேகம். ஹனீபா கதவைத் திறந்தான்.

அவனுடைய பார்வை அவர்களை நோக்கி "என்ன?" என்று கேட்பது போல இருந்தது.

"இங்க யாராவது வந்தார்களா?" கடுஞ் சொற்களை அவனை நோக்கி வீசினார்கள்.

அவன் "இல்லை" என்றான்.

"சரி" போனார்கள்.

ஆனாலும்.....

இரவு முழுவதும் ஒருவித இனம் புரியாத சத்தம். தெருநாய்களின் ஓலம்..! தெருநாய்களுடன் சேர்ந்து ஊர் நாய்களின் அரவம்...!

மோப்பம் பிடிக்கும் நாய்கள் போல சிலர் அடிக்கடி வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவம் கேட்கும் ஒவ்வொரு தடவையும் அருணன் திறப்பின் இடுக்கினூடாகக் வெளியே பார்ப்பான். தெருவில் குருதி தோய்ந்த கருவிகள் தோளில் தொங்க சிலர் இரவு முழுவதும் அலைந்து கொண்டிருந்தார்கள்.

பல தடவைகள் கதவைத் தட்டினார்கள். கதவு தட்டப்படும் ஒவ்வொரு பொழுதும் வேரோடு உயிரைக் கிள்ளி எறிவது போல நெஞ்சு வலிக்கும். வேணியின் கண்கள் அழுதழுது கண்ணீரிலே ஊறிப்போய்க் கிடந்தன.

இரவு முழுவதும் அச்சமூட்டுவதாகவே கரைந்தது.

இரவு விடை பெற்றது.

இரவு விடைபெற்ற கையோடு தகவல் அறிந்து வர வெளியே போனான் ஹனீபா.

நேரம் பதினொரு மணியை நெருங்கிய போதும் அவன் இன்னும் வீடு திரும்பவில்லை.

ஊர்க்குருவி போல ஊரெல்லாம் சுற்றினான்.

வன்செயல்கள் முற்றுப் பெறவில்லை. குழம்பிய ஊர் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. நிலைமை இன்னும் மோசமாகலாம் எனச் செய்திகள் கசிந்தன.

அந்தச் செய்திகளைச் சுமந்து கொண்டு பதினொரு மணியளவில் வீட்டிற்கு வந்தான்.

அவனுக்கு ஒரே சிந்தனைக் குழப்பமாக இருந்தது. இனியும் அவர்களை வீட்டில் வைத்திருந்தால் அவனே அவர்களைக் கொலைக் களத்திற்குக் கொண்டு போய்க் கொடுப்பது போலாகிவிடும்.

அவர்களின் உயிரைத் தக்க வைப்பதற்கு ஒரேயொரு வழி மட்டுந்தான் இருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை பன்னிரெண்டு மணிக்கு எல்லோரும் பள்ளிக்குத் தொழுகைக்குப் போய்விடுவார்கள். அந்த நேரம் எந்தவித அசம்பாவிதமும் நடக்காது. வன்செயல் சூன்ய நேரமாக இருக்கும். அந்தச் சமயம்... "பாங்கு" சொல்லும் நேரம் பார்த்து எல்லையைக் கடந்து விட்டால்...

அருணனுக்கு நிலைமையைக் கூறினான் ஹனீபா. அவனுக்கும் சரி எனவே பட்டது.

பள்ளித் தொழுகைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

அருணன் ஹனீபாவின் வெள்ளைச் சாரத்தையும் வெள்ளைச் சேட்டையும் உடுத்துக் கொண்டான். தொழுகையின் போது அணியும் வெள்ளைத் தொப்பியையும் அணிந்தான். முழு முஸ்லிம் போலவே இருந்தான்.

அவனுடைய அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு தன்னுடைய அடையாள அட்டையைக் கொடுத்தான் ஹனீபா. அந்த அடையாள அட்டையைப் பார்த்தான் அருணன். இருவரும் இரணைப் பிள்ளைகள் போலவே இருந்தார்கள். சின்ன வயசில் எடுத்த அடையாள அட்டை உருவம் சிதைந்து அவனுடைய உருவம் போலவே தோன்றியது. இனி அவனை முஸ்லிம் இல்லை என்று யாரும் சொல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீதா கொடுத்த "ஹவாயாவை" உடுத்திக் கொண்டு "சோலி"னால் தலையை மூடி முகத்தை மறைத்தாள் வேணி. அவளுடைய அழகிய முகமும் சிவந்த வெள்ளையும் மெல்லிய தோற்றமும் மாற்றங்காண முடியாத முஸ்லிம் பெண்ணாகவே காட்டின. பரீதா கொடுத்த அடையாள அட்டையையும் வாங்கினாள். அந்த நிழல்படம்கூட அவளைப் போலவே இருந்தது.

ஒட்டுமொத்தமாக இருவரும் அசல் முஸ்லீம்கள் போலவே இருந்தார்கள். இனிப் போகும் வழியில் அவர்களை யாரும் தமிழர்களாக அடையாளம் காணமுடியாது. அடையாளம் கண்டால் கூட அந்த அடையாள அட்டைகளைக் காட்டித் தப்பி விடலாம். நம்பிக்கைகள் வலுவடைந்தன. "பாங்கு" சொல்லுவதற்கு இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன. ஹனீபா கேற்றைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

ஆள் அரவம் எதுவுமில்லை!

"சரி வாங்க..."

அருணன் ஹனீபாவின் பைசிக்கிளை உருட்டிக் கொண்டு வெளியே வந்தான்.

வேணி பைசிக்கிளில் ஏறினாள்.

பைசிக்கிள் புறப்படுமுன் இருவரும் திரும்பி இருவரையும் பார்த்தனர். கண்ணீர்த் திவலைகளின் திரைகளினூடாக இருவரும் மங்கலாகத் தெரிந்தனர். பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றனர்.

ஒருவாறு பிரதான வீதிக்கு வந்து விட்டனர்.

தெருவைக் கடைக் கண்ணால் பார்த்தார்கள்.

அங்கே -

அவர்களைச் சுமந்து வந்த பஸ் கருகிப் போய்க் கிடக்கிறது.

அந்த பஸ்ஸைப் போல இன்னும் பல... சிதைந்து போன வெற்றுடல்கள் தெருக்கரையில் அநாதரவாகக் கிடந்து எட்டிப் பார்க்கின்றன. பிண நாற்றம் இன்னும் அடங்கவில்லை. தெருவெல்லாம் இரத்தச் சகதியாகி சிவந்த கானல் நீராய்... அங்கொன்றும் இங்கொன்றுமாக அடையாளம் தெரியாத எலும்புத் துண்டுகள்....

காட்சிப் பயத்தில் மனம் உதைக்க, கொஞ்சம் வேகமாக பைசிக்கிளை ஓட்டினான்.

தங்களை யாரும் அடையாளம் கண்டு விடுவார்களே என்று பயந்தார்கள். ஆனால், தொழுகைக்குச் செல்லும் பரபரப்பில் அவர்களை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு பள்ளிவாசலில் இருந்து பாங்கோசை கேட்டது. அந்த நேரம் ஓட்டமாவடி எல்லையைத் தாண்டி கறுவாக்கேணி எல்லைக்குள் நுழைந்தார்கள்.

இனிப் பயமில்லை. தமிழூருக்கு வந்துவிட்டார்கள். போன உயிர் மீண்டும் திரும்பி வந்தது போல.. நீண்ட நிம்மதிப் பெருமூச்சு அடி மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்து காற்றில் கலந்தது. தலைகளில் இருந்த தொப்பியையும் 'சோல்'லையும் கழற்றி கையில் எடுத்தனர்.

அச்சமும் பதட்டமும் நடுக்கமுமின்றி சுதந்திர மண்ணில் பைசிக்கிளை ஓட்டினான்.

கறுவாக்கேணிச் சந்தியிலே ஆலமரத்தின் கீழே ஒரு கும்பல் நிற்பது தெரிகிறது.

அவன் எந்தச் சலனமுமின்றி பைசிக்கிளை ஓட்டினான். அவர்களைப் பற்றி அக்கறை கொள்ளவுமில்லை.

பைசிக்கிள் அவர்களைத் தாண்டியது. அவர்களை நோக்கிச் சிலர் ஓடி வந்தார்கள்.

தமிழனுக்குத் தமிழன் ஏன் பயப்பட வேண்டும்?

அவன் பயப்படவில்லை.

ஒரு காலைப் பெடலிலும் மறுகாலை நிலத்திலும் ஊன்றினான். பைசிக்கிள் நின்றது.

ஒருத்தன் ஓடி வந்து பைசிக்கிள் கென்டிலைப் பிடித்தான்.

"டேய் காக்கா, எங்கடா போறாய்....!."

"செய்யுறதையும் செய்து போட்டு தமிழூருக்குக்குள்ளான போறயா.....!."

"காக்கா எங்கட ஊருக்குள்ளால போறத்திற்கு உனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேணும்...!."

அவனை நோக்கி வார்த்தைகளை அள்ளி வீசினார்கள்.

"நாங்கள் முஸ்லிம் இல்ல... தமிழர்கள்." என்றான் அருணன். அவர்கள் நம்புவதாக இல்லை.

பலமுறை சொன்னான். ஒரு முறையும் நம்புவதாக இல்லை. அவர்கள் வேடிக்கைப் பொருளானார்கள். அவர்களை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

"நீ தமிழனென்றா.... எடுடா உன்ட ஐடின்டிக்காட்ட...!"

காடைத்தனமாக அடையாளங்களைத் தோண்டினார்கள்.

"ஹனீபா....."

"பரீதா....."

முதுகுச் சட்டைக்குப் பின்னால் இருந்து இழுத்தான் ஒருவன் வாளை. குருதி காயாத வாள் பளபளத்தது.

இருவரும் நடுங்கினார்கள்.

உயிர்கள் உதிர... பைசிக்கிள் கீழே சரிந்து விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்தகவு... என்.ஏ.தீரன் (ஆர். எம். நௌஷாத்) 3



*கல்முனை சாய்ந்தமருதைச் சேர்ந்த என்.ஏ.தீரன் (ஆர்.எம். நௌஷாத்) 1960ல் பிறந்தவர். தபால் அதிபராகத் தொழில் புரியும் இவர், பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்பின் முதற் கலைமாணி கல்வித் தகைமையுடையவர். கவிதை, சிறுகதை, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். பிரான்ஸ் (தினக்குரல்) தமிழ்ஒலி வானொலியின் நாடகப் போட்டியில் மூன்றாம் பரிசும் சான்றிதழும், பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசும் (தங்கப் பதக்கம்) பெற்றுள்ளார்.*

*இவரது முகவரி: - தபால் அலுவலகம், கல்முனை.*

– பேரு....?

– முகம்மது யூஸுப் அப்துல்லா.

– ஊரு?

– காங்கேயன் ஓடை. மட்டக்களப்பு.

– என்ன விஸயமா வந்தீங்க?

– ஸேர்! போன மாசமும் வந்தநான். அங்கயீனருக்கான உதவிக் காசி வெசயமா... ந்தாயிருக்கு ஸேர் பைல் நம்பர்...

– ஙா... செரி... செரி.. ஆனா உங்கட பைலில 'டயக்னஸிஸ் கார்ட்' ல்லையே...

– காட்டா? போன மாசந்தானே ஸேர் ரெண்டு 'ரிப்போட்டு' 'செட்டிகட்டு' குறையுது ண்டு கொண்டு வந்து தந்துட்டன் ஸேர்!

– ஓம். அது சரி... ஆனா அதுல 'எப் ஐ போம்', 'பேத் சீ','ஜீயெஸ் ரெக்கமன்டன்ஸ்' 'பொலிஸ் என்ட்ரி' எல்லாம் சரி. ஆனா 'டயக்னஸிஸ் கார்ட்' ல்லை.

– அப்பிடியெண்டா....?

– 'ஒஸ்பிற்றல்'ல அனுமதிச்சதுக்கு தாற ரிப்போர்ட்டு! 'டயக்னஸிஸ் கார்ட்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதுக்கு நான் என்ன ஸேர் செய்யனும்?
- ஒஸ்பிற்றல்ல எடுக்கனும். எடுத்துட்டு வாங்க.
- ப்ப எப்பிடி ஸேர் எடுக்கிற? ஊருக்கு போய் வெரணும். ரெண்டு மூணு கெளமயாயிடும் ஸேர்.
- அதுக்கு நான் என்ன செய்யிற? கார் ஒண்டு பிடிச்சித்தரவா? போய் எடுத்துட்டு அடுத்த கெளம ல்லாட்டால் அடுத்த மாதம் வாங்க!
- அடுத்த மாசமா? என்ன ஸேர் இது? கை வெளங்காத என்னப் போட்டு ப்பிடி அலைய வெய்க்கறீங்க...எம்பத்தாறு எனக்கலவரத்தில என்ட கை பிஞ்சி பறந்த ஸேர்! பாருங்க ஸேர்!
- என்ன மடத்தனமா பேசறீங்க? மிஸ்டர்! 'டயக்னஸிஸ் கார்ட" ல்லாம 'மெற்றர' எப்பிடி' சப்மிற்' பண்ற? 'எக்க்வுண்டன்' மூலக் கொதியன். 'பைல்' மூஞ்சிக்கு வெரும். எறிவான்! உனக்கென்ன? எனக்குத்தானே?
- செரி..செரி...கோவிக்காதீங்க ஸேர். எடுத்திட்டு வாறன்

* * *

- பேரு..?
- முகம்மது யூஸுப் அப்துல்லா.
- ஊரு....?
- காங்கேயன் ஓடை. மட்டக்களப்பு.
- எப்ப நடந்த?
- எம்பத்தாறாமாண்டு. எனக்கலவரத்துல ஐயா!
- எங்க?
- ஊருலதான் ஐயா.
- அதில்ல...எந்த ஒஸ்பிற்றல்ல மொதல்ல இருந்த நீர்?
- ஞ்சதான்..........ஏத்தி உட்டாங்க ஐயா.
- திகதி தெரியுமா?
- எம்பத்தாறு ஏப்புரல் பதினாறு ல்லாட்டி பதினேழு.
- தேடனும். எப்ஆர்ஐ முழுதும் தேடனும். 'சப்ஜெக்ட் கிளார்க்' லீவு. அடுத்த கிளம வாங்க.......
- அடுத்த கிளமயா? எனக்கி அவிசிரமா வேணும் ஐயா. நாளைக்கி கொழும்புக்கு அனுப்பனும்.
- அதுக்கு நான் என்னப்பு செய்யிற ? நீர் முந்தி வந்திருக்கனும்!
- முந்தி அங்க கேக்கல்ல ஐயா.
- அங்க கேக்காததுக்கு நானா பள்ழி? அடுத்த கெளம வாருமன்!
- கொஞ்சம் அவிசிரம் ஐயா! எனக்கலவரத்துல என்ட தகப்பன்காரன் மீன் யாவாரத்துல போனவரு கடத்தி மெளத்தாய்ட்டாரு. அவரத் தேடிப்போன எடத்துல எனக்கி ஆமிக்காறன் வெடி வெச்ச. ந்தப் பார்ங்க ஐயா......ந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கய் பிஞ்சி பறந்துட்டு ஐயா.

– ப்படி ஆயிரம் புராணம் கேட்டுட்டன். எண்பத்தி ஆறாம் ஆண்டு எண்டால் எப்ஆர்ஐ பாக்கனும். அதுக்கு ஏஓ வேனும் அப்பு! சப்ஜெக்கு செய்யிற பொம்புள லீவு. பிள்ளத்தாச்சி லீவு. வரிசத்துக்கு மூணு எண்டல்லே அடுக்கிறவள்........புரிசன்..........

– ஐயா, காலப் புடிச்சன். அங்கயீனர் காசி எடுக்க மூணு வரிசமா அலைறன். கொஞ்சம் எரக்கம் காட்டுங்க ஐயா. நான் கை வெளங்காதவன்.

– இனக்கலவரத்துல நீரும் முன்னுக்கு நிண்டிருப்பீர். ஆருகண்டா? அதவிடும். ப்ப எடுக்க ஏலாது. ஆள் லீவு கண்டியோ? உமக்கு அவிசிரமா டெம்பரரியா வேணுமெண்டா' ஒஸ்பிற்றல் பொலிஸ்' ரிப்போட்டிலயும் இருக்குமப்பு. அங்க போய் எடும். கெதியா ஓடுமன்!

– நீங்க தெரமாட்டிங்களா ஐயா?

– தமுள்ளதானே சொன்ன நான்! 'சப்ஜெக்ட்டு க்ளாக் மெற்றினிற்றி லீவு' எண்டு. ஏஓ தான் அந்த வேல பாக்குறவர். சைன் பன்றவரு. நான் ல்லப்பு. இடத்தக் காலி பண்ணு அப்பு.

– அவரு... ஏஓ எப்ப வெருவாரு?

– அது அவரின்ர பெண்டிலுக்கெல்லோ தெரியும்? பருத்தித்துறையில இருக்கினம். கேட்டுச்சொல்லவே?

– ஒஸ்பிற்றல் பொலிஸ் எங்க ஐயா இருக்கி?

* * *

– நம...? நம..? பேரு..........?

– முகம்மது யூஸுப் அப்துல்லா. மாத்தயா!

– கம....? ஊரு...?

– காங்கேயன் ஓடை. வெற்றிக்களோ மாத்தயா!

– கவதா மே  சிதுவுனே...?

– 'சிங்குளம்' தெரியா மாத்தயா!

– ஹெட்ட எண்டகோ!

– எம்பத்தாறு எனக்கலவரத்துல..........ஊருல.........

– மே மச்சாங்! பொட்டக் எண்டகோ! மெயாகென் டிக்க அஹன்ன!

– அந்த மாத்தயாவுக்கு தமுள் வெளங்குமா மாத்தயா?

– அடோ, ஆர்டா  நீ...கைல என்னடா பொல்லு?

– கய் ஒண்டு ல்ல மாத்தயா.... எம்பத்தாறு எனக்கலவரத்துல....

– ப்ப நீ வந்த என்னடா வள்ளா?

– இதப் பாருங்க மாத்தயா.... இந்த டைக்னிஸ் ரிப்போட்டு வேணும். மினிஸ்ற்றியில கேக்காஹ...அங்கயீனருக்கான....

– ஏய்... வள்ளா! இது ஒஸ்பிற்றல்ல எடு ஓய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒஸ்பிற்றல்ல சொணங்குமாம் மாத்தயா...ஒரு மாசம் போவ்மாம். ஆள் லீவாம். எனக்கி அவிசிரமா வேணும். ஞ்சயும் 'கொப்பி' எடுக்கலாம் ண்டு....
- வள்ளா! நீ ஒஸ்பிற்றல்ல வந்த 'டேட்டும்' டைமும்தான் ஞ்ச எடுக்கலாம்.
- செரி மாத்தயா...அவிசிரமா அது வேணும். ண்டைக்கே எடுக்கலாமா மாத்தயா?
- .........ண்டைக்க எடுக்கலாம்டா வள்ளா! நில்றா அப்பிடிப் போயி!
- செரி மாத்தயா! நான் அங்கயீனன். கடத்தின வாப்பாவத் தேடிப் போய் ஆமிக்காரன், வெடி வெச்ச....
- 'கொட்டி'யா சுட்ட எண்டு சொல்றா வள்ளா!
- செரி மாத்தயா....ப்ப எண்ட ந்த ரிப்போட்டக் கொஞ்சம்....
- ரிப்போட்டுல சைன் பண்ற ஓஐஸி அந்தா குடிச்சிட்டுப் படுக்கான்.

போய் எளுப்பி சைன் கேப்பியாடா வள்ளா? புடிச்சி மத்தக் கய்ய முறிச்சி ரிமாண்டுல போட்டு மூத்திரம் பருக்குவான்........ம்ம்ஞ்ஞ்ம்..........?
- அப்ப நாளக்கி வெரயா மாத்தயா.....
- ப்ப போடா வள்ளா............பளயாங் ஹுத்தோவ்!

* * *

- பேரு....?
- முகம்மது யூஸுப் அப்துல்லா. சேர்!
- என்ன வெசயமா வந்தீங்க....?
- அஞ்சாறு வரிசமா அலைறன் சேர். அங்கயீனருக்கான ஒதவிக் காசி வெசயமா.......ந்த பைல் நம்பரு...........
- ஙா......... சரி....சரி...நீ அனுப்பின ரிப்போர்ட் ஸோர்க்குலர்ல கேட்ட
- ரிப்போர்ட் இல்ல. நாங்க கேட்டது டயக்னஸிஸ் கார்ட். ஆனா இது
- 'ஓபீட்டி'என்ட்ரி. ஓஐசி ஸைன் பண்ணிச் சரிவராது. அப்படியெண்டா

இத உறுதிப்படுத்தி டொக்டரும், ரெஜிஸ்ட்டாரும் ப்ராங் பண்ணி கவுண்டர் சைன் பண்ணணும். என்ன மடத்தனம் இது?
- தெரியா ஸேர்! அவங்க இது போதும் எண்டாங்க. 'கை' ஒண்டு இல்லாத நான்...
- டயக்னஸிஸ் கார்ட் வேணும்!
- அப்ப.... நான்....?
- எடுத்துட்டு அடுத்த கிளமை வாங்க.

* * *

- பேரு....?
- முகம்மது யூஸுப் அப்துல்லா...
- ஊரு...?
- காங்கேயனோடை. மட்டக்களப்பு. எம்பத்தாறு எனக்கலவரத்துல..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதுஞவவ

## நவஜோதி ஜோகரட்னம்

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*நவஜோதி ஜோகரட்னம் நீண்டகாலம் பிரான்சில் வாழ்ந்து தற்போது லண்டனில் வாழ்ந்து வருகிறார். 'எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்' என்ற இவரது முதல் கவிதைத் தொகுப்பு 2005இல் வெளியாகி பலரது பாராட்டையும் பெற்றது. 20க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 2005ஆம் ஆண்டு 'ஞானம்' சஞ்சிகை நடாத்திய கலாபூஷணம் புலோலியூர் சதாசிவம் ஞாபகார்த்தப் போட்டியிலும், 2006ம் ஆண்டு தினக்குரல் பத்திரிகையின் ஆதரவில் லண்டன் பூபாளராகங்கள் நடாத்திய சர்வதேச சிறுகதைப் போட்டியிலும் பரிசில்களைப் பெற்றவர். பல இலக்கியக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். லண்டன் 'சண் றைஸ்' (சூரியோதயம்) வானொலியின் அறிவிப்பாளராக கடமை புரிகின்றார். லண்டன் தமிழ் வானொலியில் 'மகரந்தச் சிதறல்' என்ற மகுடத்தில் 50க்கும் மேற்பட்ட பல்துறைசார்ந்த கலைஞர்களுடனும், வல்லுனர்களுடனும் நடாத்திய நேர்முகங்கள் பரந்த வாசகர் வரவேற்பைப் பெற்றுள்ளன. இளவாலை கன்னியர் மடத்தின் பழைய மாணவியான நவஜோதி ஜோகரட்னம் பழைய மாணவர் சங்கத்திலும் செயற்பட்டு வருகின்றார்.*

**த**லாங்கு தக திகு தக ததிங் கிண தொம்
தாம் தஜ்ஜொம் தஜ்ஜொம் தகிட ஜொம்.
த தீ கிண தொம்
தத்தீங் கிண தொம்....

குமாரியுடன் சஞ்சார பாவத்தை தாள உடலால் ரமணி அசைத்துக் கொண்டிருந்தாள். அவளின் கம்பீரமான 'ஆண்' வேடமும் புருவங்கள் மேலெழுந்த துடிப்பான பார்வையோடு கலந்த பாவங்களும் சபையினரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுமைகள் ஆக்கி விட்டிருந்தன. சொற்களில் செதுக்கி உள்ளத்தை வருடும் பாடலை சரோ அக்கா 'ஜதிகள், இராகங்களால்' உயிர் ஊட்டிக் கொண்டிருந்தாள்.

பண்டாரவளையின் அந்த அழகிய மலைச் சூழலுக்குள், மரங்கள் அடர்ந்து சோலைகள் போன்று பூமரங்கள் பூத்துக்குலுங்கும். அந்த அழகிய சூழலுக்கு உகந்த முறையில் சிகரம் வைத்தாற்போல எழும்பி நிற்கும் அந்த அழகிய பெரிய மண்டபம்.

தமிழ், சிங்கள அதிகாரிகள், விரிவுரையாளர்களாலும், தமிழ் சிங்கள ஆசிரியர்களாலும் குழுமியிருந்தது அந்த மண்டபம். மண்டப மேடையில் அவர்களது அலங்கார நளினங்கள் மத்தாப்புச் சரங்களை பார்வையாளர்கள் மனதில் விசிறிக் கொண்டிருந்தன. கலாசாலையின் சிங்கள அதிபர் பெரேரா அவர்களின் அசைவிலும் அந்த உயிரான இசையின் உணர்விலும் தன்னையே மறந்து ரசித்துக்கொண்டிருந்தார். நடனமேதை சித்திரசேனவின் ஆழ்ந்த ரசிகர் அவர்.

அசைவுள்ள ஆடலுடனும், இசைவுள்ள பாடலுடனும் பிறந்தவன்தான் மனிதன். பாவம், ராகம், தாளம் இணைந்து அந்தச் சதங்கை ஒலியில் எழும்பும் ஓர் உயர்ந்த கலையின் பிரதிபலிப்பு எத்துணை அற்புதமானது!

வயது முதிர்ந்தவர்கள், திருமணம் செய்தவர்கள், முதிர் கன்னிகள், ஆண்கள் என்று பல தரப்பட்ட ஆசிரியர்கள் அங்கு பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் குமாரியும், ரமணியும் குழந்தைகள் போன்று கணிக்கப்படுபவர்கள்.

ஆசிரிய கலாசாலையின் சிங்கள, தமிழ் ஐக்கியத்தை வலியுறுத்தும் கலாசார விழா அழகாக முடிந்திருந்தது. பயிற்சிக்காக வந்திருக்கும் ஆசிரியர்கள் காலையிலும் மாலையிலும் அதிபர் காரியாலயத்தில் சென்று கையொப்பமிட்டுக் கொள்ள வேண்டும். வெள்ளைச் சாறிகள் உடுத்திக்கொண்டும், தலைகளை உயர்த்திய கொண்டைகளை போட்டுக்கொண்டும் காட்சி தரும் பயிற்சி பெறும் பெண் ஆசிரியர்கள் அழகிய தேவதைகள் போலத் தோற்றம் காட்டினார்கள்.

"உங்கள் ஆண் வேடம் மிகவும் எடுப்பாக இருந்தது. என்ன துடிப்பான பாவங்கள் உங்கள் ஆட்டத்தில். இன்னும் பல தடவைகள் நீங்கள் ஆடினாலும் பார்க்கவேணும் போலிருக்கிறது" என்று ரமணியின் ஆட்டத்தை பாராட்டினார் சிங்கள அதிபர் பெரேரா.

'மனதில் முகிழ்க்கும் எல்லா உணர்வுகளுமே ஒரு பொறி போலத்தான்' என எண்ணிக்கொண்ட ரமணி புன்னகைத்தவாறு திரும்பிக் கொண்டாள்.

அதிபர் பெரேரா மீண்டும் அழைத்துக்கொண்டார். அழகிய நடன மங்கையின் சிலை ஒன்றை ரமணிக்கு பரிசாக கொடுத்தார்.

எவ்வளவுதான் பாராட்டுக்கள், பரிசுகள், பெரிய புன்னகைகள் கலந்த மகிழ்ச்சி கிடைத்தாலும் ரமணியின் நெஞ்சின் ஆழத்தில் ஏதோ ஒரு வெறுமை தழுவி இருப்பது போலத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அலுவலகத்தின் ஜன்னலூடாக வெளியே பார்த்தாள்.

மரங்கள் அடர்ந்த மலைக்காடுகள். சல சலத்த நீர் வீழ்ச்சிகள். அங்கும் இங்குமாகக் 'குடு குடு'த்து ஓடும் சிற்றாறுகள். தலையில் கூடைகளைச் சுமந்து கொண்டு கலகலத்துப் பேசிக்கொண்டு செல்லும் அந்தப் பெண்கள். ஆஹா என்ன அற்புதம்!

சுற்றிலும் மரகதப் பசுமை கொஞ்சும் அந்த இடத்தில் ஏதோ இனம் புரியாத அச்ச உணர்வும் இளையோடுவதை ரமணி அவ்வப்போது உணர்ந்ததுண்டு.

விடுதிகளில் தங்கியிருக்கும் ஆசிரியர்கள், தனியாகவோ இருவராகவோ வெளியில் செல்வதற்கு இங்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகப் பெண் ஆசிரியர்கள் ஒரு போதும் தனியே வெளியே செல்ல அனுமதிக்கப் படமாட்டார்கள். கலாசாலைக்கு வரும் வழியில் பல விபரீதங்கள் நடந்துள்ளன என்று தமிழ் பகுதிக்குப் பொறுப்பான அதிபர் பாலசுப்பிரமணியம் கூறியது ஏனோ இப்போ நினைவுக்கு வந்தது.

அவளின் விடுதியில் சிங்கள ஆசிரிய மாணவிகள் ஒரு புறத்திலும் தமிழ் ஆசிரிய மாணவிகள் மறுபுறத்திலுமாகத்தான் இருந்து கொண்டிருக் கிறார்கள். ஆனால் எல்லோர்களினதும் மனதுகள் ஆத்மசுத்தியோடு இயங்குகின்றதா என்பது கேள்விக்குறிதான். ஏனென்று தெரியவில்லை. அடிமனதில் எதிரிகள் போன்ற ஒரு உணர்வோடுதான் பழகுகிறார்கள் போலத் தென்படுகிறது. ஆனால் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்கிறார்கள். கூடி இப்படி வாழும்போது பலரும் தமக்குள் புதைந்துகிடக்கும் இயல்பான சுபாவங்களைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

வாழ்க்கை போலியானது. முகமூடிகள் தான். வெறும் நடிப்புகள்தான். கலைஞர்கள் அற்புதமானவர்கள்.

தடித்த உடலமைப்பும் உயர்ந்த தோற்றமும் கொண்ட சுகுணா ஆளுமை மிகுந்தவள். பார்க்கும்போது ஒரு வித்தியாசமான தோற்றம் தென்பட்டாலும் அடிக்கடி புன்சிரிப்பை எல்லோரிடமும் வீசுவாள். சிங்கள ஆசிரிய மாணவிகளுக்கு அவள்தான் பொறுப்பானவள்.

சிங்கள, தமிழ் கலாச்சார விழாவின் ஆரவாரங்கள், பாராட்டுக்கள், குதூகலங்கள் அனைத்தும் ஓய்ந்து ஒருவாரம் ஆனபின் ஒரு இரவில் அந்த விடுதி அறை இருளில் தோய்ந்திருந்தது. நடுப்பாகத்தில் மட்டும் ஒரு மின்விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.

இரவு வேளை விடுதி அறையுள் மின்சார விளக்குகள் அணைக்கப்படுகின்றன.

"எல்லோரும் இப்படி வாருங்கள்? கெதியாக" சிங்களத்தில் சுகுணா பெரிய சத்தத்தில் அழைக்கின்றாள்.

பகிடிவதை என்ற போர்வையில் பெரிய மண்டபத்தில் ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், சிறியவர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் வேதனைப் படுத்தினார்கள். பாவம் என் அம்மாவைப் போன்ற ஒரு ஆசிரியை மேசைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் தும்புத்தடியோடு நின்றுகொண்டு அழுத காட்சி நெஞ்சை வருத்துகிறது. இப்போ என்னத்துக்கு இவள் அழைக்கிறாள். ரமணி எண்ணிக்கொண்டாள்.

பெண்கள் விடுதி அமைந்திருந்த இடத்திற்குக் கீழே எழுந்த பெரும் கூச்சல் அந்த இரவில் துல்லியமாய்க் கேட்கிறது. ரமணி பயந்து போனாள்.

சுகுணாவின் முகத்தில் கலவரம் தெரிகிறது. ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்று ரமணிக்குத் தெரிகிறது. அவள் சொன்ன செய்தி ரமணியின் நெஞ்சை உறையவைத்தது.

பிந்துனுவெவ ஆசிரிய கலாசாலைக்கு வரும் வழியில் திறந்த மைதானத்துக்கு அருகே அமைந்திருந்த பிந்துனுவெவ புனர் வாழ்வு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களை நூற்றுக்கணக்கான கிராம வாசிகள் சூழ்ந்து தாக்க முயற்சிப்பதாக சுகுணா கூறினாள். அந்த இருளில் கீழிருந்து எழும் சீழ்க்கை ஒலிகளும், கூச்சலும் அந்த மலைப் பிராந்தியத்தின் அமைதியை சிதறடிப்பது போலிருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன் பண்டாரவளைக்கு சென்றுவிட்டு அதிபர் பெரேராவின் வாகனத்தில கலாசாலைக்கு திரும்பும் வழியில் சிங்களத்தில் வீதியில் ஒட்டப்பட்டிருந்த சுவர் ஒட்டிகளைப் பற்றி பெரேரா ரமணியிடம் கூறியிருந்தார். பண்டாரவளைப் பிரதேசத்தையும் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதா என்ற தொனியில் எழுதப்பட்டிருந்த சுவரொட்டி வாசகங்களை பெரேரா ரமணிக்கு விளக்கியிருந்தார். முற்றிலும் சிங்களக் கிராமமான பிந்துனுவெவில் அமைந்திருந்த புனர்வாழ்வு முகாமைக் குறிவைத்தே அந்த சுவர் ஒட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்பதை உணர்ந்துகொள்ள ரமணிக்கு வெகு நேரம் பிடிக்கவில்ல. ஆனால் அந்த முகாமில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்களை கிராமவாசிகள் சூழ்ந்து தாக்க முற்படுவார்கள் என்று அவள் நினைக்கவில்லை.

விநாடிகள் கழியக் கழிய கூச்சல் ஆரோகணித்து அந்த மலைப் பிராந்தியத்தில் திகில் ஊட்டியது. ஆசிரியர்கள் விடுதிச் சமையல் அறையில் உதவியாளராக வேலை பார்க்கும் குணசிங்க கீழிருந்து மூச்சிறைக்க விடுதியை நோக்கி ஓடிவருவது இருண்ட நிழலாய்த் தெரிகிறது.

முகாமைச் சுற்றி இருநூறுக்கும் அதிகமான கிராம மக்கள் தடிகளோடும் கத்திகளோடும், உள்ளே நுழைந்து தமிழ் இளைஞர்களைத் தாக்க முயன்றதாகவும் பொலிசார் அவர்களைக் கட்டுப்படுத்த கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டு இருப்பதாகவும் குணசிங்க சுகுணாவிடம் கூறினார். இத்தகைய ஒரு அசம்பாவிதத்தை பொலிசார் தடுத்து விட்டது பற்றி ரமணி நிம்மதி யுற்றாள்.

அந்த முகாமில் நாற்பது இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும், சிலர் 11 வயதிற்கும், 13 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் என்றும் குணசிங்க தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணசிங்கவின் நெருங்கிய நண்பன் ஒருவன் இந்த புனர்வாழ்வு முகாமின் பாதுகாப்பு ஊழியராக பணி ஆற்றுவதால் குணசிங்கவிற்கு அந்த முகாம் பற்றிய விபரங்கள் எல்லாமே அத்துப்படி.

அந்த இளைஞர்கள் தங்களை அந்த முகாமில் இருந்து உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று வருஷக் கணக்கில் கேட்டு வந்திருக் கிறார்கள்.

பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாம் உண்மையில் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை ஆகும். வீடுகளில் இருந்து பெற்றோர் அனுப்பும் கடிதங்கள் தங்களுக்கு தரப்படாமல் அவை முகாமின் குப்பைக் கூடைகளில் வீசப்பட்டிருப் பதாக அந்தத் தமிழ் இளைஞர்கள் பலமுறை முறைப்பாடு செய்திருக்கிறார்கள். தங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புக்களைக்கூட தங்களுக்குத் தருவதில்லை என்று அவர்கள் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள்.

அன்று இரவு ஆத்திரம் கொண்ட இளைஞர்கள், முகாமின் பாதுகாப் புக்கு பொறுப்பாக இருந்த 'லெவ்ரினன்' அபேயரட்னவுடன் பெருமளவு வாக்கு வாதப்பட்டிருக்கிறார்கள். இதை அடுத்து மற்றுமொரு பாதுகாப்பு ஊழியர் துப்பாக்கியால் வேட்டுத் தீர்த்து தமிழ் இளைஞர்களை அச்சுறுத்தியபோது தமிழ் இளைஞர்கள் ஆத்திரம் கொண்டுள்ளார்கள். இதை அடுத்து ஏற்பட்ட அமளி துமளியில் கிராம வாசிகள் சேர்ந்துகொண்டார்கள். ஆனால் நிலைமை ஏதோ கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதென்று ரமணி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அந்த இரவு அச்சுறுத்தும் கொடிய இரவாக நீண்டது.

அவள் எப்போது உறங்கிப்போனாள் என்று அவளுக்குத் தெரியாது. மறுநாள் காலை குணசிங்க படபடத்துக் கூறிய செய்திகள் அவளின் நெஞ்சைப் பிளந்தன. இந்த முகாமிலிருந்த 29 பேர் விடியற் பொழுதில் ஆயுதங்களாலும், துப்பாக்கிச் சூட்டினாலும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை அவன் சுமந்து வந்திருந்தான்.

முகாம் இருந்த இடத்தில் தீ பற்றி எரிந்து புகை மண்டலம் கிளம்பு வதை விடுதியில் இருந்து பார்க்க முடிந்தது. நான்கு இளைஞர்கள் ஆயுதங் களால் தலையிலும், மார்பிலும் வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் தமிழில் கதறியவாறு பொலிசாரைக் கும்பிட்டுக் காப்பாற்றுமாறு வேண்டிக்கொண்டு கீழே விழுந்ததை தான் பார்த்ததாக குணசிங்க கூறினான்.

ரமணிக்கு தலை சுற்றுவது போலிருந்தது.

அமைதியும் அழகும் கொழித்த பிந்துனுவெவ கிராமத்தில் வழிந் தோடிய பச்சைத் தமிழ் அரும்புகளின் இரத்தம் தீராத குரூர கறையை அவலமாக அப்பியிருந்தது.

இரண்டு வாரங்களுக்குப் பின் கலாசாலையை விட்டு யாழ்ப்பாணத் திற்குப் புறப்பட்டபோது தனது நடனத்தைப் பாராட்டி அதிபர் பெரேரா வழங்கிய அழகிய நடன மங்கையின் சிலையை எடுத்துச் செல்ல அவளுக்கு மனம் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பும் செப்பும்

## புலோலியூர் செ. கந்தசாமி

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*புலோலியூர். செ. கந்தசாமி 1937ல் பிறந்தவர். ஓய்வு பெற்ற நில அளவையாளர். கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். சிலாபம் முத்தமிழ் மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு (1969), நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு (2004), வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவை நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு (2005) பெற்றுள்ளார். 'மெல்லத் தமிழ் இனி...!' இவரது சிறுகதைத் தொகுதி.*

*தற்காலிக முகவரி - 3 / 1 அரெத்துசா ஒழுங்கை, கொழும்பு -06*

**வ**டபுலத்தின் வடமராட்சி மண்ணில் வடக்கு மூலையில் ஒரு நடுத்தரக் குடும்பம். அந்நாளில் அறுகு போல் வேரூன்றி ஆல்போல் செழித்து அரசோச்சிய குடும்பம். இன்று உருக்குலைந்த கூடாய் சிதறிச் சின்னாபின்னமாகி..

வம்ச விருத்திக்கு மூன்று புதல்வரையும் மூன்று புதல்விகளையும் பெற்றுச் செல்வாக்காகச் செருக்கோடு வாழ்ந்த பார்வதி இன்று பாயோடு பாயாய்...

மகள்மார் மூவரும் அவளுடன் கூட வாழ்ந்து குதூகலித்திருக்கக் கொடுத்து வைக்கவில்லை. மூத்தவள் கமலா குடும்பத்துடன் கனடாவிலும் இளையவள் சுந்தரி கொழும்பிலும் கடைக்குட்டி சந்திரா வன்னியிலுமாய் இடம்பெயர்ந்துவிட மூத்தமகன் முத்துக்குமரனின் அரவணைப்பில் பார்வதிப் பாட்டி.. இளையமகன் இந்திரனும் மூன்றாமவன் முருகவேலும் அண்ணன் முத்துக்குமரனுக்கு உறுதுணையாக...

இத்தனைக்கும் பார்வதிப்பாட்டிக்கு அகவை "எப்பன் சிப்பன்" அல்ல. தொண்ணூற்றி ஒன்பது தானாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலென்ன இந்த வயதிலும் அவளுடைய உள உறுதியென்ன உடல் வாகென்ன வேறு யாருக்கு வரும். அன்றைய நாட்களில் ஒடியல்பிட்டும், ஊர் அரிசிச்சோறும், உடன் மீனும், தினைமாவின் புட்டும், வரகரிசிக் கஞ்சியும் உண்டு கட்டிக்காத்த உடம்பாக்கும். இந்த நாட்களைப்போல் கண்ட கண்ட மாத்திரையும் விழுங்கி எடுத்ததெற்கெல்லாம் ஊசியும்போட்டு பூசி மெழுகிய உடம்பா என்ன. தலையிடி என்றால் கொத்தமல்லிக் கசாயம், ஊறவைத்த வெந்தயம் அவித்த நீர் - தேனீருக்குப் பதில் நீர் மோர். மாதவிடாய்க் கோளாறெனில் விடத்தல் இலையும் பச்சை அரிசியும் சேர்த்து இடித்தமாவின் கழி- குறிஞ்சா இலைச்சாற்றில் உழுத்தம்மாவும் நல்லெண்ணையும் முட்டையும் சேர்த்துக் கிண்டிய கழிதான் தீன். இப்படி எத்தனையோ கைவைத்தியமும் இயற்கை வைத்தியமும் செய்து பேணிவளர்த்த தேகம். பனாட்டும் பாணியும் உண்டு இறுகிய சரீரம். அத்தனை உறுதி, அத்தனை ஆரோக்கியம். அதுதானே பாட்டியை இதோ தொண்ணூற்றி ஒன்பது வரை உறுதியாக வைத்துக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

ஒரு நோய் நொடி என்று பாயில் படுத்தறியாள். எங்கேயும் ஒரு அலுவலாகட்டும் வலியப்போய் இழுத்துப்போட்டுச் செய்து முடித்து "காரியகாரி" என்று அறிந்தவர் அயலவர் எல்லாரிடமும் பெயர் பெற்ற கைகாரி அவள்.

சும்மா சொல்லக் கூடாது. வெளிநாட்டில் மூத்த மகளின் செல்வாக்கைக் காண கனடாவிலும் சில நாட்கள் இருந்தவள்தான். அங்கு போய் ஒரு வாரம் கூட ஆகவில்லை. "என்ன சொன்னாலும் ஊரைப்போல வருமே? இது என்ன வீடோ மாட்டுத்தொழுவம் போல ஒரு அறைக்குள்ளே கண்டறியாத ஒரு ரீ.வீ. பின்னே ஒரு றேடியோ அதுக்கிடையிலெ ஒரு கொம்பியூற்றர் அது இது எண்டு - ஒரு ஓடைபோலெ ஒரு கூடத்திலெ என்னை முடங்கிக் கிடக்கவிட்டிட்டு அவையின்ர ஆட்டமும் பாட்டமும் கூத்தும் கும்மாளமும். எனக்கு வெப்பியாரமாகக் கிடக்கு-மூச்சுமுட்டுது. இனி இஞ்ச ஒரு கணம் தரிக்கமாட்டன்" எனப் பிலாக்கணம் பாடி ஒற்றைக்காலில் ஒரேபிடியாக நின்று ஊர் திரும்பி வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

வரும் வழியில் கொழும்பில் சுந்தரியுடன் தங்கியிருந்த பொழுது அவளுக்குத் தீர்மானமாகச் சொல்லி விட்டாள். "இனிமட்டும் நான் பரதேசம் வெளிக்கிட மாட்டன். கனடாவாம் கனடா. அங்கே காலையிலே ஒரு கோழி கூவுற சத்தம் ஒரு திருவந்தாதி மணியொலி ஒரு அறுப்பும் கிடையாது. சீ அதுவும் ஒரு ஊரே. தின்னத் தந்த பச்சைத் தண்ணி மாம்பழத்தையும் கொக்காவின்ர மூஞ்சியில விட்டெறிஞ்சிட்டு வந்துவிட்டன் கண்டியோ! இனி நான் பிறந்த மண்ணிலை பிறந்த வீட்டிலை தான் என்ரை சீவன் போகும். ஆர் எண்டாலும் என்னைக் கண்ணிலை வைக்க விருப்பமெண்டால் ஊருக்கு வாருங்கோ - உன்ர உடன் பிறப்புக்களுக்கும் இதைச் சொல்லிவிடு" எனச்சொல்லிவிட்டு ஊர்போய்ச் சேர்ந்தவள்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கடைக்குட்டி சந்திராவைக் காண அவளால் வன்னிக்குப் போக முடியலை. அந்த இடங்களுக்குப் போய் நின்று பிடிக்கமாட்டாயம்மா'' எனச் சொல்லி எல்லோரும் அவளைத் தடுத்துவிட்டார்கள். கடைக்குட்டி சந்திராவை நீண்டகாலமாய் காணவில்லையே என்ற தாபம் அவள் மனதில் பெரும் ஏக்கமாய்க் குடிகொண்டு விட்டது.

இப்பொழுது ஆறுமாதங்களாக அவள் படுத்த படுக்கையில். பெற்ற பெண்மக்கள் அருகில் இருந்து பணிவிடை செய்யவில்லையே என்ற கவலையே தவிர சும்மா சொல்லிவிடக்கூடாது மகன்மார் மூவரும் எள் என முன்பு எண்ணெய்யாக நின்றனர்.

பாட்டிக்குப் பொறி தட்டிவிட்டது போலும். தனது அந்திமகாலம் நெருங்கி விட்டதென்று, "இனி நான் நீண்டகாலம் இருக்கமாட்டன். கொக்கா கமலா இளயவள் சுந்தரி சந்திரா எல்லாருக்கும் வியளம் அனுப்புங்கோ. இந்தக்கட்டை இனி அதிக நாள் தங்காதெண்டு'' என அனுங்கியதில் மகன்மார் மூவரையும் பதற்றம் பற்றிக் கொண்டது.

"ஏன்னெணை அம்மா விசர்கதை பேசுகிறாய் நீ இப்ப சாகமாட்டாய் நீ இன்னும் ஒரு வருஷமெண்டாலும் எங்களோட இருக்கோணும்'' இது மூத்தவன் விம்மி விம்மி சொன்னது.

"ஏனம்மா உங்களுக்கு என்னம்மா குறை வச்சனாங்கள் இப்படியெல் லாம் பிதற்றுகிறாய்'' இது இளயவன் இயம்பியது.

"எப்படியம்மா எங்களை விட்டிட்டு போக மனம் வந்தது. மக்கள் மருமக்கள் பேரன் பேத்தி பூட்டன் பூட்டி கொள்ளுப்பேரன் கொள்ளுப்பூட்டி எல்லாருடைய சீரும் சிறப்பும் பார்த்து...'' இது மூன்றாமவன்.

"எடெ எடெ மக்களே'' இன்னும் அம்மா உங்களோட இருக்கோணும் எண்டொரு ஆசையோ? எல்லாம் போதுமெடா. ஆனால் கண்மூடுமுன்னே அவள் சந்திராவை ஒரு முறை கண்டனெண்டால்....'' கிழவிக்கு நாக்குளறிற்று. கோடியில் வேப்ப மரத்திலே ஒரு காகம் ஆசூரியமாய்க் கத்துது. அதுவுமில்லாமெ கொப்பர் இராத்திரி கனவிலெ வந்து என்னோட வா போவம் எண்டு கையைப்பிடிச்சு இழுக்கிறார். நான் போகப் போறன். என்னை விடுங்கோ'' பாட்டி கட்டிலிலிருந்து எழ எத்தனிக்கிறாள். எழ முயற்சித்தவள் கண்மூடித்திறப்பதற்குள் மூர்ச்சையாகி கட்டிலில் சாய்கிறாள்.

மறுகணம் செய்தி கனடா கொழும்பு என்று பறந்தது. வன்னிக்கு செல்வதில் சிறிது தாமதமாயிற்று. எனினும் அறிவித்துவிட்டுத்தான் ஓய்ந்தார்கள்.

மூன்று தினங்களுக்குள் மூத்தவள் கமலா பிள்ளைகளுடன் கனடாவிலிருந்து வந்து இறங்கி விட்டாள். கொழும்பிலிருந்து சுந்தரியும் உடனே புறப்பட்டு காலையில் வந்து சேர்ந்துவிட்டாள். மகள்மாரைக் கண்டதும் பாட்டியின் நோய் சிறிது சிறிதாகக் குறைந்து தெம்புண்டாயிற்று. பேரப்பிள்ளைகளுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டப்பிள்ளைகளுடனும் சிரித்துப் பேசிக் கலகலப்பாக இருந்தது அரிய காட்சியாக இருந்தது.

எங்கே பாட்டியின் காரியம் முடிந்துவிட்டால் தேடிய தேட்டத்தைப் பூட்டி வைத்திருக்கும் பெட்டகத்தைத் திறந்து எடுப்பதை எடுத்து விடுவதை விட்டு பாகப்பிரிவினை செய்து கணக்கு முடித்து வண்டியேறிவிடலாம் எனக் கருதிய மகள்மாரின் வாயில் மண்.

பாட்டி மயக்கம் தெளிந்ததும் முதல் செய்த காரியம் என்ன, தட்டுத்தடுமாறி கையினால் தடவி தனது தலயணையின் கீழ் வைத்த பெட்டகத்தின் திறப்பைத்தான். ம்...பத்திரமாய் இருந்தது அது. அந்தளவில் பாட்டிக்குப் பரமதிருப்தி.

இதெலல்ாம் ஒரு நாட் பொழுதுதான். மீண்டும் பாட்டிக்கு மயக்கம் கண்டது. அம்மா என்ற விளிப்புக்கு விழியை மலர்த்துவதும் அனுங்குவதும் மீண்டும் மயக்கத்தில் ஆழ்ந்து போவதுவமாய் கண்ணாமூச்சி காட்டிக்கொண் டிருந்தாள்.

இது வல்ல சீவன். இது சீவன் இப்போதைக்குப் போகாது போலை. என எண்ணிய மகள்மார் “எட தம்பி இவர் மயில்வாகனப் பாரியாரியாரைக் கூப்பிட்டுக் காட்டிப் பார்ப்பம் - எந்தளவில் இழுக்கும் எண்டு” எனச் சொன்ன ஆலோசனை எல்லாருக்கும் சரியாகப்பட்டது.

“இது இத்தோட போறது தான்- ஆனால் இனி அட்டமியோட தான்- ஒரு கிழமையெண்டாலும் இழுக்கும்”என்ற பரியாரியாரின் வார்த்தை எல்லாருக்கும் கசப்பு மாத்திரை விழுங்கியது போல ஆயிற்று.

“நானும் பிள்ளைகளும் இஞ்ச இருக்க அவர் கொழும்பிலை கடைச்சாப்பாடு - ஒத்துவராது. அவரும் சலரோக வியாதிக்காரன் - கண்டதையும் சாப்பிட்டு பத்தியத்தையும் முறிச்சுப் போடுவார். பின்னே மூத்தவள் வித்தியாவுக்கும் ‘ஏ.எல்’ சோதனை கிட்டுது. “ரியூசன் எல்லாம் தப்புது” சுந்தரி வெகுவாக அலுத்துக்கொண்டாள்.

“என்ர பாடென்ன அங்கை வெளி நாடெண்ட பேர்தான் சிறைச்சாலைச் சீவியம். நாங்கள் இல்லாமல் ஒரு கணம் அண்டலிக்கமாட்டார். என்ன சறவைப்படுசாரோ தெரியாது. பொடியன்ர லீவும் முடிஞ்சிது. விசா நீடிக்க முடியாது. எனக்கு இதுகளை நினைக்க நித்திரையும் வருகுதில்லை.”கமலா அலவலாதிப்பட்டாள்.

“அக்காமாரே அம்மாவை நீங்கள் எல்லாரும் கடைசி நேரத்திலை கண்ணிலை வைச்சிட்டியள் தானே. இனி நீங்கள் புறப்படுங்கோ நாங்கள் அம்மாவின்ர கடமைகளைச் செய்து சங்கையோட ஆளை அனுப்பி வைக்கிறம்” என்று தம்பிமார் மூவரும் அக்காக்காரிகள் இருவருக்கும் ஆறுதல் கூறினர்.

பின்னே வன்னியில் இருந்து சந்திரா வரவில்லையே என்ற கவலையும் தீர்ந்தது. அன்று காலை சந்திராவும் வந்து இறங்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதோ வன்னிக்குப் போன பயணம். சந்திரா அம்மாவைக் காணாது பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன.

கொழும்பில் இருந்தும் கனடாவிலிருந்தும் சகோதரிகள் வந்தும் கூட உந்தா உதிலை இருக்கிற வன்னியில் இருந்து இத்தனை காலம் அவளால் வரமுடியாமல் போனதுதான் சோகம்.

அம்மாவைக் கண்டது - அதுவும் இந்த நிலையில் கண்டது சந்திராவுக்கு விம்மல் பொருமலாய் வெடித்தது. இத்தனை காலம் பொத்தி வைத்த சோகம் பொட்டென்று மடைதிறந்து...வாய் குளறிற்று.

''அம்மா''

அம்மாவிடமிருந்து ஒரு அசுமாத்தமும் இல்லை.

''அ..ம்..மா...

பாட்டி மெல்ல விழி மடலை மலர்த்தி ''ஆர் சந்திராவே...

சந்திரா வால் சோகத்தை அடக்க முடியவில்லை. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு ''ஓம் அம்மா சந்திரா. நான்தான் உன்ர சந்.....''வார்த்தையை முடிக்க அவளால் முடியவில்லை.

பாட்டியின் முகம் சுருங்கியது ''எடி சந்திரா'' இது உன்ர குரலில் லையடி..இது சந்திராவின் குரல்தானோ... இவளுக்கு என்னவோ நடந்திட்டுது. இவளின்ர குரல் ஏன் இந்த மாதிரி பிசுறு தட்டுது. உன்ர துடிப்பும் எடுப்பும் துடுக்கும் பேச்சும் எங்கேயடி? உனக்கு என்னடி நடந்தது சொல்லு ராசாத்தி''

பிள்ளையின் சுபாவம் பெற்றவர்களுக்குத் தெரியாததா. சந்திராவின் குரலும் பேச்சும் தொனியும் அவளின் உள்ளக்குமுறலை ''பளிச்'' சென்று காட்டிக்கொடுத்துவிட்டது. அவளுக்கு இந்தப் பத்து வருடகால எல்லைக்குள் நடந்துவிட்ட சோகம்.. தமிழ் ஈழமே யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் போது அவள் கணவன் மாரடைப்பால் மரணமடைந்ததும் அவரின் அந்திமக் கிரிகைகளைக் கூட சரிவர நிறைவேற்ற முடியாமல் தத்தளித்தும், அவளின் மூத்தமகனும் மருமகளும் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு தீப்பற்றி எரிவதைக் கண்முன்னே பார்த்திருந்ததும், அவர்கள் விட்டுச்சென்ற மழலை கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் பரிதவிக்கும் சோகம்... இளயவன் தமிழ் மண்ணுக்காகப் போராடி மாவீரரான காவியம் இத்தனை நடந்தும்கூட மீந்திருக்கும் கடைக்குட்டி கண்ணனுக்காக ஊசலாடும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் சோகம். எல்லாம் இழந்தும் இழப்பதற்கு ஒன்றும் இல்லை என்ற ஏதிலியாய்...

இதை எல்லாம் இன்றோ நாளையோ மறையப்போகும் அன்னைக்குக் கூறி அவளையும கவலையில் ஆழ்த்தி அவலமாகச் சாகவிடவேண்டாமே...

''ஒன்றுமில்லையம்மா, பயணம் செய்த அலுப்பு வேறொன்றுமில்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையடி சந்திரா உனக்கென்ன நடந்தது. சொல்லடி என்ர செல்லம்" பாட்டியின் கை சந்திராவின் கன்னத்தை ஆதுரமாகத் தடவுகிறது. மறுகணம்... கை சோர்ந்து வீழ்கிறது.

"அம்மா" என்ற ஓலம் பேரிரச்சலாய் அறையை நிரப்புகிறது.

என்னவோ எல்லோரும் பிரசன்னமாய் இருக்கையில் பாட்டியின் ஆவி பிரிந்தது. அன்று வெள்ளிக்கிழமை.

"ஆ" இண்டைக்குச் சவம் எடுக்கோணும். சட்டுப்புட்டென்று காரியத்தைப் பாருங்கோ" இது அங்கிருந்த ஒரு முதியவர்.

"இது நல்ல கதை. கொழும்பிலையிருந்து அவர் விடிய வந்திடுவார் நாளைக்கு எடுக்கலாம்" இது இளையவள் சுந்தரி.

"அதெப்படி நாளைக்கெடுக்கிறது? நாளைக்குச் சனிக்கிழமை. சனிப்பிணம் தனிப்போகாது பிறகு வில்லங்கம்"

"இனி என்ன ஞாயிறு தான். ஒரு விதத்திலை நல்லதாய்ப் போயிட்டுது. காடாத்து எட்டு எல்லாம் அன்றைக்கே முடிச்சிடலாம். எல்லாருக்கும் வசதியாக"

ஞாயிறும் விடிந்தது. ஈமக்கடன் காடாத்து முடிந்து இரவு எட்டு மணிக்குத்தான் எட்டு முடிந்தது. எட்டுப் படையலில் 'அம்மாவுக்கு இது பிடிக்கும் அது பிடிக்கும்' என்று சொல்லிச் சொல்லி பாட்டிக்குப் பிரியமான நெத்தலி மீன் போட்ட ஒடியல் பிட்டு மரவள்ளிக்கிழங்குத் துவையல் இப்படி எத்தனையோ பண்டங்கள் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து வைத்துப்படைத்தனர். எல்லாம் நிறைவேற இரவு எட்டு மணிக்கு மேலாயிற்று. சாப்பாடு முடிந்து வந்தவர் எல்லாம் கலைந்த பின் எல்லோரும் திண்ணையில் இளைப்பாறியபடி.

மூத்தவள் சொன்னாள் "தம்பி அம்மா இத்தனை காலம் பொத்தி வைச்ச இந்தப் பெட்டகத்தைத் திறந்து பார்"

எல்லா மக்களின் விழிகளிலும் ஆவல் பொங்கி ததும்பிற்று. "பெட்டகத்துக்குள் என்ன இருக்கும்?" எல்லோர் மூளையிலும் வினாக்கொக்கி.

"அம்மாவை மூத்த அண்ணன் தானே பராமரிச்சவர். மூத்தண்ணனுக்குத்தான் அந்தச் சொத்து சேரோணும்" இது சந்திரா.

"ஏன்? அம்மாவின்ர சொத்து எல்லாருக்கும் பங்குதானே" இது இளையவள். இளையவன் இந்திரனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "எடி பெண்பிள்ளைகளுக்கு ஒரு சொத்தும் இல்லை. எல்லாருக்கும் சீதனம் தந்து கை கழுவி விட்டாச்சு. பிறகென்ன?"

"இது நல்ல விண்ணாணக் கதை. நாங்கள் என்ன புறத்தியே? நாங்களும் பிள்ளையள் தானே. சொத்து எல்லாருக்கும்தான். அதையும் பார்ப்பம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவன் முருகவேல் இடைமறித்தான். "அப்பு செத்துப் போக அம்மா என்னவெல்லாம் பாடுபட்டு எங்களை ஆளாக்கிக் கரை சேர்த்தவ. மூத்தக்கா, இளையக்கா, இளையண்ணா, நான் எல்லாரும் ஆண்டவன் புண்ணியத்தில் நல்லாக இருக்கிறம் தானே. மூத்த அண்ணாதான் வேலைவெட்டி எல்லாம் விட்டு அல்லும் பகலும் அடுகிடை கிடந்து அம்மாவை பார்த்தவர். பின்னெ சின்னக்காவும் நொடிச்சு நொந்திருக்கிறா. பெட்டியைத் திறவுங்கோ. உள்ளதைப் பிரித்து இரண்டு பேரும் எடுக்கட்டும்"

"அதெப்படி? அம்மாவின்ர தோட்டம் ஆறுபேருக்கும் தான்"

அறுவரும் நீயோ நானோ என்று குடுமி பிடிக்காத குறையாக பிய்த்துப்பிடுங்கத் தொடங்கி விட்டனர்.

நாய் கடி பூனை கடி.

"சரி சரி கொஞ்சம் பொறுங்கோ, பெட்டியைத் திறந்து பார்ப்பம்" இளையவன் பெட்டியைத் திறந்தான். அப்பு செத்துப்போக பிழைப்பிற்காக அப்பம் சுட்டு விற்ற நினைவாக பழைய அப்பச் சட்டி, தட்டகப்பை, வெற்றிலை பாக்கு வைத்திருந்த வண்ண ஓலைக்கீற்றால் இழைத்த கொட்டைப்பெட்டி, கிளித்தலையுடன் ஒரு பாக்கு வெட்டி, சித்திர வேலைப்பாட மைந்த சுண்ணாம்பு கறண்டகம், பின்னே வெற்றிலை பாக்கு இடிக்கிற சின்ன உரல் உலக்கை, தைலாப்பெட்டி, பித்தளையில் செய்த ஐந்து அலகுச் சித்திரக்குத்துவிளக்கு, தூண்டாமணிவிளக்கு....."

"இதுதான் அம்மாவின் தேட்டம்"

"இந்த பொக்கிசத்தைத்தான் அம்மா பொத்திவைச்சு அடை காத்தவவே?"

"அம்மாவின்ர இருப்பும் செருப்பும் இந்த செம்பாலும் செப்பாலும் செய்த பண்டங்களே"

"எல்லாம் மூத்தண்ணர் எடுக்கட்டும். அவருக்கும் வேண்டாம் எண்டால் நூதனசாலைக்கு அனுப்பி விடுங்கோ"

அடுத்த இரு நாட்களுக்குள் எல்லோரும் தங்கள் வழிச்செல்ல வீடு "ஓ" வென்று வெறிச்சோடிக்கிடந்தது. பெட்டகத்தில் கிடந்த பண்டம் யாரும் சீண்டுவாரற்றுக் கிடந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வருகை

## கே.எஸ்.சுதாகர்

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*தெல்லிப்பளை வீமன்காமத்தைச் சேர்ந்த கே. எஸ். சுதாகர் 1962ல் பிறந்தவர். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியலாளராகப் பட்டம் பெற்றவர். தற்போது அவுஸ்திரேலியாவில் இயந்திரப் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார், கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதிவருகிறார். நோர்வே தமிழ்ச்சங்கம், ஈழம் தமிழ்ச்சங்கம் - மெல்பர்ண் அவுஸ்திரேலியா, மரத்தடி - இணையம், இலண்டன் பூபாள இராகங்கள் சிறுகதைப் போட்டி ஆகியவற்றில் பரிசுகள் பெற்றுள்ளார்.*

*இவரது முகவரி :- 28 Throsby Cr. Deer park, Victoria 3023, Australia.*

**உ**ண்மையில் நேற்றைய தினமே குழந்தை பிறந்திருக்க வேண்டும். ஒரு நாள் பிந்தி விட்டது. இரவு பகலாக விழித்திருந்ததில் செல்வாவிற்கு இந்தக் காலை வேளையிலும் அசதியாக இருந்தது. ஹொஸ்பிற்றலுக்குப் போவதற்கு ஆயத்தமாகக் காரை வீட்டு முகப்பினிலே நிறுத்தியிருந்தான் அவன். "சாந்தினி வெளிக்கிடுவம் என்ன!"

சாந்தினி பயந்தபடியே படுக்கைக்கும் ரொயிலற்றுக்குமாக, தனது பென்னாம்பெரிய வயிற்றையும் தூக்கிக் கொண்டு நடை பயின்று கொண்டிருந்தாள். செல்வாவிற்கு அவளைப் பார்க்க கவலையாக இருந்தது.

சாந்தினி வெளிக்கிடுவதற்கு அரைமணி நேரமாவது எடுக்கும் என்று நினைத்தவாறே ரெலிவிஷனிற்கு முன்னால் அமர்ந்தான் செல்வா. நேற்றைய தினம் 'சிற்றியில்' நடந்த ஊர்வலமொன்று செய்தியினூடாகப் போய்க் கொண்டிருந்தது. புதிதாக நாட்டினுள் வருபவர்களுக்கு எதிராக, சுலோகங்களைத் தாங்கியவாறு மௌரி இனமக்களும் வெள்ளையினத்தவர் களுமாகப் போய்க்கொண்டிருந்தனர்.

அடுத்த 'யுனிட்'டில் வசிக்கும் மாட்ரா, இவர்களின் வீட்டுக் கதவைத் தட்டினாள். நிலைமையை விசாரித்தாள். சாந்தினியின் வயிற்றை மெதுவாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவி விட்டு சின்னக் குழந்தையைப் போல சிரித்தாள். அவளின் கனிவான பேச்சு சாந்தினிக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்தது. தாங்கள் 'ஹிமில்டன்' போவதாகவும் டேவிட்டின் மகளின் வீட்டில் இரண்டொரு நாட்கள் தங்கிவிட்டு வருவதாகவும் கூறிச் சென்றாள். டேவிட்டும் அவனது மனைவி மாட்ராவும் எப்போவாவது இப்படிப் போய் தங்கிவிட்டு வருவார்கள். ஹிமில்டன் ஆக்லாந்திலிருந்து ஒன்றரை மணித்தியாலம் கார் ஓடும் தூரத்திலுள்ளது.

இவர்களின் வீடு பிரதான சாலையிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் சிறு பாதையில் இருக்கின்றது. ஒரு புறத்தே மூன்று யுனிட்டுக்கள் இருந்தன. அதில் முதலாவதில் இவர்களும், அடுத்ததில் டேவிட்டும், மற்றதில் மாறி மாறிச் செல்லும் மனிதர்களுமாக இருந்தார்கள்.

சிறு பாதையின் எதிர்ப்புறத்தில் இருந்த வீட்டிலிருந்து கிறேஷ் இவர்களின் வீட்டையே பார்த்தபடி நின்றிருந்தாள். அவளைப் பார்ப்பது- வெள்ளை வெளேர் என்ற ஒரு தேவதையைப் பார்ப்பது போன்று இருக்கும். அவளது கையில் இருந்த அன்றைய தினசரிப் பேப்பரான 'நியுசிலாண்ட் ஹெரால்ட்' இவர்களின் திசை நோக்கிப் படபடத்தது. ஏதாவது நாட்டுப் பிரச்சனைகள் சம்பந்தமான தகவல்கள் வந்தால் கொண்டு வந்து காட்டுவாள். எழுபத்தெட்டு வயதைத் தாண்டிவிட்ட அவள் இன்னமும் துடிப்புடனே காணப்படுகின்றாள். இவர்களுக்கு கரைச்சல் கொடுக்கக் கூடாது என நினைத்தாளோ தெரியவில்லை, மாட்ராவுடன் கதைத்துவிட்டுத் திரும்பிப் போய் விட்டாள்.

சாந்தினி இரண்டு நாட்களுக்கு முன்பும் ஒருதடவை 'கிறீன்லேன்' ஹொஸ்பிட்டல் போய் திரும்பியிருந்தாள். பத்துப் பதினைந்து நிமிட இடைவெளியில் வலி- வந்து வந்து போனால் உடனே ஹொஸ்பிட்டல் வரும்படி சொல்லியிருந்தார்கள்.

மூன்று மாதங்களில் 'ஸ்கானிங்' செய்தபோது என்ன குழந்தை என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கின்றதென்று டாக்டர் சொன்னார். ஸ்கானிங்கில் 'தெரியவில்லை' என்று ஆசிய நாட்டவர்களுக்கு சொன்னால், பெரும்பாலும் பெண் குழந்தைகள்தான். கள்ளிப்பாலின் மகத்துவம் மேற்குநாடுகள்வரை பரவிவிட்டது. கிறேஷ் கூட சாந்தினிக்கு பெண் குழந்தைதான் பிறக்கும் என்று அவளின் வயிற்றைப் பார்த்துச் சொன்னாள். குழந்தை எதுவென்றாலும் அவர்களுக்கு மகிழ்ச்சிதான். குழந்தை இல்லாமல் ஏங்குபவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும்.

"இஞ்சாருங்கோ நனாவைக் கொஞ்ச நாளாக் காணேல்லை. ஒருக்கா என்னண்டு எட்டிப் பாருங்கோ"

"கிழவி இப்பதான் உதிலை வெளிக்கிட்டபடி ஒரு பேப்பரோடை நிண்டதப்பா. வந்தா எங்கடை நேரத்தைத்தான் கொண்டு போகும்."

இரண்டு மூன்று நாட்களாக கிழவியின் ஆரவாரம் இல்லைத்தான். இல்லாவிடில் பூங்கன்றுகளுக்கு நீர் வார்ப்பாள் அல்லது வளவிற்குள் அங்குமிங்குமாக நடந்து தான் நாட்டி வைத்திருந்த பூங்கன்றுகளை ரசித்துக் கொண்டிருப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாவும் சாந்தினியும் இந்த நாட்டிற்கு வந்து எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆரம்பத்திலிருந்தே இதே தெருவில்தான் இருக்கின்றார்கள். முன்பு ஒரு படுக்கை அறை கொண்ட யுனிட்டில் இருந்தார்கள். வசதி மிகவும் குறைந்த மலிவான வாடகை வீடு. இப்பொழுது அழகான மிகவும் வசதி வாய்ந்த 'கராஜ்' கொண்ட யுனிட். இதுவும் வாடகை வீடுதான். அப்போதெல்லாம் வேலை கிடைக்காத காலங்களில் இந்த வீதியால் கடைகளுக்குப் போய் வந்திருக்கின்றான். 'இந்த வீடுகளில் இருப்பதற்கு எங்களுக்கும் ஒரு காலம் வராதா?' என்று மனம் ஏங்கும். அப்படிப்பட்ட வீடொன்றில் இருந்து, இந்தக் கிறேஷ் இரண்டு மூன்று வயது வந்தவர்களையும் போட்டுக் கொண்டு லாவகமாகக் கார் ஓட்டுவாள். வீட்டிற்குள்ளாலேயே கராஜ்ஜிற்குப் போய், 'றிமோற் கொன்றோலினால்' கராஜின் கதவைத் திறந்து கொண்டு காரை எடுத்துவருவாள். அவள் காரில் வரும் அழகை எத்தனையோ தடவைகள் பாதை மருங்கில் நின்று பார்த்திருக்கின்றான்.

கிறேஷ் தன்னை நனா என்று கூப்பிடும்படி முதற்சந்திப்பிலேயே இவர்களிடம் கூறியிருந்தாள். முதற்சந்திப்பு! அது நடந்தது ஒரு இரண்டரை வருஷங்கள் இருக்கும். இப்பொழுது சற்று முன் நின்றாளே, கையில் பேப்பருடன் இவர்களின் வீட்டை நோக்கியபடி, அப்படித்தான் அன்றும் நின்றாள்.

நனாவின் சிநேகிதி ஒருத்தி இவர்கள் இருக்கும் வீட்டில் முன்பு இருந்தாள். இப்பொழுது அவள் வயது முதிர்ந்தவர்கள் தங்கும் இடத்தில் இருக்கின்றாள். அவள் அங்கு போக இவர்களுக்கு இந்த வீடு கிடைத்துக் கொண்டது. தினமும், அந்தப் பழைய நினைப்பில்தான் இவர்களின் வீட்டை நோக்கியபடி நனா நிற்கின்றாளா? நனா இந்த வீட்டில் முப்பது வருடங்களாக இருக்கின்றாள். அவளுக்கு மூன்று பிள்ளைகள். மூன்றுபேரும் வெவ்வேறு திக்குகளில் இருக்கின்றார்கள். இங்குள்ளவர்களில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் பெற்றோர்களின் தயவில் தங்கியிருப்பதில்லை. அவர்களுக்கு அரசு பணம் கொடுக்கிறது அல்லது சுயமாகச் சம்பாதிக்கின்றார்கள். ஒருவரும் இன்னொருவர் மீது தங்கியிருக்கத் தேவையில்லை. அது இங்குள்ளவர்களின் வாழ்க்கை முறை. அதுவே இந்த நாட்டிலிருக்கும் பெற்றோருக்கும் பிள்ளை களுக்குமிடையே நெருக்கம் இல்லாததற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

"என்ர புருஷன் என்னை விட்டுப் போய் முப்பது வருஷங்களாகி விட்டன. அதுக்குப் பிறகு நான் என்ரை பிள்ளைகளை வளர்க்கக் கொஞ்சம் கஷ்டப்பட்டுத்தான் போனன். இப்ப அவங்க மூன்று பேரும் குடும்பமா நல்ல சந்தோஷமாக இருக்கினம். எப்பவாவது ஈஸ்டர், பிறந்தநாள், மதர்ஸ் டே, கிறிஸ்மஸ் எண்டு வந்து போவினம். அதிலை ஒண்டும் தப்பில்லை" நனா உதடுகள் நடுங்க மெல்லிய குரலில் சொன்னாள். கணவர் இறந்த பின்பும், பிள்ளைகள் வெவ்வேறு இடங்களுக்குப் போன பின்னும் கிழவி யாருக்கும் தலை குனியாமல் ராசாத்தி போல வாழ்கின்றாள். அதற்கு இந்த நாடு உத்தரவாதம் அளிக்கின்றது.

"எங்கட நாட்டில பெற்றோரைப் பிள்ளைகள் தெய்வமாகத்தான் நினைப்பினம்" என்று சாந்தினி கிழவியை இடைமறித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உண்மைதான். தேசத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடிதானே வாழவேண்டும். எந்தப் பெற்றோரும் எந்த நாளுமே இளமையா இருக்க முடியுமா? முதுமை வரத்தானே செய்யும்! அப்போது எங்கடை வாழ்க்கை முறை சிலவேளை அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்குமல்லவா?”

அவளின் தனிமை பூஞ்செடிகளும், புத்தகங்களும், கம்பளி உடுப்புக்கள் பின்னுவதும் இன்னும் பிற சுகமான நினைவுகளுமாகக் கழிகின்றன. இப்பொழுதெல்லாம் நனாவினால் கார் ஓட்ட முடிவதில்லை. காரையும் விற்றுவிட்டாள். கடைகளிற்கும் ஹொஸ்பிட்டலுக்கும் ரக்ஷியில் போய் வந்தாள். இடையில் ஒருநாள் - நடு இரவில் அம்புலன்ஸ் ஒன்று அலறிக்கொண்டு வந்து நனாவை ஏற்றிச் சென்றது. இரண்டு நாட்கள் கழித்து திரும்பவும் வீட்டிற்கு வந்த அவள் மீண்டும் சுறுசுறுப்பாகிவிட்டாள். முதுமையை அவள் ஒரு பொருட்டாக நினைத்ததேயில்லை. அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழும்பி விடுவாள். காலையில் தினசரி பேப்பர் படிப்பாள். இரவில் புத்தகம் படிப்பதும் கம்பளி உடுப்புகள் பின்னுவதையும் வழமையாக வைத்திருந்தாள். இரவு பன்னிரன்டு மணிக்குள் உறங்கவே மாட்டாள். அவளிடமிருந்து நிறையவே கற்றுக்கொள்ளாம்.

செல்வா வேலைக்குப் போகும் பகல் நேரங்களிலெல்லாம் சாந்தினியின் பொழுதுகள் நனாவுடன்தான். அப்பொழுதெல்லாம் சாந்தினிக்கு நனாவுடன் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கதைக்காவிட்டால் சரிவராது. முதலில் ‘ஹலோ, சீ யூ’ என்று சொல்லித்திரிந்த சாந்தினி, நனாவைச் சந்தித்துப் பழகியதில் ‘ஹவ் ஆ யூ’ போன்ற தொடர் வசனங்களையும் பேசப் பழகிக் கொண்டாள். தினமும் நனா வாசலிற்கு வந்து, அங்கிருந்தபடி சாந்தினியை நோக்கி ஒரு “ஃப்ளைங் கிஸ்” விடுவாள். பக்குவமாக ஏந்தி இங்கிருந்தபடியே சாந்தினி திரும்பவும் விடுவாள். பிறகு ஓடோடிச் சென்று அவளை விழுத்தி விடுமாப்போல் கட்டிப்பிடிப்பாள் சாந்தினி. ஊரிலிருக்கும் தனது அம்மாவைத் தான் கவனிக்கவில்லையே என்ற ஏக்கம், கிழவியில் தணியும். இவர்களின் வருகையின் பிற்பாடு நனாவின் வாழ்க்கையில் திருப்பம் ஏற்பட்டது. செல்வாவும் சாந்தினியும் விழுந்து விழுந்து நனாவிற்கு உதவி செய்தார்கள். ஒரு வெள்ளைக்காரப்பெண்ணுக்கு தாங்கள் உதவி செய்வதைப் பெருமையாக எண்ணினார்கள். நானாவைக் காரின் முன்சீற்றில் இருத்தி, தானே காரை ஓட்டிச் செல்வதில் சாந்தினிக்கு அலாதிப்பிரியம். ஆரம்பத்தில் இவர்களின் உதவியை நனா எதிர்த்தாள். அவளிற்குத் தானே தன் சொந்தக்காலில் நிற்பதற்குத்தான் பிரியம். சொந்தக்காலில் நிற்பதற்குத்தான் இந்த நாடு சிறுவயதில் இருந்தே கற்றுக் கொடுக்கின்றது. அந்தப் பாரம்பரியத்தை முறியடித்து இவர்கள் வெற்றி கொண்டார்கள. ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அவளைக் கூட்டிச் சென்றார்கள். “பாத்தியளே, ஒரு வெள்ளையை எங்கட பக்கம் திருப்பி விட்டோமே!” என்பாள் வீறாப்பாக சாந்தினி. நனாவுடன் பழகுவதால் நுனி நாக்கில் ‘இங்கிலிஸ்’ தவழுகின்றது என்றாள். நனாவிற்கு காலில் புண் என்றால் இவர்களுக்குக் கழுத்திலே நெறி போட்டது.

“ஃப்ளையிங் கிஸ்”கள் வீட்டிற்கு வீடு பறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தினி கர்ப்பமானாள். அதன் பின்பு சாந்தினியும் நனாவும் தினமும் கொஞ்சத்தூரம் நடை பழகினார்கள். இப்போது இரண்டு பேரினதும் நடை ஒரே மாதிரித்தான். தள்ளாத வயதில் கிழவியும் வண்டியைத் தள்ளிக் கொண்டு நிற்கும் சாந்தினியையும் ஒரு சேரப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

வாசலில் வந்து, இடுப்பை ஒரு புறமாகச் சரித்துக் கொண்டு " நான் ரெடி" என்றாள் சாந்தினி. வீட்டை விட்டு வெளிக்கிடுகையில் ரெலிபோன் அடித்தது. ஆராவது நண்பர்கள் அல்லது மாமாவாக இருக்கலாம் என்றாள் சாந்தினி. சற்று நேரம் தாமதித்துப் போகலாம் என்று நின்று கொண்டார்கள். ரெலிபோன் மீண்டும் அடித்தது. றிசீவரைத் தூக்கும்போது 'படக்' என்று மறுமுனையில் அடித்து வைக்கப்பட்டது.

"உது அவங்கடை வேலைதான்" என்றாள் சாந்தினி. கொஞ்ச நாட்களாக நாட்டில் கள்வர்களின் திருவிளையாடல்கள் அதிகரித்துவிட்டன. போனகிழமை தியேட்டரில் நல்ல 'த்ரில்' படம். படம் பார்த்துவிட்டு குலை நடுக்கத்துடன் வீட்டிற்கு வந்தவர்களில் பலருக்கு கள்வர்கள் 'த்ரில்' காட்டி யிருந்தார்கள். தகவல் தொழில் நுட்பப் பரிமாற்றம் நாட்டில் வெகுவாகத்தான் முன்னேறிவிட்டது.

செல்வா நாட்டிற்கு வந்த புதிதில் பஸ்சினில் 'கிளின் இனிங்ஸ்' போய் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவான். பஸ்சிற்கு போக வர இரண்டு டொலர்கள் போதும். வீடு வந்தவுடன் பஸ்சினிலிருந்து பொருட்களை இறக்கி, வரிசையாக நிற்கும் 'போஸ்ற் பொக்ஸ்' அருகில் வைத்துவிட்டு, ஒவ்வொன்றாக வீட்டிற்கு எடுத்துச் செல்வான். பிரதான வீதியிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் சிறுபாதை வழியாக நேராக நடந்து போனால் வீடு வரும். சிலவேளைகளில் கொஞ்சப் பொருட்களை எடுத்துக் கொண்டுபோய் வீட்டினில் வைத்துவிட்டு, களைப்பாறி தேநீர் குடித்துவிட்டு மீண்டும் போய் மிகுதிப் பொருட்களை எடுத்து வந்திருக்கின்றான். அவ்வளவிற்கு அப்போதெல்லாம் பயம் இருக்கவில்லை. இப்போது ஒரு குடையை வைத்துவிட்டு வந்தாலும் அந்த இடத்தில் பத்திரமாக இருக்காது.

"என்ன உதுக்குப்போய் கடுமையாக யோசிக்கிறியள். நனா வீட்டை வடிவாப் பார்த்துக்கொள்ளுவா. எதுக்கும் அவவிட்டை ஒருக்காச் சொல்லிப் போட்டுப் போனால் நல்லது." என்று ஆலோசனை சொன்னாள் சாந்தினி.

செல்வா நனாவின் வீட்டிற்கு ஓடினான். அப்பொழுது, நனா பேசி தனது நேரத்தை வீணடித்துவிடுவாள் என்ற எண்ணம் தோன்றவில்லை. தேவை என்ற ஒன்று வரும்போது மனம் ஓடத்தான் செய்கின்றது. நனா வீட்டில் இருக்கவில்லை.

"கிழவி பூசி மினுக்கிக் கொண்டு எங்கையோ போயிட்டுது" ஏமாற்றத்துடன் செல்வா சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்ப என்ன லட்சமா எங்கடை வீட்டிலை கொட்டிக் கிடக்கு. வாங்க போவம்'' என்று இழுத்தாள் சாந்தினி.

சொன்னா என்ன, சொல்லாட்டி என்ன நனா வீட்டைப் பார்த்துக் கொள்ளுவாள் என்ற தைரியத்தில் வீட்டைப் பூட்டிக் கொண்டு காரை தெருவிற்குள் செலுத்தினான் செல்வா.

* * * * * * *

ஹொஸ்பிட்டலில் ஒன்றும் குழந்தை சுகமாகப் பிறந்து விடவில்லை. சாந்தினிக்கு முதலில் ஏதோ களிம்பு பூசினார்கள். பின் முள்ளந்தண்டில் ஊசி ஏற்றினார்கள். அதற்கும் சரிவராவிடில் 'சிசேசிரியன்' என்று சொல்லிவிட்டார்கள்.

அடுத்த அறையில் இருந்த 'மௌரி' இனப்பெண்ணிற்கு குழந்தை பிறந்திருக்கவேண்டும். அவர்களின் அறை ஒரே ஆரவாரமாக இருந்தது. திபுக்கு திபுக்கு என்று பெரிய உருவங்களில் அவளின் உறவினர்கள் வந்தும் போய்க் கொண்டும் இருந்தார்கள்.

என்னதான் இருந்தாலும் குழந்தை பிறக்கும் போது, அந்தக் குழந்தையின் தந்தை 'டெலிவரி றூமிற்குள்' உடன் இருந்தாக வேண்டும் என்பதும் தொப்புள் கொடியை அவனே வெட்ட வேண்டும் என்பதும் செல்வாவின் மனதை நெருடத்தான் செய்தது. மதியம் வந்தவர்களுக்கு, இரவு ஏழுமணியளவில் குழந்தை கிடைத்தது. சுகப் பிரவசம். பெண் குழந்தை. செல்வா உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ரெலிபோன் செய்தான். நனாவையும் டேவிட்டையும் ரெலிபோனில் பிடிக்க முடியவில்லை. நேரம் இருட்டி விட்டபடியால் மாமாவின் குடும்பம் மாத்திரம் அடித்துப் பிடித்துக் கொண்டு எட்டு மணிக்குள் வந்து சேர்ந்தார்கள். மாமி குடு குடுவென்று நடந்து வந்து, கொண்டு வந்த பொக்கிஷத்தை சாந்தினியின் கண் பார்வைக்குக் கிட்ட வைத்தாள்.

செல்வா வந்தவர்களுக்கு 'சொக்லேற்' குடுத்தான். மாமாவிற்கு ஏழுவயதில் ஒரு பெண்ணும் ஐந்து வயதில் ஒரு ஆணும் இருந்தார்கள். அவர்கள் உள்ளேயும் வெளியேயுமாக ஓடித்திரிந்தார்கள். பெண் குழந்தை 'சொக்லேற்றைச்' சாப்பிட்டு விட்டு பேப்பரை தவறுதலாக வாசலில் போட்டு விட்டாள். இதை அவதானித்துக் கொண்டிருந்த மௌரி மனிதன் ஒருவன் அதை எடுத்துக் குப்பைத் தொட்டியினுள் போடும்படி அவளிடம் சொன்னான்.

''தாங்கள் படு குப்பை. அடுத்தவருக்கு சுத்தத்தை பற்றிச் சொல்லித் தரவந்திட்டினம்'' என்று கோபத்துடன் புறுபுறுத்தான் செல்வா.

''அவையள் தங்கட வீட்டைக் குப்பையா வைத்திருந்தாலும், நாட்டை நல்ல வடிவாகத் தான் வைச்சிருக்கினம்.'' மகள் செய்ததுதான் பிழை என ஒத்துக்கொண்டார் மாமா.

''தம்பி செல்வா! இண்டைக்கு பேப்பர் பாத்தனீரோ?''

''இல்லை மாமா. எங்கை எனக்கு நேரம். ஏன் என்ன புதினம்?''

''புதிசா நாட்டுக்கை வாற 'ஏசியன்ஸ்' பற்றி ஏதோவெல்லாம் உளறித் தள்ளி இருக்கிறார் எங்கடை பாராளுமன்ற எதிர்கட்சித்தலைவர்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துவங்கிட்டினம் அரசியல். உதுகளைப் போட்டிட்டு இஞ்சை வந்து குழந்தையைப் பாருங்கோ" என்று மாமி கத்தினாள். மாமா தொட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து குழந்தையைப் பூந்து பூந்து பார்த்தார்.

"காது கொஞ்சம் கறுப்பாக் கிடக்கு. இக்கணம் இவள் கறுப்பிச்சியா வருவாளோ?" என்று சமசியப்பட்டார்.

"ஏழெட்டு வருஷமாப் பிள்ளையில்லாமல் தவமாய்த் தவமிருந்து பெத்திருக்குதுகள். இவருக்கு கறுப்பும் சிவப்பும்."

"எனக்குத் தெரிஞ்சு, பிள்ளையில்லாமல் வந்த கனபேருக்கு இஞ்சை பிள்ளை பிறந்திருக்கு. அதுக்கு நியூசிலாந்துச் சுவாத்தியமும் ஒரு காரணம் எண்டு நினைக்கிறன்" என்று மேலும் தனது கண்டுபிடிப்பை வெளியிட்டார் மாமா.

சற்று முன்பு குதூகலித்த அறை இப்பொழுது வெறிச்சோடிப் போயிருந்தது. சாந்தினியும் குழந்தையும் களைப்பு மிகுதியினால் உறங்கிப் போயிருந்தனர். செல்வா இரவு தங்குவதற்கு ஹொஸ்பிட்டல் நிர்வாகத்தினரிடம் அனுமதி பெற்றுக்கொண்டான்.

றெஸ்ற் றூமிற்குள் ரி.வி, நியூஸ் பேப்பர் பார்ப்பதும், மனைவியையும் குழந்தையையும் பார்ப்பதுமாக அவன் பொழுதுகள் கரைந்தன. அடுத்த அறைக்குரிய மௌரி மனிதன் றெஸ்ற் றூமிற்குள் இருந்து அன்றைய தினசரியை விடுத்து விடுத்துப் பார்த்துவிட்டு செல்வாவிடம் நீட்டினான்.

"முற்றிலும் வேறுபட்ட மொழி மற்றும் கலாசாரத்தைச் சேர்ந்தவர்கள் அளவுக்கு மீறி, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் போவதானது அந்த நாட்டில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதனால் சமூக கலாச்சார ரீதிகளில் நியூசிலாந்தவர்கள் இன்று, வந்தேறு குடிகளைக் கண்டு பயப்பிடுகின்றார்கள்" என்று கூறியிருந்தார் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்.

"நியூசிலாந்தவர்களில் அதிக தொகையினரால் ஆசியமக்களை சகிக்க முடியவில்லை. இதற்கு எதிராக இனத்துவ இணக்கத்தைப் பரப்பும் செய்திகளை மனித உரிமைகள் ஆணையம் எடுத்து வருகின்றது. மேலும் வயோதிபர்களே அதிகம் வாழும் எமது நாட்டில் தொழில் செய்யக்கூடியவர்கள் தொகை குறைந்து வருகின்றது. போதுமான வருமானம் வேண்டும். இங்கு வருவோரின் வாழ்வை வளமாக்குவதில் நாம் முன்னிற்க வேண்டும்" என்கின்றனர் இனங்களுக்கிடையே சமூகநிலை பற்றி ஆராய்ந்தவர்கள்.

செல்வா மேலோட்டமாக அந்தச் செய்தியைப் பார்த்துவிட்டு அந்த மனிதனை நிமிர்ந்து நோக்கினான்.

"உங்களுக்குக் குழந்தை பிறந்ததில் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" என்று அவனைப் பார்த்துக் கேட்டான். அந்தக் கேள்வி மௌரி மனிதனை விசனத்துக்குள்ளாக்கியிருக்க வேண்டும்.

"இது என்னுடைய மூன்றாவது குழந்தை. எனது மனைவிக்கு ஏகப்பட்ட வருத்தங்கள். என்றாலும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றேன். எவருக்கும் குழந்தை பிறந்தால் மகிழ்ச்சியைத்தான் குடுக்கும்" என்றான் கோபத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியெண்டால் இந்த நாட்டிற்குப் புதிதாக வரும் மனிதர்களை ஏன் நீங்கள் வெறுக்கின்றீர்கள்?"

"அது - வேறை, இது - வேறை!"

"எப்படி வேறாகும்?"

"குழந்தைகள் எல்லா விஷயத்தையும் தெரிந்து வைத்துக் கொண்டு பிறப்பதில்லையே!" பெரிதாக ஏதோ தத்துவத்தைச் சொன்னவன் போல் முகத்தைத் தடவிக்கொண்டான் அவன்.

"இஞ்சை பாருங்கள். உங்களுக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும். உண்மையில் இந்த நாடு எங்களுடையது. 'வைற் பீப்பிள்' இந்த நாட்டைப் பிடித்தவுடன் நாங்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகி விட்டோம்.

"அப்படித்தான் எங்களுக்கும் நடந்தது. நாங்களும் எமது நாட்டினில் இப்பொழுது இரண்டாம் தரப் பிரஜைகள்தான்."

"இப்பொழுது தெரிகின்றதல்லவா புதியவர்களின் வருகையை நாம் ஏன் எதிர்க்கின்றோம் என்று. எங்கடை மக்களுக்கே இஞ்சை வேலையில்லாமல் இருக்கு. புதிதாக வருபவர்களும் இங்கு வந்து சுரண்டுகிறார்கள்."

றெஸ்றூம் வாசல்வரை சாந்தினி மெதுவாக நடந்து வந்து உள்ளே எட்டிப் பார்த்தாள்.

"நான் வீட்டிற்குப் போகவேண்டும். போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டான் அந்த மௌரி மனிதன்.

"ஆரப்பா உந்த மனிசன்? பாக்கப் பயமாக் கிடக்கு" என்று சாந்தினி கேட்டு வாய் மூடுவதற்குள், அந்த மௌரி மனிதன் திரும்பி வந்து செல்வாவின் தோளினில் கை பதித்தான்.

"இங்கு குடியேறுபவர்கள் நியூசிலாந்தவரை புரிந்து அறிந்து நடக்கவேண்டும். அதே போல நியூசிலாந்தவரும் புதிதாய் வருவோர் மீது நம்பிக்கை வைத்து செயற்பட வேண்டும்" என்று சொல்லிவிட்டு தன் பாட்டில் நடந்து போனான்.

* * * * * * *

இரு நாட்களின் பின்பு ஒரு மதியம் வீடு திரும்பியிருந்தார்கள். எல்லா வேலைகளையும் முடித்து ஓய்ந்து போயிருந்த வேளையில் 'இஞ்சாருங்கோ' என இராகமிழுத்தாள் சாந்தினி.

"இஞ்சாருங்கோ, நனா இன்னும் எங்கடை பிள்ளையைப் பாக்கேல்ல. ஏதேனும் எங்களோடை கோபமோ?"

"நனாவுக்கு நாங்கள் வந்தது இன்னமும் தெரியாமல் இருக்கலாம். ஒருக்கால் போய் சொன்னால் நல்லது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அச்சாப் பிள்ளையல்லே! ஓடிப்போய் ஒருக்கா சொல்லிப்போட்டு வாங்கோ”

செல்வா நனாவின் வீட்டிற்கு ஜெற் போல ஓடினான். ‘ஹோலிங் பெல்’லை அழுத்தினான். வீடு பயங்கர அமைதியில் சூழ்ந்திருந்தது. உள்ளே எந்தவித சலனமும் இல்லை. ஒருவேளை கிழவி உள்ளே இல்லையோ? கதவைக் கைகளினால் பலமாகத் தட்டினான். இவனது செய்கையை அவதானித்துக் கொண்டிருந்த டேவிட் தானும் கிழவியின் வீட்டிற்கு வந்தான்.

“காலமை நானும் பாத்தனான். கிறேஷைக் காணேல்ல. எங்கேனும் தூரத்திற்குப் போயிருப்பாளோ? என்று சொல்லிக் கொண்டே வீட்டைச் சுற்றி ஒருமுறை பார்த்தான் டேவிட். ஜன்னல் ஒன்று சிறிது நீக்கியிருந்தது. அதற் குள் முகத்தைப் புதைத்து உள்ளே நோட்டமிட்டான். ஏதோ சந்தேகம் கொண்ட வனாக தனது வீட்டிற்கு விறுவிறெண்டு அடியெடுத்து வைத்தான். “பொலிசைக் கூப்பிடுவாம்!”

பொலிஸ் வந்தது. தனது திறப்புக் கோர்வையினால் கதவின் துவாரத்தை நோண்டினார்கள். கதவு திறந்து கொண்டது.

கிழவி அழகாக அன்றலர்ந்த தாமரை போலக் கதிரையில் இருந்தாள். அவளிற்குப் பக்கத்தில் இருந்து ‘ஹொவி ரேபிளில்’ பாதி குடித்து முடிக்கப்பட்ட தேநீர்க் கோப்பை ஒன்று கிடந்தது. தேநீரின் மயக்கத்தில் விழுந்து இறந்து போய்விட்ட ஒரு பூச்சியை எறும்புக்கூட்டமொன்று இழுத்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் ‘நியூசிலாண்ட் ஹெரால்ட்’ பேப்பர் விரித்தபடி, புதியவர்களின் வரவினால் நாட்டினில் ஏற்படும் அவலத்தைக் காட்டியபடி கிடந்தது. அதற்கும் மேலே பின்னிமுடிக்கப்பட்ட ஒரு குழந்தையின் குளிர் உடுப்பு ஒன்று இருந்தது. செல்வா அந்தக் குளிர் உடுப்பைத் தூக்கிப் பார்த்தான். அதற்குள்ளிருந்து ஒரு ‘காட்’ கீழே விழுந்தது.

“ஒன்றையும் தொடாதீர்கள்” என்று வந்த பொலிஸ்காரர்களில் ஒருவன் சத்தமிட்டான்.

ஆனாலும் விழுந்து கிடந்த அந்த அட்டையில், அழகாகச் சிரித்தபடி இருக்கும் பெண் குழந்தையின் படத்தையும் ‘for new born baby’ என்று எழுதிக்கிடந்ததையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்கி

## பிரமிளா செல்வராஜா

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*மலையகத்தில் ஊவா கட்டவளையைச் சேர்ந்த பிரமிளா செல்வராஜா 1984ல் பிறந்தவர். தற்போது கலைமாணி இரண்டாம் வருடத்தில் பயின்று கொண்டிருக்கிறார். பகுதிநேர கணனி இயக்குநராகப் பணியாற்றுகிறார். கவிதை, சிறுகதை, கட்டுரை ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது படைப்புகளில் மலையக மண்வாசனை சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது.*

*முகவரி :- ஊவா கட்டவளை, ஹாலி-எல.*

**நே**ற்றில் இருந்தே பக்கியைக் காணவில்லை. மாலை ஆறு மணிக்கெல்லாம் தானாகவே வந்து கூட்டில் அடைந்துவிடும் நல்லதொரு கோழிதான் பக்கி. ஆனால் நேற்று எல்லா கோழிகளும் வந்த பின்னும் கூட, பக்கி வரவேயில்லை.

அம்மாவும் பாட்டியும் ஆளுக்கொரு திசையில் பா... பா...பா... என கத்திக்கொண்டிருக்க, நான் மட்டும் பக்கி கிடைக்கவே கூடாதென வேண்டத் தொடங்கினேன்.

பக்கி எங்கள் வீட்டிற்கு வரும் போது ரொம்பவும் சிறிய குஞ்சாக இருந்தது. வெள்ளையும் மஞ்சளும் கலந்த அழகான பொன் நிறத்தில் குட்டிக் குட்டிக் கால்களும் முட்டைக்கண்ணுமாய்.... முதல் முதலாய் ஒரு கோழிக் குஞ்சை கைகளில் தொட்டு ஸ்பரிசித்தேன். அந்த மிருதுவான உடல், துருதுருத்த விரல்கள், கூரான வாய் எனக்கு ரொம்பவும் பிடித்துப்போயிற்று. நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்த கோழிக்குஞ்சை சீண்டி விளையாடத் தொடங்கினேன். அதுவும் என்னுடன் ஒட்டிக்கொண்டது.

கோழிக்குஞ்சுக்கு பெயர் தேடி சலித்துத்தான்போனேன். எந்த பெயருமே பொருந்தி வரவில்லை.

மீரா..., மீனா..., சியா...., ஜோதி.., ம்ஹீம் எந்தப் பெயருமே பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சோனி.. சோனி.. சோனி..' கோழி அசையாமல் நின்றது.

''ப்ரியா... ப்ரியா... ப்ரியா...... பலனே இல்லை.

''பக்கி... பக்கி....பக்கி...

என்ன ஆச்சரியம்! கோழி திரும்பிப்பார்த்து வரத்தொடங்க, எனக்கு பிடிபடாத சந்தோஷம். அன்றிலிருந்தே கோழிக்குஞ்சு பக்கியானது. எனக்கும் நல்லதொரு தோழியானது.

பக்கியின் வளர்ச்சிப்படிகளைப் பார்த்து பார்த்து இரசிக்கத்தொடங்கினேன். வேண்டுமென்றே தண்ணீர் வைப்பேன். அது தண்ணீர் குடிக்கும் அழகைக் கண்கொட்டாமல் இரசித்துக் கொண்டிருக்கலாம். பாத்திரத்தில் வாயை வைத்து நீரை உறிஞ்சி அப்படியே அண்ணாந்து வாயை ஒரு இருபது பாகை அளவில் விரித்ததும், தொண்டைக்குள் நீர் இறங்குமே! அந்த அழகே தனிதான்.

இப்படியே நானும் பக்கியுமாய் நாட்கள் நகரத் தொடங்கியது. அது ஒரு தனி உலகம். மனித தொடர்புகளற்ற பிஞ்சு பிரபஞ்சம். எங்கள் இருவருக்குள்ளும் ஒரு மௌன உறவு இருந்தது. பக்கியினது குரலின் ஒவ்வொரு அர்த்தமும் எனக்கு அத்துப்படி. பக்கியின் பசி, தாகம், தூக்கம், ஒவ்வொன்றையும் என்னால் துல்லியமாகக் கண்டுபிடிக்கமுடியும். மொத்தத்தில் எனக்குள் ஒரு தாய்மை உணர்வு.

இப்படியிருக்கும் போதுதான் பக்கியை சாமிக்கு நேர்ந்து விட்டிருப்பதாய் அம்மா சொன்னாள். அப்போது எனக்கு அதன் அர்த்தம் தெரியவில்லை. கண்டுகொள்ளாமல் இருந்து விட்டேன். ஆனால் முனியாண்டி சாமி திருவிழா ஆரம்பித்ததிலிருந்தே வீட்டில் ஒரே பரபரப்பு. பக்கியை பலி கொடுக்கப் போவதாய் எல்லோரும் பேசிக்கொள்ள - உறைந்து போய் விட்டேன். கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. பக்கியை காப்பாற்ற ஒரு வழியும் தெரியவில்லை. அழுது, மன்றாடி, பட்டினி கிடந்து எல்லாமே தோல்விதான். சாமி குற்றம் வருமாம். அப்பா கண்டிப்பாக சொல்லிவிட்டார். எப்படி காப்பாற்றலாம் என்ற அவஸ்த்தையில் நான் தடுமாறிக் கொண்டிருந்த போதுதான், எந்த கடவுள் புண்ணியமோ பக்கி காணாமல் போய்விட்டது. இருந்தாலும் ஒரு பயம். எங்காவது பதுங்கி இருந்து விட்டு எப்போது வேண்டுமானாலும் பக்கி வரக்கூடும்.

வீட்டைச்சூழ தேயிலைச் செடிகின் குளுமைதான். அடியில் கரும்பச்சை நிறமாயும் நுனிக்குருத்து இளம் பச்சை நிறமுமாய் அடர்ந்து போய் அகல அகலமாய்... ஒரு தனி செடியே இத்தனை அழகென்றால், எத்தனையாயிரம் தேயிலைச் செடிகள்? பார்த்துக்கொண்டே இருக்கலாம், அத்தனை அழகு. இடையிடையே கான்வெட்டப்பட்டு, அழகாய் நிரை பிரிக்கப்பட்டு அப்படியே பரந்து விரிந்து ஒரு வெளியாய் தெரியுமே! அதன் வடிவமைப்பே ஒரு கலைதான் போங்கள். அந்த தேயிலைச் செடிகளுக்குள் ஒளிந்து விளையாடுவது ஒரு பெரிய சாதனை. நான் பக்கியை கைகளில் வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு பெரிய செடிக்கடியில் ஒளிந்து கொள்வேன். பக்கி நல்ல சமத்து நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிந்திருக்கும் போது தவறியும் கத்தாது. ஆடாமல் அசையாமல் என் கைகளுக்குள்ளேயே முடங்கி, அப்படியே என் விரல்களில் தலைசாய்த்துக் கொள்ளும். நானும் மெதுவாக அதன் தலையை வருடிக்கொடுப்பேன்.

தேயிலைச்செடிகளுக்கு இடையிடையே மூன்றடி ஆழத்திற்கு கான் வெட்டப்பட்டிருப்பதால், உள்ளே எங்கு வேண்டுமானாலும் ஓடித்திரியலாம். கான் முழுவதும் இலைகள் விழுந்து குச்சியும் குப்பையுமாய் நிரம்பி நடக்க மெத்துமெத்தென்று சுகமாய் அமுங்கி கொடுக்கும். கூடவே காய்ந்த சருகுகளின் சரசரவெனும் சத்தம் வேறு. அந்த கான் குப்பையை தன் சிறிய விரல்களால் கிளறிக்கிளறி எதையெதையோ தேடி பக்கி சுவைத்துக்கொண்டிருக்கும். நானும் பக்கி வரும்வரை ஒரு நிழலுக்குள் இருந்து ஏதாவது யோசனையில் மூழ்கிப்போய் விடுவேன்.

ஒரு நாள் அப்படித்தான். எங்கிருந்தோ ஒரு நரி சடாரென பாய்ந்து வர, செய்வதறியாது பக்கியைத்தேடி, நான் பதறி எழும்ப முன்னமே ஒரு நிசப்தம். ஒன்றையும் காணவில்லை. எனக்கு முகமெல்லாம் வியர்த்துப்போய், கைகளில் லேசாய் நடுக்கம். நரி கோழியைப் பிடித்திருக்குமோ? பிடித்து தின்றுகொண்டிருக்குமோ? முருகன், பிள்ளையார், பத்திரகாளி, சிவன்.... எல்லாக் கடவுள்களையுமே ஒரே நிமிடத்தில் வேண்டிக்கொள்கின்றேன். பக்கி பக்கி என நா உலர கத்துகிறேன். இருட்டும் வரை தேடித்தேடி ஓய்ந்துபோய், என் அழைப்பு விம்மலாய் மாறி அழுகையில் போய் முடிகிறது.

"என்ன புள்ள ஆறுமணிப்பட்டு ரோட்டுல என்னா வேல? ... ஓங்க அம்மா கூப்புடுறாங்க".

தொங்கல் வீட்டு தங்கராசு அதட்டிக்கொண்டே போய்விட, நான் அழுதுகொண்டே வீட்டுக்கு போகிறேன். கோழி வந்துவிடுமென எத்தனைபேர் ஆறுதல் சொல்லியும் என்னால் அமைதிப்படவே முடியவில்லை.

பக்...பக்...பக்... என்ற பக்கியின் குரலில் தான் கண்விழிக்கிறேன். ஐயையோ! இது கனவில்ல.. நிஜமாகவே பக்கி பக்கிதான்.... பக்கியேதான். அப்படியே அணைத்து என் போர்வைக்குள் இழுத்து, முத்தமிட்டு, தடவி, அடித்து, அதட்டி பின் ஒருவாறு சமாதானமாகிறேன்.

"நான் தான் கோழி வந்துருன்னு சொன்னேனே"

அம்மா பாவம் பக்கியை படுக்கைக்கே கொண்டுவந்து தந்துட்டு முணகிக்கிட்டே போயிட்டாங்க. இன்னொரு தடவையும் அப்படித்தான். காணாமல் போய் ரெண்டு நாளைக்கப்புறம் பக்கி தானாகவே வீட்டுக்கு வந்திடுச்சு.

இப்போ என் பயமெல்லாம் இதுதான். இதேமாதிரி இன்னைக்கும் பக்கி வந்திட்டா என்ன பண்ணுறது? பலியாயிடுமே! இப்போ அம்மாவும் பாட்டியும் தேயிலைச் செடிகளுக்குள்ள இறங்கி தீவிரமா தேடத்தொடங் கிட்டாங்க. இனியும் பொறுமையா இருந்தா எல்லாமே கையை மீறி போயிடும். நானும் தேட எழும்புகிறேன். இவங்களுக்கு முன் நான் தேடிட்டா எப்படியாவது காப்பாத்தலாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பக்கி... பக்கி... பக்கி....''

இந்தா பா...பா...பா

ஒவ்வொரு குரலும் ஒவ்வொரு விதமாக..

ரொம்பவே பயமா இருந்தது. போனதடவை ஒரு இருபது கோழிக்கிட்ட பலியா கொடுத்தாங்க. சின்னையா ஒருபடி மேலே போய் தன்னோட ஆட்டையே பலிகொடுத்துட்டானே... கடவுளே நீதான் பக்கியை எப்படிசரி காப்பாத்தணும். எனக்கு உயிரை பலிகொடுன்னு சாமி கேட்டிச்சா என்ன? இந்த மனுசங்களுக்கு ஏன்தான் இந்த கொலைவெறியோ தெரியலையே...?

நான் பக்கியை தேடிட்டே அம்மா பாட்டிக்கிட்ட இருந்து விலகி தூரமா போயிடுறேன். ஒரு இடத்துல கசிப்பு பானை ஒளியவச்சிருக்கு. கானுக்கு கான் இது ஒரு கருமம். இந்த எழவ எப்பிடித்தான் குடிச்சி தொலைக்கிறாங் களோ! எரிச்சலில் அதை காலால எத்தி விட்டுட்டு திரும்புற நேரம், கடவுளே! பக்கி ஒரு மூலையில் இருந்து வாறது தெரியுது. இப்ப என்ன செய்யிறது...? என்ன செய்யிறது....? அம்மா பார்க்க முதல்ல ஏதாவது செய்யனுமே. ஒன்னுமே புரியலையே... பக்கத்தில இருந்த பெரிய கல்லை கையில் எடுக்கிறேன். தடார்னு ஒரு சத்தத்தோட, பக்கியும் சேர்ந்து அலறி துடிக்க,

''என்ன சத்தம்... என்ன சத்தம்?'' அம்மா பதறலுடன் ஓடிவாறாங்க.

''கோழி கிடைச்சிருச்சம்மா. பிடிக்கப்போய விழுந்துட்டேன்.'' என்கிறேன்.

பாட்டிக்கு பிடிபடாத சந்தோஷம். கோழியை தூக்கிக்கொண்டு,

''மாரியாத்தா! ஒனக்குன்னே வளத்த கோழி... ஒரு கொறையும் வைச்சிறாத தாயீ..'' திடீரென ஏதோ உணர்ந்து பேச்சை நிறுத்திய பாட்டி கோழியைப் பார்த்துட்டு கத்திட்டாங்க.

''ஐயய்யோ ரெத்தம் வருது. காலுல ஒரு விரலை காணமே! எங்கேயோ அடிபட்டிருச்சி போல''

''அப்ப எப்பிடி மாமி பலி குடுக்கிறது?''

அம்மா யோசிக்கத் தொடங்க, கோழிய தரையில விட்டுவிட்டு பாட்டியும் யோசிச்சிட்டே போறாங்க.

ஒரு பக்கியை காப்பாத்திட்டேன். இது போல எத்தனையெத்தனை பக்கியள் பலியாகிறதோ..? எனக்கென்ன போச்சி எப்படியோ என் பக்கி தப்பிச்சிடுத்தே அதுவரைக்கும் போதும். பக்கியிடம் மானசீகமாய் மன்னிப்பு கேட்டபடியே மருந்து கட்டுவதற்காய் மீண்டும் பக்கியை தேடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைமணல்

## ம.பா.மகாலிங்கம்



யாழ்ப்பாணம் இளவாலை மயிலங்கூடலைச் சேர்ந்த ம.பா. மகாலிங்கசிவம் 1968ல் பிறந்தவர். யாழ் பல்கலைக்கழக சிறப்புக் கலைமாணி (தமிழ்) கல்வித் தகைமை பெற்ற இவர் தற்போது யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். கவிதை, சிறுகதை, ஆய்வு, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதிவருகிறார். யாழ் பல்கலைக் கழகக் கலைப் பீடத்தால் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதைப் போட்டிகளில் முதலிடம், கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட தமிழறிவுப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். புலவர் ம. பார்வதிநாதசிவத்தின் மகனான இவரது தொடர்பு முகவரி:- சிவபுரம், இணுவில் மேற்கு, இணுவில்.

**சு**னாமியின் கோரவடுக்கள் நிறைந்த பிரதேசங்களைத் தாண்டிச் சென்ற எமது வாகனம் ''சண்முகம் வித்தியாலய'' நலன்புரி நிலையத்தின் முன்னாற் சென்று நின்றது. வாகனத்திற் சென்ற இளைஞர்கள் இளைஞிகள் அனைவரும் குதித்து இறங்கினோம். அரசசார்பற்ற நிறுவனத்தின் இந்தச் சொகுசு வாகனத்திற் பயணிப்பதே ஒரு சொர்க்க போகம்தான். சுனாமிப் பாதிப்பிலிருந்து இன்னும் மீளாதவர்களுக்கு உளவளத்துணை வழங்கி, அவர்களை மீட்டெடுப்பதே எமது வருகையின் பிரதான நோக்கமாக இருந்தது.

வாகனத்தைக் கண்ட முகாமில் இருந்தவர்கள் விழுந்தடித்துக் கொண்டு வந்து அதைச் சூழ்ந்து கொண்டனர். சோகம், துயரம், அவலம் எனத் துன்பத்திற்கு எத்தனை ஒத்த சொற்கள் உள்ளனவோ அவற்றையெல்லாம் வெவ்வேறு விதங்களிற் கலந்துள்ள முகங்கள்.

''வாங்கோ.. வாங்கோ'' முகமலர்ச்சியுடன் வரவேற்றார் முகாம் பொறுப்பாளர். உளவளத்துணை வழங்கப்பட வேண்டியவர்களின் விபரங்களை அவரே திரட்டி வைத்திருந்தார். அவரை ஒரு வேவு அணியினராகக் கற்பனை செய்தால் எமது வருகை ஒரு தரையிறக்கமாகவே கருதப்படவேண்டும். இந்த எண்ணம் என்னுள் சிரிப்பை முகிழ்ப்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன தம்பி சிரிக்கிறியள்?”

“ஒண்டுமில்லை. நாங்கள் எங்கை தங்கிறது?”

“அதுக்குத் தனியா றூம் இருக்கிறது. அந்த வகுப்பறைதான். பத்துப் பேருக்குக் காணுமே?”

“ஓம் வடிவாக் காணும். இருக்கிற இடம் முக்கியமில்லை. எங்கடை பணிதான் முக்கியம்”

நாங்கள் எங்களது பொருட்களை உரிய இடத்திற் சேர்த்த பின் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய பாதிக்கப்பட்டவர்களின் பெயர்கள் வழங்கப்பட்டன. எனக்குக் கோவிந்தன் என்பவரின் பொறுப்புக்கிடைத்தது. உளவளத்துணை தொடர்பான எனது நீண்ட அனுபவத்தின் மூலம் அவரைக் குணப்படுத்தலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. “ஐயா, என்னட்டை நீங்க ஒப்படைத்த கோவிந்தனைப் பற்றிச் சொல்லுங்கோவன்”

“இந்த முகாமிலேயே கடுமையான பாதிப்புள்ளவர் அவர்தான். மனைவி முந்தியே இறந்து போனா. ஆசை அருமையாக வளர்ந்த ரண்டு பிள்ளையளையும் கடல் கொண்டு போட்டுது. அதுதான்...”

“இப்ப என்ன செய்யிறார்?”

“முகம் பேயறைஞ்ச மாதிரி இருக்குது. ஒருதரோடையும் கதை இல்லை. பிள்ளையளை ஞாபகப்படுத்திற சம்பவங்கள் எதையும் கண்டால், உடனை தலையிலை அடிச்சுக்கொண்டு குழறுவார். அது மட்டுமில்லை. உடுக்கிற சாரம், படுக்கிற படுக்கை எல்லாத்தையும் அடிக்கடி உதறிக் கொண்டிருப்பார். நடைப்பிணம் எண்டு ஊருக்கை சொல்வினமே இவருக்கு இப்ப அந்த நிலைதான்.”

“சரி ஆள் ஆரெண்டு காட்டுங்கோ பாப்பம் “

“அந்தா, அந்தப் பச்சை சாரத்தோட போறாரே அவர்தான். கிணத்தடிக்குப் போறார் போல கிடக்கு.”

“இஞ்சை எங்கை இருக்கிறவர்?”

“இந்தா, இந்தச் சுவர் மூலைதான் அவற்றை இடம்”

அவரது இடத்தைப் பார்த்தேன். பாய் இல்லை. ஒரு பெண் குழந்தையின் சட்டை மட்டும் விரிக்கப்பட்டிருந்தது. ஆண் குழந்தையின் காற்சட்டை, சேட் என்பன தலையணையாக. ஓ! பிள்ளைகளின் நினைவில் வாழ்தலா? குணப்படுத்தலின் முதற்படி இவரை இந்நினைவுகளிருந்து அப்புறப்படுத்தலாகத்தானே இருக்க முடியும்?

கோவிந்தன் முகம் கழுவிவிட்டு வருவது தெரிந்தது. எவ்வாறு அறிமுகம் செய்து கதையைத் தொடங்குவது என்ற சிந்தனைச் சிதறல்கள் என்னைச் சுற்றி...

அவர் துவாயைத் தேடுவது தெரிந்தது. உதவிக்குச் சென்றேன்.

“ஐயா, இந்தாங்கோ துவாய்” வாங்கிக்கொண்டே ஒரு பார்வை. நட்பும் பகையுமற்ற நொதுமல் நிலை என்பது இதுதானோ?

முகம் துடைத்தான பின் ஒவ்வொரு உடையாக எடுத்து உதறி இருந்த இடத்திற்கு எதிரே வைத்தார். சாரத்தின் கட்டைத் தளர்த்திப் பலமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதறியபின் உடுத்துக் கொண்டார். ரத்த ஓட்டத்தையே தடுப்பது போல் தலையை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டு பலமுறை உதறினார். எங்கோ செல்லப் புறப்பட்டு அங்குமிங்கும் தேடினார்.

"சேட்டே தேடுறியள்?"

"ஓம்"

"அந்தப் பெட்டிக்குள்ளையெல்லே வைச்சனியள்?"

சேட்டை எடுத்துப் பலமுறை உதறினார். போட்டார். மீண்டும் கழற்றி உதறியபின் போட்டுக்கொண்டு புறப்பட்டார்.

கோவிந்தனின் இருப்பிடத்துக்கு அருகில் முதியவர் ஒருவர் திருநீற்றுப் பூச்சுடன் படுத்திருந்தார். அவரிடம் ஏதாவது அறியலாமா?

"ஐயா, உங்கடை பேர் என்ன?

"சங்கரப்பிள்ளை"

"உங்களுக்குச் சுனாமியாலை பாதிப்பொண்டும் இல்லையே"

"இல்லாமல்... எனக்குப் பிள்ளையள் இல்லை. மனிசியைத்தான் கடல் கொண்டு போட்டுது."

"இவர் ஏன் இப்படி இருக்கிறார்?.

"ஆர் கோவிந்தனே? இப்ப கொஞ்சம் பரவாயில்லை எல்லோ. முந்திச் சாப்பாடு, தண்ணி வென்னி ஒண்டும் இல்லை. பிறகு நான்தான் ஒரு மாதிரிச் சுகப்படுத்திச் சாப்பிட வைச்சனான்."

"நீங்க சுகப்படுத்தினனீங்களோ? என்ன செய்தனீங்கள்?"

"இவருக்கு இவற்றை மச்சானோடை நெடுகப் போட்டி. சுனாமி வந்த அண்டு பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு ரவுணுக்கு வெளிக்கிட்டவராம். அப்ப, மச்சான்காரன் வீட்டை வந்ததாலை அதுகள் போகாம நிண்டிட்டுதுகள். அதுகள் மச்சானாலைதான் செத்ததெண்டு அவரிலை கோபம்."

"அது கிடக்கட்டும். நீங்க எப்படி அவரைச் சுகப்படுத்தினனீங்கள் எண்டு சொல்லுங்கோவன்"

"பொறுங்கோ. அதுதான் சொல்லிறன். இவனைச் சாப்பிடப் பண்ண வேற வழிதெரியேல்லை. ஒரு பொய் சொன்னன். மச்சான்காரன் உனக்குச் செய்வினை செய்ததாலதான் இவ்வளவும் நடந்ததெண்டு நம்பவைச்சன். பிறகு அவரை இருத்தி எனக்குத் தெரிஞ்ச மந்திரம் எல்லாஞ் சொல்லித் தண்ணீர் தெளிச்சு விபூதியும் பூசிவிட்டன். அதோடை கொஞ்சம் முகம் வெளிச்சுது. சாப்பிடவும் தண்ணி குடிக்கவும் தொடங்கினார்."

"பிறகென்ன நல்ல வேலை செய்திருக்கிறியள்"

"ஆனால் அதாலை ஒரு பிரச்சனையும் வந்திட்டுது. நான் சொன்ன செய்வினை திரும்பவும் தன்னிலை ஏறிவிடுமோ எண்டு நினைக்கத் தொடங்கிவிட்டார். அதுதான் அடிக்கடி உடுப்பை உதறுகிறார்."

"சைற் எவக்ற்" என்பது இதுதானோ? என்றாலும் முதியவர் கோவிந்தனைச் சாப்பிடப் பண்ணியிருப்பது பெரிய விடயம்தானே? நாங்கள் எவ்வளவோ கதைச்சுக் கஷ்டப்பட்டுச் செய்ய வேண்டுமென நினைத்த ஒன்றைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னச் செயற்பாட்டாலை முடிச்சுப் போட்டாரே? இது தான் தமிழரின் பாரம்பரிய உளவளத்துணை முறையா? நூல்கட்டுதல், விபூதி போடுதல் என்பவற்றை எமது உளவளத்துணை முறையினுட் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும், அவற்றைத் தவறென்று நிராகரிக்கவில்லை. எனவே இந்த முறைகளாலேயே குணப்படுத்த முடியுமா என முயன்று பார்க்க விரும்பினேன்.

"அப்ப பெரியவர், மிச்சமிருக்கிற செய்வினையை நீக்க இன்னும் ஒருக்கா, ரண்டுதரம் திருநீறு போட்டிருக்கலாமே?"

"எனக்கும் அப்படி ஒரு எண்ணம் வந்ததுதான். எண்டாலும் அதை மாத்தப் பிறகும் என்ன நடக்குமோ எண்டு பயம் வந்திட்டுது. தன்ரை உடுப்பைத்தானே உதறிறார் எண்டு விட்டிட்டன்."

வெளியே போன கோவிந்தன் உள்ளே வருவது தெரிந்தது. அவர் வழியிற் சென்று எதிர்கொண்டேன்.

"நீ.... நீங்க ஆர்? எனக்கு உதவி எல்லாஞ் செய்றியள்?

"ஐயா.... நானும் இஞ்சை கிட்ட இருக்கிறவன்தான். எனக்கு ஒரே ஒரு பிள்ளை. அதைக் கடல் கொண்டு போட்டுது. அதுதான் மன ஆறுதல் தேடி இஞ்சை வந்திருக்கிறன்"

"கடவுள் எல்லாருக்கும் ஏன்தான் சோதினையளைக் குடுக்கிறானோ தெரியேல்லை"

"என்னையா இப்படிச் சலிக்கிறியள். உங்களுக்கும் ஏதேனும் பிரச்சனையே?"

"ஏதேனும் பிரச்சனை இல்லைத்தம்பி. எல்லாமே பிரச்சனைதான்."

இப்போதுதான் அவர் முகத்தைக் கிட்டவைத்து நேருக்கு நேரே பார்க்கிறேன். சூரியனை மேகக்கூட்டங்கள் மறைக்கவும் விலகவும் வானம் இருண்டு, ஒளிர்ந்து கொண்டிருக்குமே. அது மாதிரிக் குழப்பமும் தெளிவும் கலக்கும் கண்கள். அவை எங்கும் நிலைபெறாமல் யாரையும் நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றித் தரை தழுவுகின்றன. ஞாபக அலைகள் மனப்பாறையில் மோதி மோதித் திரும்பிச் செல்வதான கலங்கல் நிறைந்த முகம்.

"என்ன ஐயா, ஒரே சலிப்பாக் கதைக்கிறியள்?

"ரண்டு பிள்ளையளையும் கடல் அள்ளிக் கொண்டு போனாச் சலிக்காம என்ன செய்யிறது.

"நீங்க சொன்னது சரிதான் ஐயா, கடவுள் எல்லாருக்கும் கஷ்ரங்களைத்தான் குடுக்கிறான்"

"ஓம் தம்பி ரவுணுக்குப் போகேக்கை "ரிப்பி- ரிப்பி" வாங்கிக் கொண்டாங்கோ எண்டு அனுப்பின பிள்ளையள்... வந்து பாக்கேக்கை இல்லை தம்பி"

குலுங்கிக் குலுங்கி அழுகிறார். அவர் அழுது துயரங்களைக் கழுவிக்கொள்ளச் சிறிது நேரம் கொடுக்கிறேன்.

"ஐயா ரவுணுக்குப் போகேக்கை பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு போகோணும் எண்டு நினைக்கேல்லையே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஐயோ! அதுகள் வெளிக்கிட்டதுகள் தம்பி. அந்த நாசமறுப்பான் வந்து நிப்பாட்டிப் போட்டான்.”

“ஆர் ஐயா, அவர்?”

“அவனோ...என்ரை மனிசீன்ரை தம்பிதான் அந்த... மோன். அண்டைக்கு மட்டும் அந்த நாய் வந்து தடுக்காட்டி இண்டைக்கு என்ரை பிள்ளையள் என்னோடை இருந்திருக்கும்”

மீண்டும் தலையிடித்துக் கொண்டே கதறியழத் தொடங்கினார். சிறிது நேரம் அழ அனுமதித்தேன்.

“ஐயா....எனக்கு கைரேகை பாக்கத் தெரியும். ஒருக்காப் பாக்கட்டே?”

“என்ன மசிருக்கு...? பாத்தாப்போல என்ரை பிள்ளையள் திரும்பி வரப்போகுதுகளே?”

“இல்லை ஐயா, எங்கை பிழை எண்டு பாப்பமே?”

“இந்தாங்கோ”

“நீங்க நல்ல கடவுள் நம்பிக்கையான ஆள். உங்களுக்கு எல்லாம் கடவுள் தந்தவர். உங்கட சொந்தக்காரர் தான் ஆரோ மனம் பொறுக்காம என்னவோ செய்து போட்டினம். அதுதான் இந்த நிலை வந்தது.”

“ஓம் ஓம் தம்பி நீர் சொல்லிறது சரிதான்”

“ஐயா, ஆரோ உங்களுக்குச் செய்வினை செய்திருக்கினம். இஞ்ச பாருங்கோ. இந்த ரேகை கறுத்துப் போய் இருக்கு”.

“உண்மைதான் தம்பி. நீர் சரியாகச் சொல்லுறீர். அந்தாளும் அதுதான் சொன்னது.”

“ஆனா... பிறகு ரேகையில கொஞ்ச இடத்திலை தெளிவிருக்கு. ஏதாலும் பிரயாச்சித்தம் செய்தனீங்களே?”

“ஓம் தம்பி. உதிலை ஒரு ஐயா திருநீறு பூசித் தீத்தம் தெளிச்சவர். அதுக்குப் பிறகு கொஞ்சம் சுகம்.”

“எண்டாலும் முழுசா எடுபடேல்லை. திரும்பியும் அதுகள் ஏறப்பாக்குது”

“அதுக்குத்தான் தம்பி, நான் பயந்து பயந்து வாழிறன்”

“அதே ஆளைக்கொண்டு இன்னும் ரண்டு பார்வை பாக்க எல்லாம் சரியா விடும்”.

“தம்பி அதில வாற திருநீற்றுப் பூச்சுக்காரர்தான் நான் சொன்ன ஆள்”

“அவரே. அவரை எனக்கு நல்லாத் தெரியும். செய்வினை எடுக்கிறதிலை வலு விண்ணன்”

அந்த முதியவருக்கும் சில ஆலோசனைகள் வழங்கிய பின்னர் அன்று மாலையும் அடுத்த நாட் காலையும் திருநீற்றுப் பூச்சுடன் பார்வை பார்க்கப்படுகிறது. திருநீற்றுக் கையைத் தலையிலிருந்து கால்வரை இழுத்து வந்து நிலத்திலே தொட்டு, மந்திர உச்சாடனத்துடன் “ இறங்கு, இறங்கு” என அடிக்கடி கூறுகிறார். பார்வை முடிந்ததும் கோவிந்தன் முகத்தில் மகிழ்ச்சியுடன் கூடிய தெளிவு காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா, இப்ப உங்கடை முகம் நல்லா வெளிச்சிட்டுது"

"ஓம் தம்பி. ஏதோ பாரம் இறங்கின மாதிரித்தான் இருக்குது. உங்கடை உதவியளை மறக்கேலாது."

என்னுட் பரிபூரண நம்பிக்கை முளைவிடத் தொடங்குகிறது. சாரம் உதறுவது நின்றுவிட்டது. செயற்பாடுகளிலே தெளிவு. முற்றாகக் குணப்படுத்தி விட்டேன். இனித் தொழிலை நோக்கித் திரும்பி விட்டால் வெற்றிப் பூரிப்போடு நான் ஊர் திரும்பலாம்.

"அப்ப ஐயா, உங்கடை பக்கத்து வீட்டுக்காரர் எல்லாம் திரும்பவும் தொழிலுக்குப் போகத் தொடங்கிவிட்டினம். நீங்கள் என்ன செய்யப் போறீர்கள்?"

"என்ன மசிருக்கு? முந்தி நான் கடல்லை இருந்து இறங்கினவுடனை பிள்ளையள் ஓடிவரும். மீன் வித்துக் கைச்செலவுக்குக் காசு குடுத்தாப் பிறகுதான் பள்ளிக்குப் போகுங்கள். இனி ஆருக்காண்டித் தொழிலுக்குப் போவன். என்னைத் தனிய விட்டிட்டுப் போட்டீங்களே" அடி வயிற்றிலிருந்து அவல ஓசைவரக் குழறி அழத் தொடங்கினார். நான் திகைத்துப்போனேன். சாண் ஏற முழஞ்சறுக்கும் வேலையா? அழுகை தணிந்து படிப்படியாக மீண்டு வந்தார். என்னுடன் தாராளமாகக் கதைக்கத் தொடங்கினார். இயல்பான செயற்பாடுகளில் ஈடுபட்டார். மீண்டும், அவரைத் துயர் முட்டத்தில் இருந்து மீட்டு விடலாம் என்ற நம்பிக்கை என் மனதிற் கூடு கட்டத் தொடங்கியது.

* * * * * * *

அரசசார்பற்ற நிறுவனத்தின் வாகனம் ஒன்று அவ்விடத்தில் வந்து நின்றது. குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைவருக்குமான உடுதுணிகள், உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. இழப்புக்கள் பற்றிய கவனத்தைக் தற்காலிகமாகத் திருப்பிய மக்கள் அவற்றைப் பெற முண்டியடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் கோவிந்தனிடம் எந்தச் சஞ்சலமும் இல்லை. "ஓடும் செம்பானும் ஒக்கவே நோக்கும்" தன்மையுடன் கண்களை மட்டும் அவர்களை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தார்.

இவரைத் தொழிலுக்கு அனுப்புவதைவிடச் சமூக இசைவாக்கத்தைப் படிப்படியாக வளர்த்தெடுப்பது நன்மை தரலாம் என்ற எண்ணம் என் மனதிற் பளீரிட்டது. பொருளிற்காக நிற்கும் வரிசையில் இவரை நிறுத்தினால் பலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பம் ஏற்படும்.

"ஐயா, புது உடுப்பெல்லாம் குடுக்கினம்... நீங்க என்ன செய்யப் போறியள்?"

"என்ன மசிருக்கு? எல்லாரும் தங்கடை பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் குடுக்கினம். நான் ஆருக்குக் குடுப்பன்? ஐயோ என்ரை சாந்தன் என்ரை தனுசுக்குட்டி. என்னை விட்டிட்டு எங்கை போட்டியள்?" அவலக்குரல் அந்தப் பிரதேசத்தின் தற்காலிக உற்சாகத்தையும் கழுவிச் சென்றது.

* * * * * * *

எங்களது கடமை முடிந்து திரும்ப இன்னும் சில நாட்களே இருந்தன. அதற்குள் ஏதாவது செய்தாக வேண்டுமே என்ற பதற்றமும் பரபரப்பும் என் மனமெங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு ஏதாவது விடயத்தில் ஆர்வம் இருந்தால் அந்தத் திசையில் திருப்பிவிடலாம் என்ற சிந்தனை. கவிதை.. கதை... நாடகம்..... சினிமாப்படம்...?

முகாமிலிருந்தவர்களிடம் விசாரித்தபோது அவர் கிரிக்கெற்றில் ஆர்வமுடையவர் என்பதை அறியமுடிந்தது. முகாமிலுள்ள தொலைக்காட்சியில் விளையாட்டுச் செய்திகள் இடம்பெறும்போது மறைந்து நின்று பார்த்ததைக் கண்டதாகச் சிலர் கூறினர். சுனாமிக்கு முன்னர் இலங்கை அணி விளையாடும் போட்டி என்றால் தொழிலையும் விட்டுவிட்டு, யார் வீட்டிலாவது கெஞ்சி மன்றாடி ஆட்டத்தைப் பார்ப்பதையும் அறிய முடிந்தது. எனவே தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வாங்கிக் கொடுத்துக் கிரிக்கற் ஆட்டங்களில் அவரது கவனத்தைத் திருப்புவதன் மூலம் பிரச்சனையைத் தீர்க்கலாம் என முடிவெடுத்தேன். அது மட்டுமல்ல. தொலைக்காட்சிப் பெட்டியின் பாதுகாப்பைக் காரணங்காட்டி, அவரை வீட்டுக்கு அனுப்பவும் முடியுமெனக் கணித்தேன்.

யார் வாங்கிக் கொடுப்பது?

அவரது மைத்துனரே முன்வந்தார். எனக்கோ ஆச்சரியம்.

"உங்களைப் பற்றித்தானே அவர் பிழையா...?

"ஓம், எனக்குத் தெரியும். பாவம் பிள்ளையளை இழந்த கவலை. அவர் சுகப்பட்டாரே போதும். நான் வாங்கித்தந்ததெண்டு சொல்லாதேங்கோ" ஒரு நல்ல இதயத்தை சந்திப்பது பெரும் பாக்கியம்தான். காலையிலேயே தொலைக்காட்சிப்பெட்டி கொண்டு வந்து இறக்கப்பட்டுவிட்டது. எங்கோ போன கோவிந்தனின் வருகைக்காகக் காத்திருந்தேன். ஊருக்குத் திரும்ப வேண்டியநாள் வந்துவிட்ட நிலையில் என் கடமையை வெற்றிகரமாக முடித்த திருப்தியுடன் போவதான பெருமிதம் நெஞ்சில். அவரைக் கண்டவுடன் உடலெங்கும் பரபரப்புடன் கூடிய மின்பாய்ச்சல்.

"வாங்கோ, உங்களுக்குக் கிரிக்கெற் மச் எண்டால் விருப்பமோ?"

"ஓம், என்னெண்டு தெரியும்? சின்ன வயதிலை பள்ளிக்கூட ரீமிலை விளையாடினனான். பிறகு தொழில் ....பேந்தெங்கை? எண்டாலும் இலங்கை விளையாடிற மச் எல்லாம் பாப்பன்."

"இப்ப அவுஸ்த்திரேலியா இலங்கைக்கு வந்திருக்கெல்லோ?"

"ஓம் நேற்றுச் செய்தியிலை காட்டினவை"

"அந்த மச்சை நீங்கள் முழுசாப் பாக்கவேணுமெண்டு ரீ.வி. ஒண்டு உங்களுக்கு வாங்கி வைத்திருக்கிறேன். இது உங்களுக்குத்தான்.

ஒரு கணம் மின்வெட்டுப்போல மகிழ்ச்சி தோன்றிமறைய ,

"ஐயோ.... என்ரை சாந்தன் எத்தினை தரம் ரீ.வி. வாங்கித்தா எண்டு கேட்டிருப்பாய். இப்ப ரீ.வி வந்திட்டுது. நீ எங்கையப்பு போட்டாய்?" தலையிலடித்துக் கொண்டே பெருங்குரலெடுத்து அழத்தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாமரம்

பொன்னம்பலம் சுகந்தன்

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*நெல்லியடியைச் சேர்ந்த பொன். சுகந்தன் 1974ல் பிறந்தவர். சிறுகதை, கவிதை, நாடகம், மேடைப் பேச்சு ஆகிய துறைகளில் ஈடுபாடுடையவர். கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு (2005), இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் (2005) நடாத்திய சிறந்த இலக்கிய நடுவருக்கான விருது பெற்றுள்ளார். 'சொல்வேந்தன்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.*

அன்றைய நாள் ஒரு மப்பும் மந்தாரமாகவும் இருந்தது. வானம் அம்மிக் கொண்டிருப்பதால் மழை பெய்வதற்கான அறிகுறிகள் அதிகமாகவே இருந்தது. இதமாக வீசிய தென்றல் காற்றும் குளிர்காற்றாக மாறி உடலைச் சில்லிட வைத்தது. மழைக்கான ஆரவாரங்களில் இயற்கை தன்னை இணைத்துக் கொண்டது.

வீட்டினுள்ளே இருந்த விமலாவும் வெளியே வந்து முற்றத்தில் நின்று கொண்டு தனது கண்களை நாலா பக்கமும் படரவிட்டவளின் மேனியையும் அக்குளிர் காற்று நடுங்க வைத்தே சென்றது. அக்குளிர் காற்றின் நடுக்கம் அன்று நடந்த அவலநிலையையும் அசைபோடத் தயங்கவில்லை. அந்த நாள் இப்போதும் அவள் இதயத்தில் ஆழமாகவே வேரூன்றியுள்ளது. அன்றும் இதே போன்று வீசிய தென்றல் காற்றுத்தான்... குளிர்காற்றாக மாறி அதன் பின் உயிர்களையே இரக்கமின்றி பலியெடுக்கின்ற சூறாவளிக் காற்றாகவும் மாறி அந்தக் கிராமத்தையே சூறையாடி இருந்தது. நாசமான உடமைகள்தான் எத்தனை.... வெள்ளத்தால் ஈவிரக்கமின்றி அடித்துச் செல்லப்பட்ட உயிர்கள் தான் எத்தனை...! இவையனைத்தும் நடந்து முடிந்தது அன்று பெய்த மழையில்... அன்றைய நாளில்..! இவற்றை நினைக்கும் போதெல்லாம்... அவள் நெஞ்சம் கனக்கும்.. இனம் புரியாத ஒரு வேதனை இதயத்தைத் தாக்கும். கண்களில் நீர் முட்டியிருக்கும். இது அவளிற்கு வேதனை தந்த வலிகள். அவள் இதயத்திலிருந்து நீங்காத வடுக்கள் அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் அவ்வாறு வீசுகின்ற குளிர்காற்று அவளைப் பயமுறுத்து வதுவும் அன்றைய அச்ச நிலையால்தான். அவளது அச்சத்தை மேலும் வலுப்படுத்துவது போன்றே குளிர்காற்றுடன் கருமேகங்களும் சூழத் தொடங்கியது.. இடி முழக்க ஓசையும், மின்னல் ஒளியும் குறைந்த போதிலும், கரு முகில்களில் ஏற்பட்ட மாறுதல்களும், அவை சூழ்ந்து கொண்ட விதத்தினையும் பார்க்கும்போது அவளது அச்சம் மேலும் வலுக்கத் தொடங்கியது.

அவளது கண்கள் அச்சத்தில் விரிகின்றது. எதிரே இருந்த பலாமரத்தை அவளது கண்கள் அகலத் திறந்தபடி உற்று நோக்கிக் கொண்டிருந்தது. அது அவளிற்கு எதனை உணர்த்தியதோ தெரியவில்லை.. ஆனால் ஒன்றை மட்டும் நினைவு படுத்தத் தவறவில்லை. பலாமரத்தின் பரிதாப நிலையை அவை அவளிற்கு பறை சாற்றிச் சென்றது...

...அன்று பெரிதாக வீட்டை விட உயரமாக முற்றத்தில் நின்ற அந்தப் பெரியபலா மரம். அதன் கிளைகளையும் நாலா பக்கமும் பரப்பி நல்ல நிழலினைக் கொடுத்து உயர்ந்து, அகன்று, செழித்து வளர்ந்து சிறப்பாக நின்றது. இதுதான் வாறவை போறவையளிற்கெல்லாம் பொறாமையும் கூட, பொதுவாகவே உயர்ந்தாலே பிடிக்காத மனிதர்கள் தானே இன்று அதிகளவில் சமூகத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அறிவு அதிகரிப்பிற்கு ஏற்ப அவர்கள் மனிதர்கள் முதற் கொண்டு மரங்களைக் கூட விட்டு வைப்பதில்லை... இது அவர்களில் தவறில்லை.. அவர்களின் அறிவின் அதிகரிப்பே தான் ஆசைக்குக் காரணம். இதுவே பொறாமைக்கும் வித்திடுகின்றது.

சில மனிதர்கள் அவ்வீட்டிற்கு வருபவர்கள் அம்மரநிழலில் சிறிது நேரமாவது இருந்து களைப்பாற வேண்டும் என்று ஆசைப்படுவர். பலாமர நிழல் கொடுக்கும் அந்த இன்ப சுகத்தை இனிதாகவே நுகர்ந்தும் கொள்வார்கள். ஏன் போகும் போதும் கூட "அப்பாடா... இந்தப் பலாமரம் எவ்வளவு நல்லதைச் செய்யுது.. இது கனகாலம் இருக்கோணும்" என வாழ்த்தி விட்டு செல்லுகின்ற நன் மனிதர்களும் இருக்கத்தான் செய்தனர்.

மனிதர்கள் எவ்வாறுதான் இருந்தாலும், பலாமரம் நிலை மாறாது தனது பணியை செய்து கொண்டுதான்... இருந்தது. அந்தப் பலாமரமத்தின் பிரசவங்கள் பெரிய பெரிய பலாக் கனிகளையே சுவையோடு நிறையக் கொடுத்தது...! அதனால் பலாமரத்தின் பராமரிப்பும் அழகாகத்தான் அமைந்திருந் தது. பலாமரத்தின் அருகே வெள்ளை மணல் பரவியிருப்பார்கள்.. அதனை விமலாவின் பாட்டியார் மணலை சளிய விடாமல், மேலே கூட்டிக் கூட்டி விடுவார். விழுகின்ற சருகுகளையும் மெல்ல மெல்லப் பொறுக்கி யெடுத்து நார்ப்பெட்டியொன்றிலே போட்டுக் கொண்டு சென்று வெளியே உள்ள கிடங்கொன்றில் கொட்டி விடுவார்.

அன்று ஒரு நாள் யாருடைய கண்பட்டதோ தெரியவில்லை... இன்றைய நிலை போன்றே கருமுகிற் கூட்டங்கள் வானத்தில் சேர்ந்து கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் இசை மாறத் தொடங்கியது... அதன் வேகமும் மாற்றங்காணத் தொடங்கியது.. திடீரென மழையுடன் சூறாவளிக் காற்று பெரிய இரைச்சலுடன் சுழன்றடிக்கத் தொடங்கியது. வீட்டுக் கூரைகள் எல்லாம் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது எடுத்து வீசப்பட்டன. எங்கும் வெள்ளக்காடானது.... மரண ஓலங்கள் அதிகரித்த வண்ணமே இருந்தது.... ஆனால் விமலாவின் வீட்டிற்கு பெரிதாக சேதங்கள் ஏற்படவில்லை. ஆனாலும் ஊர் அழிவில் தத்தளித்தது... அது மட்டுமன்றி பெரிதாக உயர்ந்து வளர்ந்து நின்ற பலாமரம் முறிவடைந்த நிலையில், பிரசவித்த பலாப்பழங்களும் பிஞ்சுகளும் உதிர்ந்து நிலத்தைத் தொட்ட வண்ணம் இருந்தது... இவ்வாறாக அன்று நடந்த அனர்த்த நிலை விமலாவின் உள்ளத்திலே அசையாத பசுமரத்தாணிபோல ஆழமாக வேரூன்றியிருந்தது...!

அன்று நடந்த அனர்த்தத்தின் அச்ச நிலைதான்.... அவளை இன்றும் வாட்டிக் கொண்டிருந்தது... அன்று முறிந்த பலாமரம் இப்போதுதான் குருத்துக்களை விட்டு சில கிளைகளையும் பரப்பி தலையெடுக்கத் தொடங்கியது.... இந்நிலையில் இன்னுமொரு புயலுக்கு முகங்கொடுக்கும் நிலை புதிதாக வளர்ந்து வருகின்ற அந்தக் குருத்துக்களுக்கும், சிறு கிளைகளுக்கும் ஏற்பட்டுள்ளது என்பதனை நினைக்கும் போது, அவள் நெஞ்சம் கனக்கத் தொடங்கியது. ''என்னடி புள்ள குளிர்காற்று வீசுது..... வெளியிலை நிற்கிறாய்.... உள்ளை வாவன் .....'' என்ற பாட்டியின் அதட்டலான உத்தரவைக் கேட்டதும், நினைவிற்கு வந்தவளாய்.... வீட்டினுள்ளே நுழைந்தாள் விமலா. மகள் பானுவும் எழுந்து விட்டாள். அவளுக்கு ஆறுவயதுதான் இருக்கும். ஆனாலும் படிப்பிலும் விளையாட்டிலும் மகா கெட்டிக்காரி. தந்தை இல்லாத குறை தெரியாமல், தாயினதும் பாட்டியினதும் அன்பிலே வளர்ந்தவள். தந்தை மாணிக்கராசா முந்தின பிரச்சினையுட்குள்ளேயே செத்துவிட்டார். கஷ்ரப்பட்டு கூலி வேலை செய்துதான்..... தனது மகளையும், பாட்டியையும் பார்த்து வந்தாள். தாயும் நோய்வாய்ப்பட்டு எண்பத்தேழாம் ஆண்டே இறந்துவிட்டார். அதன்பின் உதவிக்குப் பாட்டிதான். பாட்டியும் இப்போது தளர்ந்து போய் விட்டார். பாட்டியின் மனமும் தளரும் வேளைகளில் பெரியவளாக பானு வளரும் மட்டுமாவது உயிரோடு வைத்திருக்கும்படி இறைவனை இடையிடையே மனதால் வருந்தி வேண்டிக் கொள்வாள் பாட்டி.

பானு நித்திரையால் எழுந்ததும் மறக்காமல் சண்டையைத் தொடங்கினாள். ''அம்மா.... இண்டைக்கும் சங்கிலி வாங்கித் தராவிட்டால்... நான்.... ரியூசனுக்கு போக மாட்டேன்...'' எனச் சிணுங்கியவளை, விமலா தலையைத் தடவிச் சமாதானம் செய்தாள். ''என்னம்மா நீ எல்லாப் பிள்ளைகளும்.... என்னைப் பித்தளைச்.... சங்கிலி.... போட்டிருக்கென்று பழிக்குதுகளணை.... நான் இனி ரியூசனுக்குப் போக... மாட்டன்....'' என்ற மகளை சமாதானப்படுத்த அதிக பாடுபட்ட போதுதான்..... பாட்டி குறுக்கிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் பிள்ளைக்கு வாங்கித்தாறன்....'' என்ற பாட்டியை பரிதாபத்துடன் பார்த்தது அந்தப் பிஞ்சு.

''என்னடா.... அப்படி பார்க்கிறாய்...'' எனப் பொக்கு வாயைத் திறந்து சிரித்த பாட்டி....... ''நேற்றே நீ கொம்மாவோடை சண்டைப்பட..... நான் சங்கிலிக்கு ஓடர் கொடுத்திட்டன்'' என்றதும் ஆச்சரியத்தோடு பாட்டியை விளித்துப் பார்த்தாள் விமலா.

''என்னடி புள்ளை அப்படிப் பார்க்கிறாய்.... இந்தக் கிழவிக்கு என்னத்துக்கடி காப்பு.... போட வேண்டிய வயதிலை அதுகள் போடவேணும் என நினைச்சு இவன் குமரேசன்ரை பொடியன் நகைக் கடையிலை வேலை செய்யிறானல்லோ.. அவன் நேற்று உதாலை போக நிப்பாட்டி.... காப்பைக் குடுத்து விட்டனான்... அழிச்சு செய்யச் சொல்லி.. இண்டைக்கு சங்கிலியோடை வருவன்...'' என்றதைக் கேட்டதும்.. பானு சந்தோஷத்தில் துள்ளத்தொடங்கினாள்.... ''அச்சாப் பாட்டி'' என பாட்டியின் பொக்குவாய் கன்னங்களிற்கு முத்தம் கொடுத்தாள்.

விமலா பாட்டியை நன்றியுணர்வோடு நோக்கி கொண்டிருந்த வேளையில்தான்.. வெளியே குமரேசன்ரை பொடியன் வந்து நின்றான்.....

''தம்பி வாடா உள்ளை.. மழை தூறுது...''

''குடை கொண்டு வந்தனானணை'' என்றவன் குடையை மடித்து வெளியில் வைத்து விட்டு உள்ளே வந்து பாட்டியின் கையில் கொடுத்து விட்டு ''செய்கூலி சேதாரமெல்லாம் கழிச்சுத்தான் சங்கிலி செய்தனான்.... நான் போட்டு வாறன் மழையும் தூறுது. இனிப் போய்த்தான்... கடை திறக்கணும்...!'' என்றவன் பதிலிற்கு காத்திராது எழுந்து சென்று விட்டான்.

பானு ஆவலோடு பாட்டியிடம் சென்று சங்கிலியைக் கேட்ட போது, பாட்டி கொடுக்க மறுத்து விட்டார். '' இன்டைக்கு ஞாயிற்றுக்கிழமை அதோடை அட்டமியும். ஒரு புது நகை போடேக்கை நல்லநாள் பெருநாள் பார்த்துப் போட்டால்தான்... நகை நட்டுகள் வந்து சேருமாம்.....'' என்றதும் பானுவின் முகம் மாறியது. அதனைக் கண்ணுற்ற பாட்டி ''புள்ளைக்கு நாளைக்கு காலையிலேயே போட்டு விட்டிடுவேன்... என்ன செல்லம்... பாட்டி நல்லதற்குத்தானே.. சொல்லுறன்....'' என்றதும் விளங்கிக் கொண்ட பானு ''ஆம்'' எனத் தலையாட்டி விட்டு ''அம்மா... சாப்பாட்டைப் போடுங்கோ..'' என்றதும் தாய் விமலா சாப்பாட்டுடனேயே வந்துவிட்டாள்.

''இந்தா பிள்ளை நல்லாய் சாப்பிட்டால்தான்.. பெரியாளாய் வரலாம்... அப்பதான்.. சங்கிலி வடிவாயிருக்கும்......!''

''அப்ப கெதியென்று தீத்தம்மா.. குண்டாய் வரப்போறன்...!'' என்றதைக் கேட்டதும், பாட்டி பொக்கு வாயைத் திறந்து சிரிக்க விமலாவும் சிரிக்கத் தொடங்கினாள்.. சிறிது நேரம் சிரிப்பொலிகள் நீடித்தன..... நேரம் நகர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்று மாலை வேளையையும் தொட்டு இரவு நேரத்திற்கு அடியெடுத்து வைத்தது.

இரவு வந்ததும் பக்கத்து காணியில் இருக்கும் வெள்ளத்துட்குள் இருந்து தவளைகளின் விதம் விதமான வாத்திய ஓசைகள் ஒலிக்க ஆரம்பித்து விடும்.. சிறிது நேரத்தில் மழை பெரிய இரைச்சலுடன் பொழிய ஆரம்பித்தது. பானுவும் சங்கிலி கிடக்கும் பாட்டியின் தலைமாட்டுப் பகுதியைப் பார்த்தபடியே உறங்கி விட்டாள். பாட்டியின் கண்களும் நேரம் செல்லச் செல்ல அயரத்தொடங்கியது... பாட்டி நல்லதோர் அமைதியான ஆழ்ந்த உறக்கம் .. அமைதி.. இடையிடையே தவளைகளின்... ஆரவார ஒலி......! இடையிடையே இடி முழக்கம்... பாட்டியின் காதுகளிற்கு அவை ஒன்றும் இடையூறில்லை....! மழை சற்று ஓயத் தொடங்கியது... விடியும் நேரமும் நெருங்கிய போதுதான்.... காது, கன்னங்களையெல்லாம் நன்றாகப் போர்த்திக் கொண்டிருந்த பாட்டி அவற்றையெல்லாம் அகற்றி விட்டு, கொட்டாவி விட்டபடி

''எடி புள்ளை தேத்தண்ணியைப் போடன்டி.. குளிருக்கு உடம்பெல்லாம் விறைக்குதடி...'' என்றபடி .... வாயைப் பொச்சடித்துக் கொள்கிறாள் பாட்டி. ஏதோ நினைவு வந்தவளாக.. தலையணைக்கு கீழே கிடந்த சங்கிலியை எடுத்து... கனத்தைப் பார்க்கின்றாள்... நல்ல கனமாகவே இருக்கிறது. உடனே .... குழந்தையின் கழுத்தில் போட்டு அழகு பார்க்க வேண்டும் போல் அவள் கரம் துடிக்கிறது... ஒரு... அமைதி.... எழுந்திருப்பதாக இல்லை. பாட்டிக்கு சினம் தலைக்கேறுகிறது.... ''இதுகள் இரண்டும் இண்டைக்கெண்டு இப்படி நித்திரை கொள்ளுதுகள் ...ச்சாய்...'' என அலுத்துக் கொண்ட போதிலும், நித்திரையாய்க் கிடந்தாலும் பரவாயில்லை.... நகையைப் பூட்டிவிடவோம் என்ற ஆசையில் அரக்கி... அரக்கி அருகே செல்கின்றாள்.. பாட்டி.

சங்கிலியை எடுத்து ஆசையோடு குழந்தையின் கழுத்தில் வைக்கிறாள் பாட்டி. ''ஆ.....ஆ.... ஐயோ.....!'' அதிர்ச்சியில் மயங்கி விழுந்தாள் பாட்டி. அந்தப் பிஞ்சு கழுத்து வெட்டப்பட்டு... இரத்த வெள்ளத்தில்... மிதக்கிறது.....!

புயலின் வேகத்தில்.... தளிர்கள் விட்டு மீண்டும் வளர்ந்த பலாமரம்... அடியோடு... சரிந்து கிடந்தது.. முற்றத்தில்.....!

* * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளும் மீளும் கிராமமும் நிகழ் காலமும்

**தர்மராஜா அஜந்த குமார்**

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*கரவெட்டி வதிரியைச் சேர்ந்த தர்மராஜா அஜந்தகுமார் 1984ல் பிறந்தவர். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மூன்றாம் வருட மாணவன். கவிதை, சிறுகதை, கட்டுரை, ஆய்வு, பத்தி, இதழியல் விமர்சனம் ஆகியதுறைகளில் ஈடுபாடு கொண்டு எழுதிவருகிறார். மாவட்ட மட்ட தமிழ் மொழித்தின கவிதைப் போட்டியில் இரண்டாம் இடம் (2000), வலம்புரி நடாத்திய செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு, புலோலியூர் க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு (2005) பெற்றுள்ளார். சிறுவர் பாதுகாப்பு நிதியம் அனுசரணையுடனான 'துளிர்' சஞ்சிகையின் ஆசிரியர் (2003), 'புதியதரிசனம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்.*

*தொடர்பு முகவரி :- யார்வத்தை, வதிரி, கரவெட்டி*

**ப**ற்றைகள் அடர்த்தியாய் படர்ந்து படர்ந்து குறுகலாகி, மணலால் நிரம்பி வழியும் இந்தத் தெரு நான் போகப்போக இன்னும் இன்னும் குறுகிக்கொண்டு போவதாய்த் தோன்றியது. பற்றைகளின் கிளைத்து நீண்ட சில முட்களும் தடிகளும் சைக்கிளில் போகும் என்னைக் கீறி இரத்தம் பார்க்காமல் விடாது போன்றதான பிரேமை என்னுள் நுழைந்து எழுந்தது.

கேசவன் முன்னுக்குப் போய்க்கொண்டு இருந்தான். மணல் செறிந்த தெருவில் மிக இலாவகமாக சைக்கிளை வெட்டி வெட்டி ஓடிக்கொண்டிருந்தான். நான் அவனுக்குப் பின்னுக்கு வந்துகொண்டிருப்பதால் எனக்கு அவன் வித்தை காட்டப் பிரயத்தனப்படுவது இரண்டு மூன்று தரம் திரும்பித் திரும்பி பல்லிளித்ததிலேயே எனக்குத் தெளிவாக விளங்கிவிட்டது.

முதன் முதலாக இப்போதுதான் இந்த இடத்திற்கு வருவது போன்றதான பிரேமை என்னுள் புடைத்துக் கிளைத்தது. புதிர்ப்பிராந்தியம் ஒன்று தன் வாயுள் என்னைச் செரித்துக் கொண்டிருப்பதான பதற்றம் பரவிக் கழுத்து, முகமெல்லாம் வியர்த்தது. சேர்ட் மேல்ப் பொத்தானைக் கழட்டிவிட்டேன். காற்று கழுத்தில் ஊர்ந்து தடவிய போது இனம்புரியாச் சிலிர்ப்பும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் கேசவா கொஞ்சம் மெதுவாய்ப் போடா" என்ர சத்தம் கேட்டதும் ஏதோ கழுத்துச் சுளுக்கெடுத்தது போல வலப்பக்கத்தாலும் இடப்பக்கத்தாலும் முகத்தை மாறிமாறித் திருப்பி "மண்வெட்டிப்"பல்லால சிரிச்சுக்கொண்டு, "டோய் அண்ணா வா... ..வா...வாடா நேரம் போகுது...." அவனின் கத்தல் காதுக்குள் திடுமென இறங்கி ஊர்ந்து நெஞ்சடியில் வந்து அதிர்ந்தது.

"டேய் நில்லடா நானும் வாறன் என்னை விட்டிட்டு எங்கயடா போறாய்?"

"ம்பாவுக்குத் தண்ணி வைக்கோணுமெல்லோ, விசுக்கெனப் போய் வருவம் வா"அவன் சொல்லிக் கொண்டே போய்க்கொண்டிருந்தான் . இப்பவும் "ம்பா" எண்டுதான் மாட்டைச் சொல்லுறான். இப்ப எவ்வளவு வடிவாக் கதைக்கிறான். முந்தியெண்டா அம்மா, அப்பாவைத் தவிர ஒண்டுமே ஒழுங்காச் சொல்ல வராது.

அவனுக்கு இந்த மணல் தெரு வாலாயமாகி விட்டது. என்னால் இந்த தெருவில் சைக்கிள் ஓடவே முடியவில்லை. மணலுக்குள் "றிம்" புதைய றிம்முக்கு மேலால் மணல் நிரவி வழிந்தது. ஒரு மாதிரி சைக்கிளை வலிச்சுக்கொண்டு அவனுக்குக் கிட்டப் போனேன்.

இந்த றோட்டாலேயே முந்தி வாறனாங்களடா?

"ஓ"

எனக்கு எல்லாமே புதிராய் வியாபித்தது. கேசவன் வீட்டுக்கு கன வருசத்துக்கு முந்தி வரயிக்கை, எட்டாங்கட்டை வரணியில பஸ்சால இறங்கி நானும் அம்மாவும் சிலவேளை தங்கச்சிகளும் நடந்துகொண்டு மந்துவிலுக்கு வந்திருக்கிறம். எத்தினை அடையாளங்களை மந்துவில் போகுமட்டுமான வழிக்கு வைத்திருந்தேன். வாசிகசாலை, கதிரையில் நீலவாளிக்குள் தண்ணியும் கப்பும் படலை வாசலிலே வைச்சிருக்கும் வீடு, தென்னந்தோட்டம், பனங்கூடல், ஆலடிப்பள்ளிக்கூடம், சங்கக்கடை, மைதானம், சின்னச்சந்தை, கள்ளுத் தவறணை, சின்ன வைரவர் கோவில், ஸ்ரீபாரதிப் பள்ளிக்கூடம், வாழைத் தோட்டம், ஏறி இறங்கும் தெரு, அதுக்கு இரண்டு கால் வைச்சதும் அலம்பலால கட்டின படலை, படலைக்குப் பக்கத்தில் வைக்கல் கும்பி அதுதான் கேசவன் வீடு. அதாவது ஆசையம்மா வீடென்று வைத்திருந்த அடையாளங்கள் எல்லாம் பற்றைக்குள் பதுங்கிக் கிடந்தன.

"கனவின் நெடும்பாலையில் நெற்றியில் கல்லுவைத்து முட்டுக்காலில் இருப்பதான" ஐயம் தோன்றிப் பிதுங்கியது.

வீடுகள் சில இருந்ததற்கான அடையாளங்கள் சில தெரிந்தன. அவை சிதை சிதையென்று சிதைந்து போய்க் கிடந்தன. கேசவனை ஏதேதோ கேட்க நா உன்னியது. அவனை இந்த மாதிரி விஷயங்கள் கேட்க, அவன் ஏதேதோ? உள்ளதாய்த்தான் சொல்லுவான். ஆனால் அவன்ர மொழியைக் கிரகிக்கும் நிலையில் நான் இல்லை.

கேசவன் அவங்கன்ர வீடு, தாடியப்பா இருந்த கொட்டில், நான் முன்னமே அறிஞ்சது மாதிரித்தான் போல, வாஸ்தவத்தை மனம் கிரகித்த போதும், முடியவில்லை, எல்லா நினைவுகளும் மூச்சு முட்டத் தொடங்கியது நாவரண்டு தொண்டை எரிந்தது. நீலவாளிக்குள் தண்ணீர் வைத்திருக்கும் வீடு ஞாபகத்திற்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய் கேசவா முந்தி நாங்கள் வாற வழியில தண்ணி வைச்சுக் கிடக்குமே, அந்த வீடு எதடா?'' கேட்க நா துடித்தது வேண்டாம்.

''அண்ணா டோய் வந்தாச்சு''என்று ''கூப்போட்டு'' இரண்டு கைகளையும் உயர்த்திக்கொண்டு படலை இல்லாத வீடிருந்த அடையாளம் உள்ள இடத்திற்குள் உள்ளட்டு சைக்கிளை நிற்பாட்டி இறங்கி நடந்தான்.

என் கண்கள் பனித்தன. நெஞ்சு எரிந்து முகமெல்லாம் ஏதோ ஊர்ந்து அரியண்டம் செய்து என்னைப் பிய்த்து எறிவது போலத் தோன்றியது. சைக்கிளின் ஸ்ராண்டைத் தட்டிவிட்டு இரண்டு எட்டு வைச்சதும் சைக்கிள் விழுந்து சத்தம் கேட்டது. திரும்பி பார்க்க மனம் இல்லாமலேயே கேசவனுக்கு பின்னால் போய் அவன் முதுகைத் தொட்டேன்.

''அண்ணோய் பாத்தியா...'' அவன் வாய் திறந்திருந்த விதமும் கண்களின் கலக்கமும் என்னைப் பிசைந்தன.

வீட்டின் நிலம் மட்டும் கிடந்தது. சீற்றெல்லாம் காணாமல் போயிருந்தன.

என் நெற்றியின் ஓரத்தைத் தடவிக் கொண்டேன் ''ஆகச் சின்னனில்'' நான் ஓடி விழுந்த வாசல் படி சிதைந்து போய் அதில் பதிந்திருந்த சிப்பியும் காணாமல் போயிருந்தது. இப்போதும் இழைப்போட்டதால் அடையாளமாய் இருக்கும் நெற்றியின் ஓரத்தைத் தடவிக்கொண்டேன். ராசாத்தி அக்கா ஆசையோடு வளர்த்திருந்த பூக்கண்டுகளின் அடையாளமே இல்லை. கிணத்தை எட்டிப்பார்த்து அதுக்குள் இருக்கும் கஞ்சலைப் பார்த்துவிட்டு விறுவிறுவென்று ''அந்த'' இடத்துக்குப் போனேன். தேசி பட்டுப்போய் கிடந்தது. கொட்டில் பாறிப்போய்க் கிடந்தது. கிடுகோ, சிலாகையோ கண்ணுக்குத் தெரியவில்லை. சாணி பூசி மெழுகும் நிலம் மட்டும் உயர்ந்து கிடந்ததே ஒரே ஒரு அடையாளம், அதுவும் சில இடங்களில் யானை மிதித்துப் போனது போல் சிதைந்து கிடந்தது.

''மெய்தான் அரும்பி விதிர்விதித்து....''

தாடியப்பாவின் குரல் நானும் கேசவனும் நின்றிருந்த இடத்தில் ததும்புவதாயத் தோன்றியது.

**(2)**

''தாடியப்பா...''

சொல்லிப்பார்க்கும் போதே மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து ஏதோ ஒரு சக்தி என்னை அருட்டத்தொடங்கியது.

இதில் இருந்த சின்னக்கொட்டிலில் ''கூர்மையான கண்களோடு,சுருக்கம் விழுந்த முகத்தோடு நீண்ட தாடியோடு (அது ஆகலும் நீண்டிருந்தால் தாடி நுனியை முடிந்திருந்தார்) முகத்தில் வளர்ந்த சின்னக் ''காயோடு'' கழுத்தில் உருத்திராட்ச மாலையோடு கட்டியிருக்கும் வேஷ்டியைச் சுற்றி ஓம்முருகா என்று எழுதிய துவாய்த் துண்டோடு எளிமையின் எளிமையாய் இருந்த தாடியப்பாவின் உருவம் எங்கும் அசைவதாய்த் தோன்றியது. தாடியப்பாவின் கையில் எப்போதும் தேவாரப் புத்தகம் இருக்கும். நான் ஆசையம்மாவின் வீட்டை வரும்போது அம்மாவின் தம்பியாகிய தாடியப்பாவைக் காணாது போகமாட்டன். நான் வரும் போதெல்லாம் சாணி பூசி மெழுகிய நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாணி கட்டி இருந்து கொண்டு மடியில் தேவாரப் புத்தகத்தை வைத்து தேவாரத்தை முணுமுணுத்துக் கொண்டிருப்பார். அவரின் கைகள் வயது போனதாலோ என்னவோ எப்போதும் நடுங்கியபடி இருக்கும். இராகத்திற்கேற்ப அவரின் நீண்ட வெண்தாடியும் கீழும் மேலும் அசைந்து ஆடும். திடீர் திடீரென கண்களின் அணையுடைத்துப் புனல் பெருகும். எனக்கு கைகளின் மயிர்க் கால்கள் சில்லிட்டு எழும். நெஞ்சு தடவி ஏதோ ஒன்று என்னை நெகிழ்த்தி நுழையும். நான் தாடியப்பாவைப் பார்த்தபடியே இருப்பேன். "அஜந்தா இங்கே வாடா" அன்பொழுகத் தாடி அசைந்து குழைந்து வரும் சொற்கள். அவருக்கு மிக நெருக்கமாய் போகச் செய்யும். "இரு" பக்கத்தில் சப்பாணி கட்டியபடி இருப்பேன்.

"இந்தா இந்த பாட்டைப் படி பார்ப்பம்"

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து...

"உப்பிடி இல்லை.. இராகமாய்ப் படிக்க வேணும்.. இஞ்சதா..."

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து

உன்விரை யார்கழற்கென்

கைதான் தலைவைத்துக் கண்ணீர்

ததும்பி வெதும்பி யுள்ளம்..."

அவரின் வெண்தாடி அசைவும், கை நடுக்கமும், கண்ணின் புனல் பெருக்கும், பாட்டின் உருகிப் பெருகும் இராகமும் என்னில் ஏதோ கட்டுக்களை மளமளவென்று அவிழ்த்து நான் "விரிந்து" செல்வதாய்த் தோன்றும். எனக்கும் கண்கலங்கும். அவர் பாடுவதைப் பார்த்துக்கொண்டே இருக்க மனம் பிரயாசைப்படும்

"இப்போது தாடியப்பாவும் உயிரோடு இல்லை. சமாதியில் அவரை இருத்தியாச்சு"

இப்போது அவர் இருந்தாலும் எனக்கு இராகத்தோடு பாடத்தெரிந்தும் நான் பாடமாட்டேன். அவரின் பாடலைக் கேட்க செவி இப்போதும் ஊறுகிறது.(நா ஊறுவது போல).

காலமை, மத்தியானம், பின்னேரம் என்று மூன்று காலப் பூசையை கந்தசாமி கோயிலில் தாடியப்பா செய்யிறவர். நான் நின்றால் என்னையும் கூட்டிக்கொண்டு போவார். நான் கேசவனையும் கூப்பிடுவேன்.

என் முன் வயல் வெளிக்குள் இருக்கும் கந்தசுவாமி கோயிலும் பக்கத்தில் இருக்கும் ஆண்டா குளமும் விரிந்தது. தாடியப்பா கோயிலுக்குள் போய் விடுவார். நானும் கேசவனும் திருநீறை எடுத்துப் பூசிக்கொண்டு வயல்வெளி வரம்புகளில் ஓடத்தொடங்குவோம். அவனை நானும் என்னை அவனும் மாறி மாறித் துரத்துவோம். வயலுக்குள் இறங்காமல் வரம்பில் மட்டுமே ஓடவேண்டும் என்பது விதி. எப்படியோ நான் அல்லது கேசவன் வரம்பில் இருந்து பிரண்டு விடுவோம். அப்படியே கோயிலோடு பக்கத்தில் இருக்கும் ஆண்டா குளத்தில் குளிப்பதற்காய் பாய்ந்து விடுவோம். கோயிலில் நின்று பார்க்கும் தாடியப்பா தண்ணிக்குள் கன தூரம் போக விடமாட்டார். முகத்துக்கு முகம் ஜலத்தை எத்தி எத்தி விளையாடுவோம். எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேசவனுக்கும் பொழுது போவதே தெரியாது. நானும் அவனும் காற்சட்டை சேர்ட்டுடன் அப்படியே குளத்தில குளிப்போம். குளத்துக்கு வெளியே வந்து சேர்ட்டைக் கழட்டி இரண்டு கைகளாலும் தலைக்கு மேலே உயர்த்திக்கொண்டு வரம்புகளில் ஓடித்திரிகையில் சேர்ட்டு காற்றுக்கு ஓரளவு காய்ந்து விடும். கொஞ்ச ஈரத்துடன் சேர்ட்டைப் போடுகின்ற போது உண்டாகின்ற ஒரு வகை உணர்வு சந்தோஷத்தைத் தரும்.

கொஞ்சத்தாலே "தம்பியவை இஞ்ச வாங்கோ" எண்டு தாடியப்பா இனிப்பில்லாத பச்சையரிசிப் புக்கையும், கொஞ்சம் கறுத்த கதலிப்பழமும் கைகள் நடுங்கியபடி இருக்க எங்களுக்குத் தருவார். "வோட்டர்ப்பம்" வேலை செய்யும் போது, அதன் மேல் பகுதியில் கைவைக்கும் போது அதிர்வது போல் தாடியப்பாவின் கை என் கையில் படும்போது உணர்வேன். அவர் கை ஒரு மின்சாரம்.

சரஸ்வதி பூசையன்று வடமராட்சிச் சனம் எல்லாம் தென்மராட்சிக்கு பாதுகாப்புக் கருதிப் போனது எனக்கும் வாசியாகிப்போனது. அம்மா அப்பா தங்கச்சிகள் எல்லோரும் ஆசையம்மா வீட்டை வந்துவிட்டார்கள். எனது உலகம் தாடியப்பா, கேசவனோடு சுற்றத்தொடங்கியது.

பின்னேரப் பூசைக்குத் தாடியப்பா போகையில் நானும் கேசவனும் போவோம். அவர் கோயிலுக்குப் போக, மாடுகளைப் பார்க்க வயலுக்கு அங்கால இருந்த சின்னக்காட்டுப் பகுதிக்குள் போய் விடுவோம். அது பெரிய காடு அல்ல. கனக்க பத்தையள் நிற்கும். இடைக்கிடை மணல் குவிஞ்ச வெளிகளாயும் இருக்கும். மாடுகளைப் பாத்திட்டு கேசவனும் நானும் அந்த மணல் வெளிக்குள் இருப்போம். அதில் இருந்துகொண்டு நான் உழுவான் பூச்சியைத் தேடத் தொடங்குவேன். கேசவனும்தான். எனக்கு உழுவான் பூச்சியெண்டால் நல்ல விருப்பம், எப்பிடியும் அதைக் கண்டு பிடிச்சு கையால சுத்தப்படுத்தின மண்ணில விடுவன். அது உளர்ந்து கொண்டு இலங்கைப்படம் மாதிரிக் கீறத்தொடங்கும். எனக்கும் கேசவனுக்கும் புளுகம் வந்துவிடும். ஒரு நாள் அப்பிடித்தான் உழுவான் பூச்சியைக் கொண்டு படம் கீறுவதைப் பார்த்துக்கொண்டிருக்கையில் ஹெலி இரைந்து கேட்டது. எனக்கும் கேசவனு க்கும் நடுங்கியது. பத்தைக்குள் ஒளிஞ்சு கொண்டோம். கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தேன். ஏதோ பேப்பர்கள் விழுந்து கொண்டிருந்தன. எங்களுக்கு பயம் விலகி விட்டது. யார் கூட பேப்பர் பொறுக்கிறது என்ற போட்டியே வந்து விட்டது. நாங்கள் அந்த காட்டு வெளியெல்லாம் "சுழியோடிப்" பேப்பர் பொறுக்கத் தொடங்கினம். அது சந்திரிக்கா அரசின் துண்டுப்பிரசுரம். நானும் கேசவனும் களைத்துப் போனோம். வந்து மணலில் இருந்தோம்.

உழுவான் பூச்சியைக் காணவில்லை. அது கீறியிருந்த இலங்கை போன்ற படமும் எங்கள் பதகளிப்பு ஓட்டத்தில் எங்களை அறியாமலே அழிந்து போயிருந்தது. திடீரென ஓர் ஐடியா இரண்டு பேருக்கும் வந்தது. இரண்டு துண்டுப் பிரசுரங்களை கீழே வைத்து அதில் மணலில் வீடு கட்டத்தொடங் கினோம். வீடு நல்லாகத்தான் எழும்பத்தொடங்கியது. அப்போதுதான் எங்கோ செல் விழும் சத்தம் கேட்டது. இரண்டு பேரும் பதகளிப்பட்டு எழுந்ததில் மணல் பொல பொலபொலவெனச் சரிந்து விழுந்தது. இரண்டு பேரும் கவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு தாடியப்பாவை நோக்கி ஓடத்தொடங்கினோம். கேசவன் ஓடிக்கொண்டிருக்கையில் "ம்பா" "ம்பா"என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவனுக்கு மாடுகள்தான் முக்கியம். ஆனால் எப்பிடியும் வீட்டுக்கு வந்திடும் கவலைப்படாதே என்று நான் அவனைத் தேற்றினேன். தாடியப்பா கோவிலில் இருந்து எங்களைத் தேடி வயல் வரம்பில் வருவது தெரிந்தது. தாடியப்பாவின் கைகள் இரண்டும் எங்களை அணைத்தன. நிமிர்ந்து பார்த்தேன். தாடியப்பாவின் கண்களில் இருந்து நீர் வழிந்தது. தேவாரம் பாடவில்லையே, ஏன் கண்ணீர்? புரியாமல் அப்போது அவரைப் பார்த்தேன். வீட்டை நோக்கி மூவரும் நடக்கத் தொடங்கினோம். எனக்குள் உழுவான் பூச்சி கீறிய படம், மணல் வீடு, வந்துகொண்டிருந்தது.

## (3)

நாங்கள் எல்லாம் வடமராட்சி வந்த பிறகு தாடியப்பா ஒரு நாள் சமாதியாகிவிட்டார் என்று அறிந்த போது சோகத்தில் துவண்டு போனேன். எங்கன்ர வீடே ஒரு செத்த வீடு போல மாறியிருந்தது.

ஆமிப்பிரச்சினையில தென்மராட்சிப் பக்கம் போக முடியவில்லை. தாடியப்பாவை எரிக்காமல் அவர் விருப்பப்படியே சமாதியில் இருத்தியதாய் அறிந்தேன்.

மீசாலையில் தான் இப்ப ஆசையம்மாவை இருக்கினம். மந்துவில் வீடு இப்போது இல்லைத்தானே.

நானும் கேசவனும் மந்துவிலைப் பார்க்க வெளிக்கிடயிக்கையே

"தாடியப்பான்ர சமாதிப்பக்கம் போகிடாதே, அங்கால கனக்க மிதிவெடி கிடக்காம்" அம்மாவின் குரல் இப்போதும் பிடரியை பிராண்டுகிறது. அண்ணா வா போவம். கேசவனோடு கொட்டிலைத்(?) திரும்பித் திரும்பி பார்த்தபடி சைக்கிள் இருந்த இடத்திற்குப் போகத் தொடங்கினேன்.

"சமாதியைக் கூடப் பார்க்க முடியவில்லையே"

நிர்த்தாட்சண்யம் இல்லாமல் "எல்லாவற்றின்" மீதும் எனக்குக் கோபம் எழுந்தது.

சைக்கிளை "உழக்க" முடியவில்லை.

திடீரெனக் கண்ணுக்குள் பொருத்துவான்கொடி அம்பிட்டது. எத்தினை நாள், மந்துவில் காடுகளுக்குள் தங்கச்சி பிறந்த நேரம் அம்மாவுக்கு பொருத்துவான் குழைப்புட்டு அவிக்கிறதுக்காக தேடி அலைந்து இருக்கிறேன். இப்போது தாரளமாய்.....

இன்னும் ஆவரசு, கிஞ்ஞா, ஈச்சம், ஆமணக்கு, சூரை, காரை, துவரை, கரும்பை, மாங்கொடி என காணும் இடமெங்கும் விரிந்து படர்ந்து...

கேசவன் சைக்கிளை வெட்டி வெட்டி ஓடிக் கொண்டிருந்தான். எனக்குத் தலை சுற்றுவது போலத் தோன்றியது.

* * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலினங்கள்

## சிவனு மனோகரன்

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*மலையகத்தில் ஹட்டனைச் சேர்ந்த சிவனுமனோகரன் 1978ல் பிறந்தவர். ஆசிரியராகத் தொழில் புரியும் இவர் தற்போது பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி கற்கை மாணவராக உள்ளார். கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம் ஆகிய துறைகளில் எழுதி வருகிறார். 2005 விபவி படைப்பிலக்கியப் போட்டியில் பரிசு, 2005 ஞானம் நடத்திய புலோலியூர் க. சதாசிவம் நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு, வீரகேசரி பவளவிழாச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு, லண்டன் புதினம் நடாத்திய உலக சிறுகதைப் போட்டியில் பரிசு, லண்டன் சுடரொளி நடத்திய இரண்டாவது உலகக் கவிதைப் போட்டியில் பிராந்திய மட்டத்தில் மூன்றாம் பரிசு, கல்லோயா இளைஞர் கழகம் நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசு ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.*

**ச**தாவொரு நெருடலில் உழன்று அவஸ்திக்கும் இலக்கிய மனசிற்கு ஓய்வென்பது கிடையாது. கூர்மையான அவதானமும் தூரநோக்கும் ஒருங்கிணைந்திருப்பதாலோ என்னவோ எப்போதுமே ஒரு தாகம் தணியாத படிக்கு உள்ளுக்குள் உலவிக் கொண்டேதான் இருக்கும். அன்றும் அப்படிதான் இயல்பு மீறி பயணிக்கும் நடைமுறை அத்துமீறல்கள் மீதும் இனவெறியின் உயர்ச்சிகள் மீதும் வெறுப்புக் கொண்டு கிடந்தவனுக்கு காக்கைகள் இட்ட பெருங் கூச்சல் உள்ளுக்குள் ஏதேதோ பதியமிட அச்சமும் பீதியும் கலந்த ஒரு விதமான பதற்றத்தோடு வெளியே வந்தான் சிவராம்.

அந்த வட்டாரத்தின் காக்கைகள் முழுதும் திரண்டு வந்து அலறி துடிக்கும் அளவிற்கு ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என்று அவனால் யூகிக்க முடிந்தாலும் சட்டென ஒரு தீர்மானத்திற்கு வரமுடியவில்லை என்பது உண்மையே. என்னதான் காலத்தை உதறித் தள்ளி பயணித்தாலும் ஏதோவொரு கட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் சூழ்நிலைக் கைதியாய்தான் வாழ வேண்டியிருக்கிறது என்பதை எண்ணி நொந்து கொண்டதோடு வட்டமடித்துக் கரையும் காகங்களின் நிலைகண்டு உறைந்து எவ்வளவு நேரம் நின்றிருந்தானோ தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் காகங்களின் மீது சில காரணங்களுக்காக அதிக பிரியம் கொண்டிருப்பவன்தான் சிவராம். ஒரு படைப்பாளனுக்கு இருக்க வேண்டிய அடிப்படைத் தகுதியில் எல்லோரையும் ஒரே கோணத்தில் வைத்து சமநிலை பாராட்டுவதும் உள்ளடங்கும் என்பதை இயல்பாகவே உணர்ந்திருந்ததாலோ என்னவோ அவனால் காகங்களின் மீதும் பிரியம் கொள்ள முடிகிறது போலும் உலக நடைமுறையில் காகங்களின் மீது கருணை காட்டுவோர் தொகை சொற்பமாகத்தான் இருக்கிறது. கருமையின் அழகில் இன்புற்ற மஹாகவி ஜனனித்த உலகில்தான் இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள முடியாதபடிக்கு உலகம் கொடுமையானதாக மாறியிருக்கிறது என்ற வேதனை யும் விம்மலும் தான் சிவராமை விபரீத கற்பனைகளில் வீழ்த்தி வேடிக்கை பார்க்கிறது. கசப்பான உண்மைகள் எல்லாம் உள்ளத்தை சுட்டு அரிக்கும் வரை இப்படித்தான் பறவைகள் காட்டும் சமிக்ஞைகளுக்கெல்லாம் உயிரை கரங்களில் ஏந்தி ஊசலாட வேண்டியிருக்கும் என்ற சலிப்புடன் காக்கைகள் மையமிடும் இடத்தை நோக்கி நகர முயன்றவனை "ஏன்டா சிவராம் அந்தப் பக்கம் எங்க போற நமக்கென்ன இது புதுசா எல்லாம் வழமை போலத்தான். நீ போய் ஏன் சிக்கலில் மாட்டிக் கொள்ளனுமா? என்றதும் "என்னம்மா என்னதான் நடந்திருக்குனு பார்க்க வேணாமா" என்று காக்கைகள் கத்தி கரையும் இடத்தை அண்மித்த சிவராமிற்கு அதிர்ச்சி காத்திருந்தது.

மலினப் பட்டுப் போன உயிர்களின் பெறுமதியை நாம் உணர்ந்திருக்கி றோமா என்று நமக்கு நாமே வினா எழுப்பிக் கொள்ள வேண்டிய தேவைப் பாட்டினை உணர்த்திப் போவதற்காகவே அமைத்துக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்ப மாகப்பட்டது சிவராமிற்கு. ஈனக் கொலைகளுக்கும் அத்துமீறல்களுக்கும் இடை நடுவே சாதாரணமாய் உலவித் திரியும் மனித கூட்டங்களுக்கு பாடம் புகட்டுவதாய் எங்கோ அடிப்பட்டு குருதியில் தோய்ந்து தலைதுண்டிக்கப்பட்டு மரணித்துக் கிடக்கும் ஒரு காக்கையின் மறைவுக்கான இரங்கல் கூட்டம்தான் இத்தனை ஆர்ப்பரிப்புகளுக்கும் காரணம் என்பதை அறிந்ததும் மனசு அதிகமாய் வலிக்கத் தொடங்கியது.

இதொன்றும் நம் சமூகத்தின் பார்வையில் இருந்து காக்கைகள் மாறுபட்டு இருக்கிறது என்பதற்கான வலி கிடையாது. இன்னுமே அழுகிப் புழுத்த பிணங்களை வட்டமடிக்கும் அற்ப பிறப்புகளாய்தான் காக்கைகள் கணிக்கப்படுகின்றன என்ற வலிதான் சிவராமை அதிகமாய் படுத்தியது.

காக்கைகளின் ஒவ்வொரு அசைவும் ஏதோவொரு பாடத்தை கற்று தருவதாய் உணரும் சிவராம் தன் இனத்தின் அழிவுக்காய் எந்த பிரயத்தனமும் கொள்ளாத மனிதர்கள் எங்கே காக்கைகள் எங்கே என்று குழம்பியவாறே வீடு நோக்கி பயணிக்கிறான்.

மனித சமூகத்தில் இருந்து பறவைகள் உலகம் எவ்வளவு மாறுபட்டிருக்கிறது என்ற உண்மை உள்ளுக்குள் பல்வேறு குடைச்சல்களை உள்திணிக்க சிந்தனை கால் தழைத்து நடக்கத் தொடங்குகிறது. பகுத்தறிவாலும் மேன்பட்ட சிந்தனையாலும் மனிதர்கள் மேலானவர்கள் என்று மார்தட்டிக் கொள்ளும் பிதற்றலில் அர்த்தப்பாடு இருக்கிறதா என்ற சிந்தனைக்குள் விழுந்த சிவராமின் நிலை மதுவில் விழுந்த புழுவின் நிலையை விட கொடுமையான தாகத்தான் இருந்தது. நாளுக்குநாள் தலைகள் கொய்து குவிக்கப்படும் மனித மலினங்களுக்காக கைகோர்த்து குரல் கொடுக்க தயாரில்லாத ஜந்துகளுக்கு மத்தியில் இந்தக் காக்கைகள் உயர்வாகத்தான் இருக்கிறது என்ற சிந்தனையோடு அறைக்குள் வந்து கட்டிலில் சாய்கிறான் சிவராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் அழகு நுகர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு காட்டுவதாலோ என்னவோ அறை முழுவதும் கலை இரசனையின் வெளிப்பாடாய் மிக நேர்த்தி யாய் அமைந்திருந்தது. அர்த்தமற்ற மனித தேடல்களுக்கு மத்தியில் இருந்து மாறுபட்டு மனசுடன் தொடர்புபட்டிருக்கும் சந்தோஷத்தின் சகவாசங்களுக்காய் தெரிவு செய்த படங்களுடன் அறை மேலும் மிளிர்ச்சி பெற்றிருந்தது. பொதுவாக காதல் பறவைகளின் சல்லாபங்களில் ஈடுபாடு காட்டும் இளைஞர்களில் இருந்து மாறுபடும் சிவராம் ஒற்றுமையின் சின்னமான காக்கைகள் மீது நாட்டம் கொண்டிருப்பதற்கு காரணம் இல்லாமலும் இல்லை.

தன்னுடைய ஏராளமான இலக்கிய படைப்புகளில் காக்கைகளின் பங்களிப்புகள் அதிகமாகவே இருந்திருக்கிறது. இதுவும் கூட இவ்வாறாக காகங்களின் மீதான பிரிய மனோபாவத்தை சிவராமினுள் பதியமிட்டுப் போயிருக்கலாம்.

அசதியும் மனச்சோர்வும் மிகைப்படும்போது மனம் அமைதியடையத் துடிக்கும் இது நியதி. அதே நிலைதான் சிவராமிற்கும் அசதியில் அப்படியே கண்ணயர்ந்து கொள்கிறான். யுத்த தேசத்தில் இருந்து தொலைதூரம் பயணிக்க துடிக்கும் மனசின் அவாவிற்கு ஆறுதல் அளிப்பதாய் எல்லா ரணங்களையும் மறந்து எல்லை கடந்து பறக்கும் மனசு தற்காலிகமாய் அந்த அவஸ்தைகளில் இருந்து விடுபட்டு கிடந்தது உண்மை. மாற்றுலகம் ஒன்றை தரிசிக்கும் பூரிப்பில் விழிகள் எட்டும் தூரம் வரை பார்வை வீசி குதூகலிக்கும் சுயத்துடன் காக்கை இறக்கைகளின் கதகதப்பில் மெய்மறந்து பறக்கிறான் சிவராம். எந்த விதமான அச்சமும் பீதியும் இல்லாமல் சந்தோஷத்துடன் பறவைகளோடு பறக்கும் சிவராம் மனித சிநேகத்தில் ஆங்காங்கே புதையுண்டு கிடக்கும் படுகுழிகளைப் போல பறவைகளின் சிநேகத்தில் எதையும் சந்திக்கப் போவதில்லை என்ற நம்பிக்கையோடும் உறுதியோடும் அவற்றை பின் தொடர்ந்தான்.

சில நிமிட சிறகடிப்புகளுக்குப் பின் மனித வீச்சம் முட்டி நாசி நரம்பறுக்கும் அதே பிணவாடை அவனை பழைய உலகிற்குள் தள்ளி குதூகலிக்க மனசிற்குள் மெதுவாய் பயம் கவிழ்கிறது. எங்கே காக்கைகள் தன்னை தனிமைப் படுத்தி விட்டு பிணங்களை நோக்கி சிறகடித்து விடுமோ என்று. ஆனால் இது எதையுமே பொருட்படுத்தாமல் பறக்கும் காக்கைகளின் நடத்தை மாற்றம் சிவராமை மேலும் சிந்திக்கத் தூண்டியது.

கொஞ்சம் பிற்பட்ட காலமானாலும் சரி தற்போதும் சரி அநேகமாக தமிழ் சினிமாக்களில் பிணங்களை அடையாளப்படுத்துவதற்கு காக்கைகளின் வட்ட மடிப்புகளைதான் குறியீடுகளாய் பயன்படுத்துகிறார்கள். இந்த நடைமுறைக்குள் ஊறி உன்னதம் கண்டதாலோ என்னவோ அவனுள் காக்கைகளின் வட்டமடிப்புகள் விபரீத சிந்தனைகளை உள் திணித்து போகிறதோ தெரியவில்லை.

அழுகிப் புழுத்த பிணங்களைத் தாண்டி சிறகு நீள்கிறது. காக்கைகளின் எதிர்பார்ப்புகள் இவைகள் அல்ல என்பதை தவிர அந்தக் கணப்பொழுதில் சிவராமால் வேறு எதையும் உணர முடியவில்லை. அப்போது சம்பாஷித்துக் கொள்ளும் காக்கைகளின் எண்ணப் பகிர்வுகள் சிவராமினுள் பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏதோ கோடு போட்டு வாழ்வதாகவும் பகுத்தறிவின் உன்னதம் நுகர்வதாலும் மேம்பட்டவர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் மனித மக்குகளின் அறியாமைகள் எல்லை தாண்டி பயணித்துக் கொண்டிக்கும் கொடுமை என்றுதான் தொலையுமோ'' என ஒன்று சலிப்புக் கொட்ட மற்றொன்று ''மாற்றம்! மனித மனங்களில் என்று வாய் விட்டு நகைக்க மிரண்டு போய் செவிகளை கூர்மையாக்கிக் கொள்கிறான் சிவராம். ''வக்கிரத்தின் மறுபெயர் என்னவென்று கேட்டால் இம்மி நிமிடம் தாமதிக்காமல் சட்டென பதில் பகர்வோன் மனிதன்தான் என்று இனத்துக்குள்ளேயே கொன்று குவிக்கும் கொடுமை வேறு எந்த இனத்துக்குள்ளேனும் இதுவரை தரிசித்திருந்தால் சொல் என் வாதத்தில் இருந்து வாபஸ் பெற்று விடுகிறேன்'' என்று ஆதங்கப்படும் இன்னொரு காக்கையின் அமில வார்த்தைகள் சிவராமின் உணர்வையும் எண்ணத்தையும் காயப்படுத்திப் போனாலும் அந்த வார்த்தைகளில் உறைந்திருக்கும் ஆத்மார்த்தத்தினை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில்தான் இருந்தான்.

காக்கைகளின் சம்பாஷணைகள் தொடர்கின்றன ''எப்படி இவர்களால் இயல்பாய் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ள முடிகிறது தட்டிக் கேட்கப் படாத வரை மலினப்படுத்தப்படுவோம் எனும் சாதாரண தத்துவத்தினை உணர முடியாத இவர்கள் எப்படி தங்களை பகுத்தறிவின் சின்னம் என்று அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்?'' என்ற அர்த்த புஷ்டியான வினாவிற்கு பதில் பகர தயாராகிறது மற்றொரு காகம்.

''மனிதர்களின் நடைமுறை பிறழ்விற்கு மரபியல் நஞ்சூட்டல்களும் காரணங்களாக இருக்கின்றன. தன்னையும் தன் சுற்றத்தையும் பாதிக்காத எந்த விடயத்தைப் பற்றியும் சிந்திக்கும் உணர்வு ஆரம்பம் முதலே இல்லாமல் இருந்தது கூட மனித பூசல்களுக்கு காரணமாக இருக்கலாம். தொடக்கம் சரியாக அமையாத போது முடிவை நல்ல விதமாக எதிர்பார்க்க முடியாது தானே'' என்றதும் மற்றையது ''மனிதர்களின் எதிர்பார்ப்புகள்தான் என்ன...? அல்லது அவர்கள் எட்டத் துடிக்கும் தூரம்தான் என்ன....? என்பதுதான் இது வரைக்குமே புரியவில்லை. சுயாதீனமாய் சுற்றித் திரியும் நம்மை பார்த்தேனும் திருந்த முயலாத ஜென்மங்களுக்கு எப்படித்தான் புரியவைப்பது'' என்று ஆதங்கப்படும் துணைக்கு ஆறுதல் மொழிவதாய் ''உயிர்கள் மலினப்பட்டுப் போன யுத்த தேசத்தில் இருந்து பூக்கும் மலர்களும் கூட பிணவாடை தரிக்கும் கொடுமை இன்னும் எத்தனை காலங்களுக்கு தொடரப் போகிறதோ'' எனத் தொடர்ந்து செல்லும் யாத்திரையில் மௌனியாகி சிறகுகளின் கதகதப்பில் குளிர் காய்ந்தபடி நீண்ட வெளியின் தூரதரிசனத்தோடு பயணிக்கிறான் சிவராம்.

ஒன்றின் மீதான அவதானம் கூர்மையடையும் போது நம்மை அறி யாமலே அது குறித்த அசைவுகளை உற்று நோக்க ஆரம்பிக்கிறோம். அப்படித் தான் சிவராமும் சாதாரணமாக தொடங்கப்பட்ட காக்கைகள் மீதான அவதானம் இப்போது தீவிரப் போக்கு காட்டியிருப்பது உண்மை. எல்லாவற்றிற்கும் நாட்டின் நடைமுறைக் கோணல்கள்தான் காரணம் என்பதை உணராமல் இல்லை. இவற்றிற்கெல்லாம் நமது பங்களிப்பு என்னவென்று சிந்திக்கும் போதுதான் மனம் இரணப்பட்டுக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை எல்லாவற்றையும் விட இந்தக் கொடுமைகளின் மூலங்களோடு தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற வேதனை வேறு அவனை அல்லல் படுத்தியது. நீளும் பயணத்தின் எதிர்பார்ப்பினை அவனால் யூகிக்க முடிய வில்லை. ஆனால் முடிவு ஒரு பாடத்தைக் கற்றுத் தரும் என்பதில் உறுதியாய் இருந்தான் சிவராம்.

அண்டத்தின் நிசப்தத்தில் மனசின் ரணங்கள் கலைந்து தொடரும் யாத்திரையில் அலறித் துடித்து தஞ்சம் தேடித் திரியும் காக்கைகளின் பரபரப்புகள் பல்வேறு குழப்பங்களை பதியமிட திக்குத் தெரியாமல் எல்லாப் பக்கங்களில் இருந்தும் எழுப்பப்படும் மரண ஓலம் உண்மையை உணர்த்திப் போனது. ஆமாம் மனித மலினங்களை குறி வைத்து எங்கோ ஒரு வெடிப்பு நிகழ்ந்திருக்கிறது என்ற கசப்பான உண்மை தொடரும் நிழலாய் இன்னுமே மாறாத படிக்கு இருப்பது புரிந்து போனது. மனிதங்களைக் காவு கொள்ளும் அதே மரண ஒலி செவிகளை செவிடாக்கி நிசப்தம் காணவும் அண்டம் அதிர்ந்து நிசப்திக்கவும் குறியீடு விளங்கி மனசு வலிக்கிறது சிவராமிற்கு.

கரைந்து கரைந்து சுற்றங்களைத் தேடித்திரியும் காகங்களின் ஆர்ப்பரிப்புகளுக்கு மத்தியில் அண்டம் புகை முட்டி நிறம் பூத்துக் கிடந்தது. சல்லாபித்துக் கிடந்த சில ஜோடிகள் இரை தேடித் திரிந்த பல தாய்ப் பறவைகள் உழைக்கப் பிறந்த சில காக்கைகள் என்று எல்லாம் சென்னி சிதறுண்டு குருதியில் தோய்ந்து கிடக்க தன்சுற்றத்தின் இழப்புகளுக்காய் என்னைத் தனிமைப்படுத்தி விட்டு போன காக்கைகளின் நிலைக்காக மனசு வலிக்கிறது. பதற்றமும் பீதியும் எப்போதாவது நுகரப்படுமானால் இரத்த ஓட்டம் அதிகரித்து உடல் நிலையில் சடுதியாய் ஒரு மாற்றத்தை உணரலாம். எல்லாம் வழமையாகிப் போன நிலையில் அப்படியான சூழ்நிலையை எதிர்பார்க்க முடியாதுதானே. மீண்டும் ஆசுவாசப்பட்டுக் கொள்ளும் மனசுடன் எல்லாவற்றையும் அவதானிக்கத் தொடங்குகிறான் சிவராம்.

உண்மையை தரிசிப்பவன்தான் உன்னதமான படைப்புக்களை விளைவிக்கிறான் என்பது போல கவிஞன் மனசும் எதையாவது உள்ளுக்குள் இட்டு அசைப்பதும் கூட தவிர்க்கமுடியாமல்தான் போகிறது. எல்லாக் கொடுமைகளினதும் நுகர்வுக்குப் பின்னர் இப்போது ஞானம் பெற்ற திருப்தியுடன் சமூகத்தை எதிர் கொள்கிறான் சிவராம். விகாரப்பட்டுக் கிடக்கும் மனித நடத்தைகளில் மாற்றம் என்பது சாத்தியமில்லை. ஒன்றை வீழ்த்தி இன்னொன்று வாழத் துடிக்கும் கொடுமையான உலகமதில் வாழ்வதற்கு பிரத்தியேகமாய் பயிற்சி எடுக்க வேண்டிய தேவைப்பாட்டினை உணர்ந்த திருப்தியுடன் கனவில் இருந்து மீள்கிறான் சிவராம். அங்கேயும் மனசு காகங்களுக்காய் துயரத்தில் ஆழத்தான் செய்கிறது. மனித ஈனங்களில் உழன்று சதா நெருடலில் விழும் பரிதாபப்பட்ட பறவைகளுக்காய் மனம் வலிக்கத்தான் செய்கிறது.

மீண்டும் அதே காக்கைகளின் ஆர்ப்பரிப்புகள் தொடர்கின்றன. அங்கே "பாழாப் போன இந்த சனியனுங்க ஏன்தான் இப்பிடி கத்தி கரையிதுகளோ" என்று சலிப்புக் கொட்டும் தாயின் பிதற்றல் அவனுள் எரிச்சலை மூட்ட மீண்டும் போர்வைக்குள் ஒளிந்து மௌனியாகி சிந்தனைக்குள் தொலைகிறான் சிவராம். அந்த சிந்தனை ஏனையோரில் இருந்து அவனை வேறுபடுத்திக் கூட காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியும்

## ஆ. புனிதகலா

(பரிசுச் சான்றிதழ் பெறும் சிறுகதை)



*மலையகத்தில் வட்டவளையைச் சேர்ந்த செல்வி. ஆ. புனிதகலா 1975ல் பிறந்தவர். ஆசியர் தொழில் புரியும் இவர் ஒரு கலைப் பட்டதாரி. சிறுகதை, கவிதை ஆகியதுறைகளில் எழுதிவருகிறார். விபவி - 2003 சிறுகதைப் போட்டியில் பாராட்டு, தினகரன் முத்திரைக்கதை 2004, ஞானம் கலாபூஷணம் புலோலியூர். க. சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2005ல் பாராட்டு ஆகியவற்றைப் பெற்றுள்ளார்.*

*முகவரி :- இல. 11 ஞானானந்தகம, வட்டவளை*

அதிகாலை நான்கு மணியிருக்கும். மத்திய மலை நாட்டின் பிரதான நகரொன்றிலிருந்து தலைநகர் நோக்கிச் செல்லும் பஸ்ஸிற்காக அந்தச் சிறிய கடை வீதியின் பஸ் தரிப்பி நிலையத்தில் காத்திருந்தேன். சற்றைக் கெல்லாம் நிரம்பி வழிந்தபடி வந்த அந்த வண்டி நிறுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு பொடிப்பொடி ஆகியது. வேகம் குறைந்து நிற்காமலே நகர்ந்து கொண்டிருந்தது. இளைஞர்கள் பலர் தாவி ஏறினர். நான்?.... "விட்டுவிடுவோமா?" என்ற நினைப்பு பூர்த்தியாகாமல் பொசுங்கிப் போனது. தாமதமாவதின் விளைவுகள் விசாரணை, சம்பளக்குறைப்பு என மின்னல்களாய் மூளைக்குள் மின்னி மறைந்தன. ஒரு செக்கன்தான் கணத்தாக்கம் என்னையும் தாவி ஏறச் செய்தது.

இதயம் ஒரு நொடி நின்று பின் வேகமாகத் துடித்தது. பிடிமானம் இல்லாமல் தடுமாறிய என் கரத்தை இன்னொரு வலிமையான கை அழுத்திப் பிடித்திருந்தது. மிதிபலகையின் கடைசிப் படியிலிருந்து சிரமப்பட்டு அண்ணாந்து பார்த்தேன். நடத்துநர்தான் பிடித்திருந்தான். நான் நிற்கும் படியிலே கூட இரண்டு மூன்று இளைஞர்கள் தொற்றிக் கொண்டுதான் வந்தார்கள். மேலே ஏறுவதைப் பற்றி இப்போதைக்கு நினைக்க முடியாது. இப்படியே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருந்தேன். முப்பது கிலோ மீற்றர் கடந்த பின் ஒரு சிறிய டவுண் வந்தது. பத்துப் பதினைந்து பேர் இறங்கினார்கள். கொஞ்சம் ஆசுவாசப்பட்டுக் கொண்டு "படிப்படியாக" மேலேறினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிமானத்திற்கொரு ஆசனத்துக் கம்பி கிடைத்தது. இப்போதுதான் டிக்கட் எடுக்கக் கிடைத்தது.

அழையா விருந்தாளிகளாய்க் காட்சிகள் விழிகளுக்குள் பிரவேசித்தன. நின்றும் அமர்ந்தும் தூங்கி வழியும் சனக்காடு. எல்லாரும் உழைப்பளிகள். இவ்வளவு நெரிசலாக பயணித்துக் கொண்டு. ..... ஆச்சரியம் காமசேஷ்டைகள் இல்லாமலிருந்ததுதான். இயந்திர இரைச்சலும் உதடுகளின் நிசப்தமும் சுமந்து பயணம் தொடர்ந்தது. இரவு உருகி விடியலுக்குக் கட்டியம் கூறத் தொடங்கியிருந்தது. பார்க்கவோ இரசிக்கவோ விழிகளில்லை. அதற்காக இயற்கை அழவுமில்லை. பொழுது விடிந்து கொண்டுதானிருந்தது.

என் இடம் வர வண்டியிலிருந்து தள்ளப்பட்டேன். விரையும் வண்டியைப் பெருமூச்சுடன் நோக்கி மெல்லச் சுதாகரித்து நிதர்சனத்துக்கு மீண்டேன். நான்கு மணிநேரம் நிலையாக நின்றதால் கால்கள் வீங்கியிருந்தன. உடம்பு பூராவும் வலித்தது. கலைந்து பறந்த தலை கேசம் வருடிய நான் அதிர்ந்தேன். ஸ்லைட் காணாமல் போயிருந்தது. இந்த மாதமும் இருபது இருபத்தைந்து ரூபாய் அநாவசியச் செலவு.

கண்களுக்குள் மணலை அள்ளிப் போட்டது போலிருந்தது. நேற்றைக்கு முன் தினம் ‘டே அன்ட் நைட்’ வேலை. நேற்றுக் காலைதான் வேலை முடிந்தது. ஓய்வுக்காக தரப்பட்ட நேரத்தை இன்டர்வியூவுக்குப் பயன்படுத்திக் கொண்டேன். ஓடும் பஸ்ஸில் நழுவும் இருக்கையில் கொள்ளும் உறக்கம் இரண்டு நாளைய நித்திரைத் தியாகத்தையும் உழைப்பின் களைப்பையும் போக்குமா என்ன? ஒரு கனவைப் போல இன்டர்வியூவும் நடந்து முடிந்தது. எதிர்பாராத விதமாக என் பால்ய சிநேகிதியின் சந்திப்பு கிடைத்தமை சற்று ஆறுதலாகவும் மாறுதலாகவும் அமைந்தது. நீண்ட நாளைய பிரிவின் தாற்பரியம் இருவரையும் எங்கள் வீடு நோக்கி நகர்த்தியது.

நேற்றைய இரவும் முன்னைய மூன்று நாட்களைப் போலவே உறக்கமின்றிக் கழிந்தது. எனினும் இது பத்துவருடப் பிரிவின் ஒரு சில பகிர்வுகளைப் பதிவு செய்த சற்று மாறுதலான அனுபவமாக அமைந்தது. உணர்வுகளை மட்டுமல்ல ஓய்வையும் அடக்கியாளப் பழகிப் போன நான் அதிகாலை மூன்று மணிக்கே எழுந்து புறப்பட்டு நான்கு மணி பஸ்பிடித்து, எட்டு மணிக்கெல்லாம் இதோ... சாவி கொடுத்த பொம்மையாய்.. நிமிர்ந்து பார்க்கிறேன். அந்த பச்சைப் பெயின்ட் அடித்த ஆடைத் தொழிற்சாலை பிரம்மாண்டமாய் என்னை வரவேற்கிறது.

இன்றைக்கு சங்குதான். ஆழ்மனம் அலறியது. வரவைப் பதிவு செய்வதற்காக அட்டையைத் தேடினேன். வழமையான இடத்தில் அது இல்லை. அதில் தான் வரவு நேரத்தையும் மாலையில் செல்லும் நேரத்தையும் இயந்திரத்தினுள் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். ஏனையவர்கள் நேரம் பதியும் சப்தங்கள் சடார் சடார் என செவிகளைச் சாடின. அப்போது தான் என் ஞாபகப் பொறி மின்னியது, முறைப்படி பார்க்கப் போனல் நான் நேற்றிரவு வேலைக்கு வந்திருக்க வேண்டும் வராவிட்டால் “காட்” எடுக்கப்படுவது வழமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றுக்காலை விடுமுறை கொடுத்தது ஓய்வு எடுக்கத்தான். நான் போகவிருந்த நேர்முகப் பரீட்சைக்கு விடுமுறை கேட்க அவசியமே இல்லாமல் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்ந்ததை, அலைச்சலிலும் மனக்கசப்பிலும் இரவு வேலைக்கு வரவேண்டுமென்பதை மறந்ததை இவர்களுக்கு எப்படிப் புரியவைப்பது? எல்லாம் போச்சு. இந்த வேலையும் பறிபோய் விடுமோ என்ற அச்சம் உந்தித் தள்ள ஓடிச் சென்று கழிவறைக்கு அருகிலுள்ள ஓய்வறையில் எனது லொக்கர் திறந்து "சீருடை" என்ற பெயரில் அமைந்த ஏப்ரன், தொப்பி அணிந்து தொழிற்சாலை அடையாள அட்டையை உடையில் முன்புறமாகக் குத்திக் கொண்டேன்.

மூளை ஆணையிடாமலே உடல் முன்விரைந்தது. நுழைவாயிலில் மேற்பார்வையாளர்கள் நின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் "லைன்" சுப்பவைசர் சுதர்மாவும் நின்று கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் பார்த்தாளே ஒரு பார்வை, இடுப்பில் கை வைத்து அவள் நின்ற தோரணை! குட்டையாக வெட்டப்பட்டு சிலுப்பிக் கொண்டிருந்த கூந்தல், முட்டைக் கண்கள் எல்லாம் சேர்ந்து என்னை மேலும் பயமுறுத்தின. அவளின் காட்டுக் கத்தல் ஓயும் வரை அமைதியாகத் தலை குனிந்து நின்றேன். பேசி முடித்து என்னை மனேஜரிடம் துரத்தினாள். அங்கும் அர்ச்சனைதான். ஒப்பீட்டளவில் சுப்பவைசரை விட மனேஜர் பரவாயில்லை.

மனேஜர் மீதிருந்த அபிப்பிராயம் சில நொடிகளில் தகர்ந்தது. சொல்லாமல் லீவு எடுத்தமைக்காக அவன் கொடுத்த தண்டனை கேட்டு ஆடிப் போனேன். என்னை வேலையிலிருந்து விலகிக் கொள்ளும்படி கட்டளையிட்டான். தயங்கி நின்ற நான் ஏதாவது கூறிச் சமாளிக்க எத்தனித்த போது எனது வரவுப் பதிவு அட்டை வீசியெறியப்பட்டது. மனேஜர் வெளியேறி விட்டான்.

தொழிற்சாலையின் மத்தியில் சற்று உயரமாக மேடை போன்றும் சுற்றிவர கண்ணாடித் தடுப்புகளாலும் அமைக்கப்பட்டுள்ள மனேஜரின் அறைக்குள்ளிருந்து உற்பத்திப் பகுதி முழுவதையுமே நோட்டமிடலாம். முன்புறமாக விரிந்து கிடந்த அந்த மண்டபத்தின் இறுதியில் நீண்ட மேசைகளில் துணிகள் விரித்து அடுக்கிக் கிடந்தன. ஆண்களும் பெண்களும் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். இதுதான் தைப்பதற்காக ஆடைகள் வெட்டப்படும் பகுதி. அதனை அடுத்த பரப்பில் வரிக்கு ஏறத்தாழ எழுபத்தைந்து தையல் இயந்திரங்கள் போடப்பட்டு ஐந்து வரிசைகள் காணப்பட்டன. இவ்வரிசைகளுக்கு ஆங்கில அகர வரிசையில் பெயர்களும் வைக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வரிசைக்கும் தனித்தனி மேற்பார்வையாளர் நியமிக்கப் பட்டிருந்தனர். தொழிற்சாலையின் உற்பத்தி மையமாக இப்பகுதியே கருதப்படும். ஏனைய பகுதிகள் அத்தியாவசியமானவையாக இருந்தாலும் இதற்குத் துணையாக அடுத்தபடியாகவே அமையும்.

மனேஜர் அறையின் பின்புறமாக ஃபைனல் செக்கிங் என்று ஒரு கண்ணாடித் தடுப்பறை காணப்பட்டது. தைக்கப்பட்டு முழுமையடைந்த ஆடைகள் இங்கு பரிசோதிக்கப்பட்டு தையல் தரம் நிர்ணயிக்கப்படும். அதன் பின் அதற்கு அடுத்த பொதி செய்யும் பிரிவிற்கு அனுப்பப்படும். அங்கு ஆடைகள் அழுத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியாக்கி, மடிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டு காட்போட் பெட்டிகளில் அடைக்கப்படும். பின் இப்பகுதியின் பெரிய வாசல் திறக்கப்படும். அங்கு தயாராக நிற்கும் லொறிகளில் ஆடைப் பொதிகள் ஏற்றப்பட்டு வெளிநாட்டு ஏற்றுமதிக்காக விமான நிலையம் அனுப்பப்படும்.

இவை தவிர தொழிற்சாலைக்குள் களஞ்சிய அறை, சாம்பிள் ரூம், உயரதிகாரிகளுக்கான ஓய்வறை போன்றனவும் காணப்படுகின்றன. தொழிலாளர் களுக்கான உணவகம், முதலுதவி அறை, கழிப்பறை, ஓய்வறை எல்லாம் வெளியே தொழிற்சாலை வளவுக்குள் அமைந்திருக்கின்றன.

ஐநூறுக்கும் அதிகமான மனித உருவங்கள் என் விழிகளின் முன்னால் விரிந்து கிடந்தாலும் தனிமைப்பட்டு விட்டதாக உணர்ந்தேன். என்னைப் போல் இங்கு நின்ற பல யுவதியர் நேற்று வேலைக்கு வராமைக்கு ஏதேதோ காரணங்கள் கூறித் தப்பித்து கடமைக்குத் திரும்பி விட்டார்கள். என்னைத் தான் மனேஜர் பேசவே விடவில்லையே! எல்லாம் நேரம்தான். என்ன செய்வதென்றே புரியவில்லை. ஆனால் ஏதாவது செய்தாக வேண்டுமே!

அந்தத் தொழிற்சாலைக்குள் நூறு மீற்றர் தூரம் ஓடி நடந்து மாடிப் படி ஏறி காரியாலயம் அடைந்தேன். ஏ. சி. ரூமுக்குள் சுழல் நாற்காலிகளில் எழுதுவினைஞர் படை ஒன்று அமர்ந்திருந்தது. பிரதம லிகிதரின் மேசை முன் நின்றேன். கையிலிருந்த வரவுப் பதிவு அட்டை என் நிலையை பறைசாற்றியிருக்க வேண்டும். அலட்சியமாக நிமிர்ந்தான். தூக்கிச் சாய்த்த அந்தக் கிழட்டு முகத்தில் பூனைக் கண்கள் என்னை மேலிருந்து கீழாக இழிவுப் பார்வை வீசின. நிச்சயமாய் அந்தப் பார்வையில் காமமும் கலந்தே இருந்தது. அவன் நாக்கை மடித்து உதடு கடித்து வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தான். பின் அவன் பங்குக்குக் கத்தத் தொடங்கினான்.

"இது என்ன கொழுந்து மலைனு நெனைச்சதா? இங்க நீ நெனைச்ச மாதிரி நடக்க ஏலாது. வீட்டுக்குப் போ. நீ ஒரு ஆள் விலகினா வேலைக்கு சேர பத்துப் பிள்ளைகள் இருக்கு.."

தமிழர்கள் என்றாலே தேயிலை பறிப்பவர்கள் என்பது அவன் எண்ணம். சுயவிருப்பத்தின் பேரில் வேலையை விட்டு விலகுவதாக இராஜினாமாக் கடிதம் எழுதச் சொன்னான். அவர்களாக விலக்கினாலும் சுய விருப்பத்தில் விலகுவதாகத்தான் நாங்கள் எழுத வேண்டும். எனக்குள் பல எரிமலைகள் குமுறினாலும் கண்ணீரருவி தான் வழிந்தது. என் குடும்பத்தின் பொருளாதாரப் பலவீனமானது தன்மானம், கோபம் எல்லாவற்றையும் மிதித்துக் கொண்டு தலைமேல் ஏறி நின்றது.

இடைவேளைக்கான மணி ஒலித்தது. எல்லோரும் எழுந்து தேநீர் அருந்தச் சென்றார்கள். பசி வயிற்றைக் கிள்ளியது. கணனியில் வேலை செய்து கொண்டிருந்த அந்தப் பெண் கடைசியாக எழுந்தாள். அனுதாபம் சுரந்ததோ என்னவோ! அருகில் வந்தாள். கனிவு கலந்த அவளின் வினாக்களுக்கு உடைந்து உடைந்து பதிலளித்தேன்.

என் குடும்ப கஸ்டங்களையும் பொறுப்புக்களையும் கேட்டறிந்தாள். சொல்லாமல் லீவு எடுத்தமைக்கு அன்பாகக் கடிந்தாள். "இப்பதான் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலயும் காமன்ட்ஸ் இருக்கே. இவ்வளவு பிரச்சினை இருக்கிற நீர் ஊரிலயே ஒரு வேலை தேடிக் கொள்வதுதான் சரி. நான் மனேஜருடன் கதைக்கிறன்''

நான் தலையாட்டினேன். ஊரிலுள்ள காமன்ட்ஸில் கிளார்க்காக வேலை செய்து சம்பளம் போதாமல்தான் இங்கு வந்திருக்கிறேன் என்பதை இவளிடம் எப்படிச் சொல்லமுடியும்? இன்டர்கம்மில் மனேஜருடன் தொடர்பு கொண்டாள். விளைவு, ஒரு மன்னிப்புக் கடிதத்துடன் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள மனேஜர் சம்மதித்தான்.

நேரத்தை வீணடிக்காது மன்னிப்புக் கடிதமெழுதி மனேஜரிடம் நீட்டியபொழுது, சற்றே ஆச்சரியமாகப் பார்த்தான். இலக்கணப் பிழைகளின்றி நேர்த்தியாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த, நான்கே வரியுள்ள அக்கடிதத்தை பதினைந்து நிமிடங்களில் சிரமப்பட்டு வாசித்து முடித்தான். இனிமேல் சொல்லிவிட்டு லீவு எடுக்க வேண்டுமெனக் கூறி வேலைக்கு அனுமதித்தான். நான் வரவைப் பதிவு செய்தபோது நேரம் பன்னிரண்டு முப்பது.

லைனுக்குள் பிரவேசித்த என்னைப் பார்த்து லீடர் பொரிந்து தள்ளியவற்றைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வேகமாகச் சென்று இரண்டிரண்டு மெஷின்களாகக் கடந்து என் மெஷினருகில் நின்றேன். களைத்துச் சோர்ந்து பயந்த முகத்துடன் என் உதவியாளர் தைத்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் எழுந்து, இதுவரை அவள் தைத்துப் போட்டவற்றை எடுத்து சரிபார்த்து நூல் வெட்டி முன் மெஷினுக்கு அனுப்பத் தொடங்கினாள்.

தைக்க வேண்டிய துணிமலை என்னை மலைக்கச் செய்தது. பதகளிப்பில் ஆடிப்போயிருந்த குருதி நாளங்கள் விறைத்து முறுக்கேறின. கை, கால், கண், மூளை என சகல உறுப்புகளும் தையலில் கவனம் செலுத்த சுறுசுறுப்படைந்தேன். தையல் இயந்திரங்களினதும் அதிகாரக் குரல்களினதும் இடைவிடாத பேரிரைச்சலில் என் இதய ஒலிகள் தேய்ந்து ஓய்ந்தன. உறங்கிக் கிடந்த நேர்முகப் பரீட்சைக் காட்சி எழுந்து நின்று மனத்திரையில் நர்த்தனம் ஆடியது.

முதலில் உயரம் பார்த்தார்கள். நான்கடிக்கு மேல் இருக்க வேண்டுமாம். நான் ஐந்தடி இரண்டங்குலம் இருந்தேன். நிறை ஐம்பத்திரண்டு கிலோ எனத் தராசு காட்டியது. இந்த இரண்டும் ஓகே ஆனதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. ஏனெனில் அந்தக் கணம் வரை நிறையும் உயரமும் தாதிச் சேவைக்குத் தகுதிகளாகக் கருதப்படும் என்பதை அறியாதிருந்தேன். அடுத்து உள்ளே அனுப்பப்பட்டேன். ஒருவர் தமிழரும் பெரும்பான்மை இனத்தவர் இருவருமாக மூன்று பெண்மணிகள் அமர்ந்திருந்தார்கள். கூடவே ஒரு ஆண் அதிகாரியும் இருந்தார். கேட்குமுன்பே கோவையைச் சமர்ப்பித்த என்னைச் சைகையாலேயே அமரச் சொன்னார்கள்.

எனது ஆவணங்களைச் சரிபார்க்கத் தொடங்கி இருந்தார்கள். கல்வித் தகைமை எனக்குள் சிறு நம்பிக்கையை உருவாக்கி இருந்தது. க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம் படித்து பல்கலைக்கழக அனுமதி பெறாவிட்டாலும் சித்தியடைந்திருந்தேன். தாள்களைப் புரட்டிக் கொண்டிருந்த பெண்ணின் பார்வை என்மீது வினாவாய் விரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிட்டிசன் இருக்கா?"

"இல்லை...." தடுமாறினேன்.

"அப்ளிக்கேஷன்ல இந்திய வம்சாவழின்னு போட்டிருக்கு"

"..........."

"வோட் இருக்கா?"

"ஆமாம் வோட் லிஸ்ட் கொப்பி வச்சிருக்கேன்...."

"சிட்டிசன் இல்லாம வேலை தர முடியாது"

என் முகம் சுருங்கியதை அவதானித்த மற்றப் பெண்

"நீங்க போய் இன்னும் மூன்று நாளைக்குள்ள....." அவள் முடிக்கு முன்பே ஆணதிகாரி குறுக்கிட்டு,

"வேண்டாம், ஒரு கிழமைக்கு முன்பே கடிதம் அனுப்பியும்... இனி ஒன்றும் செய்ய முடியாது"

கோவையுடன் வெளியேறினேன்.

இப்படித்தான் ஆசிரியர், எழுது வினைஞர் எனப்பல நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றி ஏதோ காரணங்களுக்காக தோற்றுப் போவேன். இது வழமைதான் என்றாலும் இந்த முறை அவர்கள் நேரடியாகவே என்னைத் தெரிவு செய்ய முடியாதெனக் கூறியது வேதனை தந்தது.

"இந்திய வம்சாவழி" என விண்ணப்பித்தால் வேலை கிடைக்கும் எனக்கூறியது அயலவர் குற்றமா? அல்லது பிரஜாவுரிமை பற்றியே சிந்திக்காது இறந்து போனது என் தந்தையின் குற்றமா? நிகழ்காலத்திலேயே குடும்பப் பொறுப்பற்றிருந்த அவர் எங்களது எதிர்காலம் பற்றிச் சிந்திக்காமலிருந்தது ஆச்சரியமல்லவே! யாரையும் நொந்து கொள்ள விரும்பாத மனம் இறுதியல் விதியிடம் தஞ்சம் கோரியது.

இயந்திரங்களோடு இயந்திரமாக உழைத்து வெளியேறிய போது இரவு எட்டுமணியாகியிருந்தது. அதன் பின்னர் பஸ் ஏறி அரைமணிநேரம் பயணித்து தங்கியிருந்த வீட்டை அடைந்தேன். இரவு உணவைக் கண்டபோது பசி அடங்கிப் போயிருந்தது. படுக்கையில் சாய்ந்தபோது உறக்கமும் என்னுடன் போராடியது. அவமானங்களும் ஏமாற்றங்களும் என் தன்மானத்தைக் கிளறிக் கொண்டிருந்தன. 'அறிவா? உணர்வா? என்ற போட்டி வரும்போது உணர்வுக்கே முக்கியத்துவமளிக்க வேண்டும்' யாரோ கூறியிருந்தது ஞாபகத்தில் உதித்தது. எழுந்திருந்து இராஜினாமாக் கடிதம் எழுதத் தொடங்கினேன்.

வழமையாக நான் எவ்வளவு தான் சுதாகரிக்க முயன்றாலும் ஏதோ ஒரு துயரம் கீழே இழுக்கும். இன்றென்னவோ நான் வேதனைக்குள் விழுந்து கொண்டிருந்தாலும் ஏதோ ஒரு நிம்மதி மேலே மேலே காவியிழுக்கிறது. என் வேதனைகளும் சோதனைகளும் கண்ணருகிலிருந்து மெல்ல மெல்லப் பின்வாங்கி தொலைவாகிப் புள்ளியாய்த் தேய நட்சத்திரப் புள்ளியொன்று விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியது. எப்படியும் விடிந்துதானே யாகவேண்டும்.

* * * * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கார்த்திகா
பாலசுந்தரம்


ஓ. கே. குணநாதன்


என். ஏ. தீரன்
(ஆர். எம். நௌஷாத்)


நவஜோதி
ஜோகரட்னம்


புலோலியூர்
செ. கந்தசாமி


கே. எஸ். சுதாகர்


பிரமிளா
செல்வராஜா


ம. பா. மகாலிங்கம்


பொன். சுகந்தன்


தர்மராஜா அஜந்தகுமார்


சிவனு மனோகரன்


ஆ. புனிதகலா

ISBN 955-8354-13-9

Printed by Unie Arts (Pvt) Ltd., No. 48 B, Bloemendhal Road, Colombo - 13, Sri Lanka Tel : +94 11 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org